# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 20 வியாழக்கிழமை (05.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 252


# செட்டிகுளம் முகாமில் 50,000 தமிழர்

# நீதிவிசாரணை எதுவுமின்றித் தடுத்துவைப்பு

## நாடாளுமன்றில் கூட்டமைப்பின் சுமந்திரன் புட்டுக்காட்டினார்



கொழும்பு,ஓகஸ்ட் 5

செட்டிகுளம் தடுப்பு முகாமில், காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமல், சுமார் 50,000 தமிழ்மக்கள், ஒரு வருட காலத்திற்கும் மேலதிகமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு நீதிபதிகளின் எண்ணிக்கை குறைவு, பற்றாக்குறை காரணம் என்று கூறமுடியாது.

நீதிமன்றங்களால் தமக்கு நீதி கிடைக்கவில்லை என்று மக்கள் நினைத்தால், அதில் பங்குதாரர்களாக அரசு மட்டுமன்றி நீதிபதிகளும் மாறவேண்டி வரும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நீதித்துறை திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா தடுப்பு முகாம்களில் உள்ள மக்களுக்கு நீதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தடுப்புக் காவல் உத்தரவு மற்றும் சிறை வைப்பதற்கான காரணங்கள் எவையுமின்றி 50 ஆயிரம் மக்கள் செட்டிகுளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி ஊழியர்கள் இன்று போராட்டம்

கொழும்பு,ஓக.5

அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடாவடித்தனத்தைக் கண்டித்து நாடு முழுவதுமுள்ள பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் ஆகியவற்றுக்கு முன்னால் இன்று சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் இணைந்து கொள்ளுமாறு அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் உப செயலாளர் ஐ.ஏ.ஜி.வஹாப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கையினை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து சமுர்த்தி (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி முதல் தடவையாக நீதிமன்றில்

### விளக்க மறியலில் வைக்க உத்தரவு

கொழும்பு,ஓக.5

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்ட தமிழினியை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு மே மாதம் இராணுவத்தினரிடம் சரணடைந்த அவர் இதுவரை காலமும் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று முதற் தடவையாக கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கொண்டு வந்தனர்.

இவரிடம் புலிகள் தொடர்பாகப் பல்வேறு விடயங்கள் குறித்து விசாரணைகள் தொடர்வதால் இவரை விளக்கமறியலில் வைக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்தனர்.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டார்.

யுத்தத்தின் இறுதி நாள்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழினியை பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் உத்தரவின்பேரில் இதுவரை காலமும் பொலிஸார் தடுத்து வைத்திருந்தனர். அந்தத் தடுப்புக் காவல் உத்தரவுக் காலம் முடிவடைந்தமையை அடுத்தே அவர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (அ-சி)

## சமுர்த்தி அதிகாரியைத் தாம் மரத்தில் கட்டி வைக்கவில்லை என்கிறார் மேர்வின்

கொழும்பு,ஓக.5

களனியில் சமுர்த்தி அதிகாரியை தான் மரத்தில் கட்டிவைக்கவில்லை என்றும், அந்த அதிகாரி தன்னைத்தானே கட்டிக் கொண்டார் என்றும் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நீதித்துறைத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பாம்பினால் கடிபட்டவரே சும்மா இருக்கும்போது சில கூத்தாடிகள் களனிச் சம்பவம் தொடர்பில் இங்கு கூத்தாடுகின்றனர்.

குறித்த சமுர்த்தி அதிகாரி டெங்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீளக்குடியமர்ந்த புதுமுறிப்பில் பாடசாலை மிதிவெடி அபாயப் பிரதேசம்!

### கல்விச் செயற்பாடுகள் நேற்றுடன் இடைநிறுத்தம்

கிளிநொச்சி,ஓக.5

கிளிநொச்சி புதுமுறிப்பில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் மிதிவெடி அபாயப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டதால் நேற்றுமுதல் இப்பாடசாலையின் கல்விச்செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது :-

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த வேளையில் முற்பகல் 11 மணியளவில் அதிபர் அலுவலகத்தின் முன்னால் நிலத்தில் மறைந்திருந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## 200 இலங்கையருடன் வட அமெரிக்காவை நெருங்குகிறது கப்பல்

கொழும்பு,ஓக.5

இலங்கையர்கள் 200 பேரை ஏற்றிச் செல்வதாகக் கூறப்படும் 'எம்.வீ.சன்.சீ' கப்பல் தற்போது பசுபிக் சமுத்திரத்தில் வட அமெரிக்காவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் இந்தக் கப்பலின் நகர்வை அவதானித்து வருகின்றனர் என அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பேச்சாளர் மெத்தியு சான்ட்ளர் தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-கொழும்பு தனியார் போக்குவரத்துச் சேவை:

## அனுமதி வழங்கப்பட்ட பஸ்கள் 16; ஆனால் 70 பஸ்கள் ஓடுகின்றன!

### லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறையீடு

கொழும்பு,ஓக.5

யாழ்.-கொழும்பு போக்குவரத்து மார்க்கத்தில் அதிக எண்ணிக்கையான பஸ்கள் சேவையிலீடுபடுவது எவ்வாறு என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கை தனியார் சிற்றூர்திச் சங்கத்தலைவர் கெமுனு விஜயரத்தின லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளார்.

ஏ-9 வீதி மீளத்திறக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்தை மேற்கொள்வதற்காக 16 பஸ்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது யாழ் - கொழும்பு சேவையில் 70 பஸ்கள் வரை போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் அதிக எண்ணிக்கையிலான பஸ்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## போரின் பின்னர் கைதான 8,000 புலிகள் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைப்பு

### நாடாளுமன்றில் அமைச்சர் டியு தகவல்

கொழும்பு,ஓக.5

யுத்தத்தின் பின் 8 ஆயிரத்து 780 புலிச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் 706 பேர் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் டியூ குணசேகர நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

மீதி 8 ஆயிரத்து 74 பேர் 12 புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு புனர் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அவரசகாலச் சட்டத்தை நீக்கவேண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது சர்வதேச மன்னிப்புச்சபை

கொழும்பு,ஓக.5

இலங்கையில் அவசரகாலச் சட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேல் கடந்துள்ள போதிலும் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகிறது. இது இலங்கை தொடர்பாக பிழையான செய்தியை உணர்த்தக் கூடும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செய்திச் சேவையான 'ஐ.ஆர்.ஐ.என்.' சேவைக்கு சர்வதேச மன்னிப்புச் (24ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டி வைத்த விவகாரம்;

# பிரதி அமைச்சர் மேர்வினுக்கு எதிராக சட்ட நடவடிக்கை கோருகிறார் ரணில்

கொழும்பு, ஓக. 05

சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டிவைத்த அமைச்சருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நீதித்துறை திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மேல் நீதிமன்ற நீதிபதிகளை அதிகரிப்பது பற்றி அரசு பேசுகிறது. ஆனால், அரசு சட்டத்தின் பிரகாரம் செயற்படுகிறதா என்று கேட்கவேண்டியுள்ளது. ஏனென்றால், டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் கலந்துகொள்ளவில்லை என்பதற்காக சமுர்த்தி அதிகாரி ஒருவர் அமைச்சரால் மரத்தில் கட்டிவைக்கப்பட்டார். தனது குழந்தை சுகவீனமுற்று இருந்ததாலேயே தன்னால் நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லை என்று அந்த அதிகாரி கூறியிருந்தார்.

அவர் கலந்துகொள்ளாவிட்டால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உள்ளது. காட்டுச் சட்டத்தை நடைமுறைப் படுத்தினால் இந்த நாட்டில் நீதிமன்றங்கள் எதற்கு?

சமுர்த்தி அதிகாரி மரத்தில் கட்டிவைக்கப்பட்ட செய்தி இந்த உலகம் முழுவதும் சென்றுள்ளது. இதனால், இந்நாட்டுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. இதுதான் அரசு ஊழியர்களைப் பாதுகாக்கும் விதமா?

இந்தச்சம்பவத்தைப் பொலிஸார் தொலைக்காட்சிச் செய்திகள் மூலம் பார்த்துள்ளனர். ஆனால், இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். இந்த அதிகாரியைக் கட்டிவைத்த அமைச் சருக்கு எதிராக அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டிவைத்தது சரியா அல்லது பிழையா என்று பிரதமர் அல்லது சமுர்த்தி அமைச்சர் இந்தச் சபைக்குக் கூறவேண்டும் - என்றார் ரணில். (ஒ-சி)


**JOB Guaranteed "Certified Medical Assistant"**

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள். **[புதிய பிரிவு 12/09/2010].குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.**

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02) KU

கல்வித்தகமை: G.C.E O/L நான்கு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.



M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals
சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE® Malaysian Soft Skills and ICT Development Centre
Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

*Learn French the French Way French Classes*

"ALLIANCE FRANCAISE DE JAFFNA" பிரெஞ்சுத் தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வடக்கில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் French Embassy இன் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது.
மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எமது நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.


### குருத்துவ வெள்ளிவிழா (1985 - 2010)

**அருட்பணி யோ.அ.யேசுதாஸ் அடிகளார்**
அதிபர் யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

**காலம்: 2010.08.06 - 8.30 மணி - திருப்பலி**
(இளவாலை புனித அன்னாள் ஆலயம்)

**10 மணி - பாடசாலைக் கொடியேற்றல் (கல்லூரி வளாகம்)**

- தலைமையுரை
- வரவேற்புரை
- ஆசியுரைகள்
- மலர் வெளியீடு
- வாழ்த்துரைகள்
- வெள்ளிவிழா நாயகர் கௌரவிப்பு
- ஏற்புரை
- நன்றியுரை

**கல்லூரிச் சமூகம்,**
**புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.**

### வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை (2010.08.06) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் மக்கள் சபைச் செயலாளர் நியமனம் மற்றும் நுண்கலைத் துறை ஆசிரியர் நியமனம் வழங்கல் மற்றும் எதிர்காலத்தில் பட்டதாரிகள் சங்கத்தினூடாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியிருப்பதால் சகல வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(101514) **செயலாளர்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா பிறேமதாஸ்



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ், மைலனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பிறேமதாஸ் நேற்று (04.08.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிவப்பி தம்பதியரின் அன்பு மகனும் வசந்தாதேவியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 39, பல்கலைக்கழக வீதி,*
*திருநெல்வேலி.*
T.P.0779568252

தகவல்:
கே.கஜன் (பேறாமகன்).

### சிவனொளிபாத மலையில் தீயால் அழிந்தது காடு!

சிவனொளிபாதமலைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பெரும் தீயின் பரவல் காரணமாக நூறு ஏக்கருக்கும் அதிகமான காட்டுப் பகுதி அழிந்துள்ளது என்று வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'ரதனகொல்ல' என்னும் இடத்தில் ஆரம்பமான தீ தற்போது பலாங்கொடை வரை பரவியுள்ளது என்று பலாங்கொடைப் பிரிவு தீயணைப்பு அதிகாரி அஜித் ஜே.காயசிங்க தெரிவித்தார்.

இத்தீயைக் கட்டுப்படுவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வனப் பாதுகாப்புத் திணைக்களம் உதவி கோரியுள்ளது. (ஒ-சி)

### மணி விழா

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கத்தின் மணி விழா நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி விவேகானந்தர் மண்டபத்தில் அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'வன்னியமிர்தம்' மணி விழா நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நிகழ்த்துவார். (த-201)

### சந்திரோதய வித்தியாலய பரிசளிப்பு விழா

கோப்பாய், ஓக.5

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய வருடாந்த பரிசில் தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை முதல்வர் ஞா.அன்ரன் பிறேமதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் எஸ்.சித்திரவடிவேல், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவி திருமதி என்.நாகபூசணி நாகரத்தினம், ஓய்வுபெற்ற ஆசிரியையும் சமாதான நீதிவானுமான செல்வி சாரங்கபாணி சுசிலா ஆகியோர் கலந்துகொள்வர். (த-72)


**வீடு வாடகைக்கு**

வட்டுக்கோட்டையில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
**தொடர்பு: 0776118212**

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள ஜெனரேட்டர் (ஸ்ரார் J.K. 3), 250 ரியூப்பல்புக்கள், சகல வகையான வயர்கள் மற்றும் உபகரணங்கள், B.M.C. லொறி என்பன விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0779910154, 0777547063**

**வட்டுக்கோட்டை விவசாயிகளினால் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி**

இடம்: கொத்துத்துறை சவாரித்திடல்
[illegible]
[illegible]
வட்டுக்கோட்டை - விவசாயிகள்


### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் அங்கத்துவத்தை உறுதிப்படுத்தலுக்கும், விசேட பொதுச்சபை கூட்டத்திற்குமான அறிவித்தல்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தில் 1992.03.06 ஆம் ஆண்டிற்கு முன்பு அங்கத்துவ உரிமையைப் பெற்றுக்கொண்டவர்கள் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்தின் விளைவாக பங்குப் பணப்பெறுமதி 100 ரூபாவாக உயர்த்தப்பட்டதன் மூலம் முழுமையான அங்கத்துவ உரிமைக்காக மீதிப்பணத்தினை உடன் செலுத்தத் தவறியவர்களும், 2010.08.23 ஆம் திகதியிலிருந்து ஓர் ஆண்டிற்கு முன் பங்குப்பணத்தின் பகுதியை செலுத்தியவர்களும் மீதிப்பங்குப் பணத்தினை செலுத்தி (முழுப் பங்குப் பெறுமதி 100/=) அங்கத்துவ உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் மேற்படி சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டமானது புதிய நெறியாளர் குழுவொன்றை தெரிவுசெய்யும் நிகழ்ச்சி நிரலைக் கொண்டதாக எதிர்வரும் 2010.08.24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க மாநாட்டு மண்டபத்தில் கூட்டப்படும் (தனிப்பட்ட அழைப்பிதழ்கள் வழங்கப்படும்).

புதிய நெறியாளர்குழு தெரிவிற்காக 2010.08.06 ஆம் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டுள்ள மேற்படி சங்க அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் 2010.08.07 முதல் 2010.08.17 வரை மேற்படி சங்க காரியாலயத்தில் பார்வைக்காக வைக்கப்படும். இப் பட்டியலில் முழுமையான பங்குப்பணத்தினை செலுத்திய போதும் தங்களின் பெயர், பட்டியலில் இடம்பெறவில்லை எனின் எனதும் சங்க நிர்வாகத்தினதும் கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொ.மோகன்,
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
*இல. 857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
*2010.08.05* (சி/569680)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செபதேயு லூத்து புஸ்பம்



நவாலியைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் நோர்வேயை இருப்பிடமாகவும் கொண்ட திருமதி செபதேயு (மதியாபரணம்) லூத்து புஸ்பம் நோர்வேயில் நேற்று (04.08.2010) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபதேயு (மதியாபரணம்)வின் அன்பு மனைவியும் மேரி அனற் (மாலினி)இன் அன்புத் தாயும் சத்தியநாதன் இராஜேஸ்வரனின் அன்பு மாமியாரும் இராஜேஸ்வரன் நிக்கொலினின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற அருளம்மா மற்றும் சாந்தா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நோர்வேயில் 10.08.2010 செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.5, 3 ஆம் குறுக்குத்தெரு,*
*நாவாந்துறை.* (101536)

தகவல்:
ச.இராஜேஸ்வரன் (மருமகன்),
மாலினி (மகள்).

### வைரமுத்து கதிர்காமநாதன்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, வவுனியா, ஹற்றன், டிக்கோயா நகரசபைகள்)



அச்சுவேலி, வளலாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வருணனை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கதிர்காமநாதன் 03.08.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் நல்லதம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் காவேரி (Canada), கங்காதரன் (Canada), யமுனா (Canada), சேது, சிவகரன் (Canada), பவானி (Australia), திருவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும் வீரசிங்கம் (Canada), காந்தினி (Canada), கருணாநிதி (Canada), சிறீகாந்தன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், காரைநகர் பிரதேசசபை), வினோதினி (Canada), ஞானேந்திரன் (Australia), அன்ரன் கமிலஸ் (GIS Assistant, Hallo Trust) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற சன்னதிநாதன் மற்றும் சிதம்பரநாதன் (இந்தியா), கந்தசாமி (Rtd A.C.L.G.,வவுனியா, உதவிப் பணிப்பாளர் உள்ளூராட்சித் திணைக்களம்), இராஜேஸ்வரி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற முத்தம்மா மற்றும் சிவசோதி, சரோஜினிதேவி, தியாகராஜா (Canada), சற்குணராஜா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), வரதராஜா (இளைப்பாறிய தபால் அதிபர்), கந்தசாமி தவமணிதேவி, ஸ்ரீகனகசபேசன் மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் கஜன், தாரகா, தர்ஷன், மதுஷன், கிரிஷன், கௌசிகன், கௌதமன், ஹம்சிகா, துதீசன், கர்ணிகா, தரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.08.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குளப்புள்ளிவிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சன்னதி வீதி,*
*வருணன், அச்சுவேலி.* (101529)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அவசரகாலச் சட்டம்; தொடர்கதை தானா?

நாட்டில் 30 வருடங்களாக நடைபெற்ற போரை முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை இப்போதைய அரசுக்கே உரியது என்று மார் தட்டிப் பேசுகின்றனர் அந்தத் தரப்பினர். போர் இப்போது இல்லை என்பதால், பாதுகாப்பு என்ற பெயரில் அமைக்கப்பட்ட படை முகாம்களை அகற்றி, அவற்றால் மக்களுக்கு ஏற்பட்ட அச்சம், மற்றும் வசதியீனங்களை இல்லாமற் செய்வதுதான் நியாயம்.

ஆனால் வடக்கு, கிழக்கில் இப்போதும் படை முகாம்கள் திடீர்திடீரென முளைக்கின்றன. அதனால் மக்கள் அச்சம் அடைகின்றனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் முறையிட்டிருக்கிறார்.

கிழக்கில் திடீரென ஒலுவிலில் கடற்படை முகாமும் நல்லதண்ணியில் இராணுவ முகாமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கான காரணம் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. என்ன காரணமோ ஏது நடக்குமோ என்று மக்கள் அச்சப்படுகிறார்கள் என்பதனையும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அங்கு எடுத்துரைத்திருக்கிறார்.

இராணுவ முகாம்களாயினும் சரி, கடற்படை முகாம்களாயினும் சரி, விமானப்படை முகாம்களாயினும் சரி மக்களின் பாதுகாப்புக் கருதியே அமைக்கப்படுவதாக அரசாங்கம் எப்போதும் காரணம் சொல்வது வழக்கம். அதனால் படை முகாம்கள் அமைக்கப்பட்டதற்கான காரணத்தை மக்களுக்குச் சொல்ல வேண்டிய தேவை இல்லை என்று அரசு வழமைபோல் பதில் சொல்லும் என் பது நிச்சயம்.

போர் முடிந்தாலும், அமைதி நிலையை நாடு அடைந்து விட்டாலும், பாதுகாப்பைத் தளர்த்த முடியாது என்பது அரசாங்கத்தின் நிரந்தர நிலைப்பாடு. மாதாந்தம் நாடாளுமன்றத்தில் அரசு அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்கிறது. அதற்கான தேவை எத்தகையது என்பதனை அங்கு தெரிவிக்கவும் செய்கிறது. நாட்டில் பாதுகாப்பு அபாயம் உள்ளது என்பதற்கான காரணங்களை முன்நிறுத்தி, மாதாந்தம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசியவேளை பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்த தகவல்கள் அவசரகாலச் சட்டம் அவசியம்தான் என்பதனை ஏற்றுக்கொள்ளச் செய்யும் அளவுக்கு அமைந்துள்ளன.

தமிழீழம் அமைக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் மீள அணிசேர்ந்து, அதன் முன்னாள் உறுப்பினர்கள் ஈடுபட்டுவருவதாக அரசாங்கத்துக்கு தொடர்ந்து தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. கடந்த மாதத்தில் மட்டும் அகதி முகாம்களில் இருந்தும், அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழுமாக 1,562 விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் -

ஆகையால், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகும் - என்று பிரதமர் நாடாளுமன்றத்தில் விவரித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் தமது பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முயற்சி செய்கின்றனர். சர்வதேச விடுதலைப் புலிகள் அமைப்புடனும், தனி நபர்களுடனும் ஒன்றிணைந்து தமிழீழத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தெளிவாகப் புலப்படுகிறது -

இவ்வாறான நிலையில், பயங்கரவாதத்தை இந்த மண்ணில் இருந்து தோற்கடித்த நாம், அதன் மூலம் பெற்ற அமைதியைத் தக்க வைத்துக்கொள்ள அவசர காலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பது அவசியம் - என்று அவர் நியாயப்படுத்தியிருக்கிறார்.

**அவசரகாலச் சட்டத்தை மாதாந்தம் நீடிக்க அரசாங்கத்தின் இது போன்ற காரணங்கள் இனி வரும் நாள்களிலும் வந்து குவிந்து கொண்டே இருக்கும் - தொடர் கதையாகவே நீளும்.**

**அதனால் அவசரகாலச் சட்டமும் அதன் பாலான பயங்கரவாதத் தடைச் சட்டமும் இந்த நாட்டின் அரசாட்சியில் இருந்து அழிக்க முடியாதவையாகி விடும் என்பது மட்டும் நிச்சயம்.**

**அதன் விளைவாக, வடக்கு, கிழக்கில் எந்த வேளையிலும் (இப்போதுள்ளவையை விட) புதிது புதிதாக முகாம்களும், படைத் தளங்களும் திறக்கப்படும்.**

அது குறித்து -

ரவூப் ஹக்கீம் என்ன, யார் தட்டிக் கேட்டாலும் மக்களின் பாதுகாப்புக் கருதியும் அரசாங்கத்தின் பாதுகாப்புக் கருதியும் அரசு பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயங்களில் விட்டுக்கொடுக்க முடியாதே.....!

# வடக்கில் விசேட மானியத் திட்டத்தின் மூலம் தெங்குச் செய்கையை மேம்படுத்த வேண்டும்

## வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 5

வடமாகாணத்தில் விசேட மானியத் திட்டத்தின் மூலம் தெங்குச் செய்கையை மேம்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை தெங்கு உற்பத்தியாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே வடமாகாணத் தெங்குப் பயிர்ச்செய்கையாளர் சங்கம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்தக் கூட்டத்தில் பின்வரும் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதாக வடபிராந்திய முகாமையாளர் வ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் வருமாறு :-

* வடபகுதியில் மீளக்கையளிக்கப்படாத தென்னந் தோட்டங்களை மீளக்கையளிக்க துரித நடவடிக்கை எடுத்தல்.
* தென்னங்காணிகளில் உள்ள பாதுகாப்பு அரண்களை அகற்றுதல். வேலி அமைத்தல், காணிகளைத் துப்புரவு செய்தல், காடு அழித்தல் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
* தென்னந்தோட்டங்களில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுதல்.
* தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையால் மானியத்திட்டங்களை அமுல்படுத்தல்.
* தென்னங்காணிகளை சீர்படுத்துவதற்கான இயந்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

மேற்படி கோரிக்கைகள் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சங்கத்தலைவர் சு.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

அனைத்து இலங்கைத் தெங்கு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் அன்ரன் பெர்னாண்டோ தலைமையில் இந்தக் கூட்டம் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக பிரதமர் டி.எம்.ஜயரட்ண கலந்து கொண்டார்.

வடமாகாண தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் வ.மகாலிங்கம், வடமாகாண தெங்கு பயிர்ச்செய்கையாளர் சங்கத் தலைவர் சு.மோகனதாஸ் ஆகியோர் வடபகுதிப் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். (த-16-135)

# முல்லை., வவுனியா, பனங்காமம் பகுதிகளுக்கு பருத்தித்துறையிலிருந்து தனியார் பஸ்சேவை

வடமராட்சி, ஓக. 5

பருத்தித்துறையிலிருந்து வவுனியா, முல்லைத்தீவு, பனங்காமம் ஆகிய இடங்களுக்கு தனியார் பஸ் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

பருத்தித்துறை - வவுனியா பாதையில் இருவழியாக நான்கு சேவைகளும், பருத்தித்துறை - முல்லைத்தீவு, பருத்தித்துறை - பனங்காமம் ஆகிய பாதைகளில் தலா ஒரு பஸ் சேவையும் இடம்பெற்று வருகின்றன.

பருத்தித்துறையிலிருந்து வவுனியாவுக்கு காலை 5.15 மணி, 6.45 மணி, நண்பகல் 12.10 மணி, பிற்பகல் 2.15 மணிக்கும் வவுனியாவிலிருந்து பருத்தித்துறைக்கு காலை 6.30 மணி, 9.30 மணி, பிற்பகல் 1 மணி, 2 மணிக்கும், பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவுக்கு அதிகாலை 5.45 மணிக்கும், முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறைக்கு நண்பகல் 12.15 மணிக்கும், பருத்தித்துறையிலிருந்து பனங்காமத்துக்கு காலை 6.15 மணிக்கும், பனங்காமத்திலிருந்து பருத்தித்துறைக்கு நண்பகல் 12.15 மணிக்கும் இந்த பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

முல்லைத்தீவுக்கான பஸ் சேவை மாங்குளம், ஒட்டுசுட்டான் முள்ளியவளை ஊடாகவும், பனங்காமத்துக்கான பஸ் சேவை மாங்குளம், வவுனிக்குளம், மல்லாவி ஊடாகவும் சென்றுவருகின்றன.

வவுனியா, முல்லைத்தீவு, பனங்காமம் ஆகிய இடங்களுக்கு பருத்தித்துறையிலிருந்து பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வடமராட்சிப் பிரதேச மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். (த-236)

## மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

கைதடி, ஓக. 5

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டம் மற்றும் ஆண்களுக்கான மரதன் ஓட்டம் ஆகிய விளையாட்டுக்களை வடமாகாண ரீதியில் மேற்படி சனசமூக நிலையம் நடத்தவுள்ளது.

எனவே மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் தமது பெயர் விவரங்களை கைதடிச் சந்தியில் உள்ள தையல் நிலையத்தில் அல்லது 0779216870 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதியுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-201-288)

## பனை அபிவிருத்திச் சபையின் ஆண்டுவிழா சனியன்று

யாழ்ப்பாணம், ஓக. 5

பனை அபிவிருத்திச் சபையின் 32ஆவது ஆண்டுவிழாவும், சபையின் முதலாவது தலைவர் அமரர் கே.சி.நித்தியானந்தாவின் நினைவு தினமும் நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-26-14-135)

## முல்லைத்தீவுப் பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் மாற்றம்

முல்லைத்தீவு, ஓக. 5

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அமைக்கப்பட்ட பின்வரும் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, உடையார்கட்டு மகாவித்தியாலயம், விஸ்வமடு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் வவுனியா காமினி மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இரணைப்பாலை றோ.க.த.க. பாடசாலை, உடையார்கட்டு ம.வி., பாரதி வித்தியாலயம், விஸ்வமடு ம.வி. ஆகிய பாடசாலைகளின் மாணவர்களின் பரீட்சை நிலையங்களே மாற்றப்பட்டுள்ளதாகவும் ஏனைய பரீட்சை நிலையங்களில் குறிப்பிட்டபடி பரீட்சைகள் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார். (த-207)

## பற்றிக்ஸ், ஹென்றிஸ் அதிபர்களின் குருத்துவ வெள்ளி விழா நாளை





யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு ம.ஜெறோ செல்வநாயகம், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.ஏ.யேசுதாஸ் ஆகியோரின் குருத்துவ வெள்ளி விழா நாளை வெள்ளிக் கிழமை இரு கல்லூரிகளிலும் கொண்டாடப்படுகின்றது.

25.01.1958இல் கரம்பொனில் பிறந்த சென்.பற்றிக்ஸ் அதிபர் அருட் திரு ஜெறோ செல்வநாயகம் அடிகள் தனது உயர்தரக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். அதன் பின்னர் தனது குருத்துவப் பயிற்சியைக் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்திலும் மேற்கொண்டார். 06.08.1985இல் இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரியான இவர் 1994இல் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை நிறைவு செய்தார். 1997இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப்பட்டம் பெற்றார். 1987இல் பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகக் காலடி பதித்த இவர் பின்னர் உபஅதிபராகவும், 2008ஆம் ஆண்டு முதல் அதிபராகவும் பொறுப்பேற்று இன்றுவரை கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகின்றார்.

இவரின் வெள்ளி விழாவையொட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் சிறப்புத் திருப்பலியும் அதன்பின்னர் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நிகழ்வுகளும் இடம்பெறும்.

16.09.1956இல் சுன்னாகம் சூராவத்தையில் பிறந்த சென்.ஹென்றிஸ் அதிபர் அருட்திரு ஜே.ஏ.யேசுதாஸ் அடிகள் தமது உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். பின்னர் தனது குருத்துவப் பயிற்சியை யாழ். புனித மாட்டீனார் குருமடத்திலும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்திலும் மேற்கொண்டார். 06.08.1985இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 1986இல் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியில் உபஅதிபராக நியமனம் பெற்றார். கலைப் பட்டதாரியான இவர் றோம் பல்கலைக்கழகத்தின் இறையியல்மாணிப் பட்டம் பெற்றார்.

2000இல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் அதிபராக நியமனம் பெற்ற இவர் பின்னர் 2009இல் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்று இன்றுவரை கல்லூரி வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகிறார்.

இவரது வெள்ளி விழாவையொட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் சிறப்புத் திருப்பலியும் பின்னர் கல்லூரி மண்டபத்தில் வெள்ளிவிழா நிகழ்வுகளும் இடம்பெறும். (த)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 21 | 06.08.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : ஏகாதசி பி.ப. 04.58 வரை |
| [illegible] | [illegible] பி.இ. 01.59 வரை |
| சுபநேரம் | : 06.04-07.34 வரை |
| ராகுகாலம் | : 10.34-12.04 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 29 * 11 * 1945



மறைவு 04 * 07 * 2010

### விசுவப்பிள்ளை வேலாயுதம்
(ஓய்வுபெற்ற லிகிதர் - இ.போ.ச.)

கடந்த 04.07.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் விசுவப்பிள்ளை வேலாயுதம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (05.08.2010) வியாழக்கிழமை தொட்டிலடி, சிவராசா என்பவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

E.சிவராசா,
தொட்டிலடி, சங்கானை. (101539)

தகவல்:
மனைவி, மகன்

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 31 • 10 • 1979



உதிர்வு 05 • 08 • 2008

### நாகநாதர் உதயசீலன்
(சுவேந்திரா)

*ஆண்டுகள் இரண்டு சென்றாலும்*
*ஆயிரம் நினைவுகள் எம்முன்னே*
*தீண்டிச் செல்லுதே சுவேந்திரா*
*மீண்டும் ஒருமுறை*
*சிரித்து வாழப் பிறப்பெடுத்தால்*
*மீண்டும் வாழ்வோம் உன்னுடன்.*

கறுக்காய்த்தீவு,
பூநகரி. (சி/569673)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 28 ☆ 03 ☆ 1935



மறைவு 17 ☆ 07 ☆ 2009

திருமதி
### இராசப்பா அல்லிமலர்

அம்மா அம்மா என்று அழைத்த நாள்கள்
இன்றுடன் ஓராண்டானதே
அன்பு மொழியாலும் பாசத்தாலும்
அரவணைத்தீர்களே அம்மா
எம்மையெல்லாம் விட்டுப் பிரிய எப்படியம்மா மனம்வந்தது
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றென்றும் நாம்
உங்கள் நினைவுடன்

இந்துக் கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


### இரும்புக்கதிரைகள் விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் பாவிக்கக் கூடிய இரும்புக் கதிரைகள் விற்பனைக் குண்டு. தொடர்பு: விஸ்ணுஜா பந்தல்
இல.855, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0771326489, 0771288930

A/L 2012 இணைந்த கணிதம்
Sat, Sun 6 pm
G.கண்ணன் BSc.
Che. M.A.நிரோஜன் BSc.
Mon, Wed, Fri 6.15 am
Phy ஆசிரியர் Wed, Fri 6 pm

SHAMROCK
Gr1 முதல் O/L வரை
Eng med 6 To 11
Eng LIT 10,11
புலமைப் பரிசில் 05
சிங்களம்

### Personal Class
தரம்-3-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar உம் (No age limit) கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பித்துக்கொடுக்கப்படும். (அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை)
தொடர்பு: ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. T.P. 0778692979

### Deutsch வகுப்புகள்
German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன. (Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.)
தொடர்பு: 10, Palaly Road, Jaffna. 0771604823

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகர பிரதான வீதிகளில் English வகுப்புகள் நடத்துவதற்கு 3 அறைகளுடைய வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு: 077 7817181

### சிங்களம்
சிங்கள வகுப்புகள் ஆரம்பம்
08.08.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கிருபா லேனர்ஸ்க்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் உள்ள கடைசி வீடு)
தொ.பே.: 077 2283940


### சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை அருளுரை

வடமராட்சி, ஒக.5

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அருளுரை இடம்பெறும்.

நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த பரமாச்சாரிய சுவாமிகள் இந்த அருளுரையை நிகழ்த்துவார். (ஒ-236)

### சமயச் சொற்பொழிவு

வடமராட்சி, ஒக.5

வடமராட்சி, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் முன்றிலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் இடம்பெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'சனாதிபன்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

தபால் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிலைய இளைப்பாறிய விரிவுரையாளர் ரி.ரி.சண்முகநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ-236)

### நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக.5

சரவணை சின்னமடு தேவாலயப்பெருவிழாவை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையினர் மக்கள் வங்கியின் நடமாடும் சேவையினை நேற்றுப் புதன்கிழமை நடத்தினர்.

இந்த நடமாடும் சேவை இன்று வியாழக் கிழமையும் சின்ன மடுத் தேவாலயச் சுற்றாடலில் மேற்கொள்ளப்படவுள்ளது. (த)

### 'இந்து சாதனம்' வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், ஒக.5

யாழ். சைவ பரிபாலன சபையின் வெளியீடான 'இந்து சாதனம்' சஞ்சிகை வெளிவந்துள்ளது.

நீர்வை வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயத்தின் முகப்பு தோற்றத்துடன் வழமை போன்று சைவசமயக் கட்டுரைகளையும், பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி 'இந்து சாதனம்' வெளிவந்துள்ளது. (ஒ-9)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதி விஜயரட்ணம்
(கொழும்பு துறைமுக அதிகார சபை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் நாக்கியம்புலம், ஏழாலை மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட கனகசபாபதி விஜயரட்ணம் 03.08.2010 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், தம்பையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் விஜயபாரதி (கனடா), விஜயகுமார் (இலங்கை வங்கி யாழ்.மேற்தரக் கிளை), விஜயராஜ் (Euroville - JAFFNA) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன் (கனடா), அருந்ததி (இலங்கை வங்கி, திருநெல்வேலிக் கிளை), றஜிதா (ஆசிரியை திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, இளவாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற திருமதி பொன்னையா பராசக்தி மற்றும் திருமதிகளான சிவசம்பு - ஞானரத்தினம், சண்முகநாதன் - சுகிர்தரத்தினம், பரராஜசிங்கம் - சரஸ்வதி, கண்ணன் பஞ்சரத்தினம் மற்றும் பஞ்சாட்சரலிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் மற்றும் தனபாலசிங்கம், சற்குணசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், வினோஜ், வருண், தர்சனன், விஜயந்தி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, COYATTE CRECENT
SCARBOROUGH (ONT)
MIB6H2 CANADA,
T.P.NO.416-2836662 (101514)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம்



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம் 02.08.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (ஆயுள்வேத வைத்தியர்) - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் குமாரசாமி - தங்கம்மா தம்பதியரின் மருமகளும் கனகரத்தினத்தின் பாசமிகு மனைவியும் திருமதி மகேஸ்வரி குருசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி சிவபாக்கியம் - நவரட்ணம் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நவரத்தினராசா (ஆசிரியர்), சிவகுமார் (கனடா), சிவபாலன் (சுவிஸ்), சரோஜினிதேவி (கனடா), தேவகுமார் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.), மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீதயா (ஓய்வு பெற்ற மிருகவைத்தியர்), ரேணுகா (கனடா), சிவனேஸ்வரி (சுவிஸ்), குண்ராஜா (கனடா), சிவமலர், இந்திரஜித் (பொதுச்சுகாதார பரிசோதகர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியும் பத்மசுதர்ஸன், கபிலன், நிலானி, துஸ்ஸந்தி, துஸ்ஸந்தன், தருணன், கஜீபன், மதுஷா, மதுராங்கி, சங்கீர்த்தனன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.08.2010) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயா னத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

கு.கனகரத்தினம்
குடும்பத்தினர்.

இணுவில் தெற்கு,
இணுவில். (101522)

தொலைபேசி 021- 7902561

### இம்மானுவெல் லோறன்ஸ் (அசோகன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை (TORONTO) வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவெல் லோறன்ஸ் (அசோகன்) 26.07.2010 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இம்மானுவெல் மற்றும் எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இராசமணி தம்பதியரின் மருமகனும் ஜெயகௌரி (சகுந்தலா- கனடா) யின் அன்புக்கணவரும் ஜோன்ஸ் (கனடா), ஜனனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிலூத்து (ராணி - இலங்கை), மேரிதெரேசா (மலர் - இலங்கை), மேரிகொன்செப்ரா (மணி -பிரான்ஸ்), மேரிறெஜீஸ் (ராஜேஸ் -ஜேர்மனி), கிறிஸ்ரியன் (குணாளன் - கனடா), மேரிறஞ்சிதம் (வவா -இலங்கை), ஜெஸ்லி (தயாளன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பிரதாபச்சந்திரன் மற்றும் நிர்மலாதேவி (கனடா), சாரதாதேவி (கனடா), கேமா (கனடா), நகுலேஸ்வரி (கனடா), சசிகலா (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சின்னையா செல்லத்துரை [மைத்துனர்]
இல. 40, முள்ளி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். 0213219420 (101517)

கிறிஸ்ரியன் [கனடா]
0014164951812

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரில் கால்நடைகளின் உயிரைப் பறிக்கும் பொலித்தீன் பைகள், கடதாசிப் பொருள்கள்!



யாழ்ப்பாணம், ஓக.5

புல்வெளிகளை நாடி உணவு தேடும் மாடுகள் இன்று குப்பை கொட்டும் இடங்களுக்குச் சென்று பொலித்தீன், கடதாசிகளை உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் அண்மைக் காலமாகக் கால்நடைகள் மரணமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது வேறெங்கும் கிடையாது. எமது யாழ்.நகரப்பகுதியில்தான் மாடுகளுக்கு இந்தநிலை ஏற்பட்டுள்ளது. நகரின் பல்வேறு பகுதிகளிலும், ஒழுங்கைகளி லும், சந்திகளிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன. பகல்வேளைகளில் மாநகர சபையினர் அவற்றை அகற்றுகின்ற போதும் அவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ குப்பைகள் சில இடங்களில் தேங்கிவிடுகின்றன.

நகரப் பகுதிகளில் மாடுகளை வளர்ப்பவர்கள் அவற்றில் இருந்து பாலைப் பெற்றுவிட்டு அவற்றைக் கட்டாக்காலிகளாக விடுகின்றனர். இவை தாமாகவே உணவைத் தேடுகின்றன. கட்டடங்களும், தார் வீதிகளும் நிறைந்துள்ள நகரில் புற்கள் கிடைப்பதில்லை.

இதனால் பொலித்தீன், கடதாசிகளை அவை தமது பசிக்கு உணவாக்கிக் கொள்கின்றன. இதன் காரணமாக அவை மரணமடையும் சம்பவங்களும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. பொலித்தீன் பைகள், கடதாசிகள் என்பவற்றைக் கால்நடைகள் உண்பதால் அவை சமிபாடு அடையாமல் இறப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

2 வாரங்களில் குறைந்தது ஒரு மாடாவது உயிரிழப்பதாகக் கால்நடை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே இது விடயத்தில் கால்நடைகளை வளர்ப்போர் அவற்றை உரிய வகையில் கட்டி வளர்க்குமாறும், குப்பைகளைப் போடுவோர் உரிய பாதுகாப்பான முறையில் அவற்றைப் போடுவதன் மூலம் கால்நடைகள் அதனை உண்ணாமல் கட்டுப்படுத்துவதுடன் சுகாதாரச் சீர்கேடு இடம்பெறாமல் தடுக்கக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை - வீசியெறியப்படும் பொலித்தீன் மற்றும் கடதாசி வகைகள் போன்ற கழிவுகளை உண்பதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் பெருமளவில் மாடுகள் உயிரிழப்பதாக கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அபாயகரமான பாதிப்பில் இருந்து மாடுகளைக் காப்பாற்றுவதற்கு சத்திரசிகிச்சைகள் மூலம் அவை ஆகாரமாகக் உட்கொண்ட கழிவுப் பொருள்களை அகற்றும் காத் திரமான பணியை பருத்தித்துறை கால்நடை மருத்துவ நிலையம் ஏற்கனவே ஆரம்பித் துள்ளது.

மேற்படி கால்நடை மருத்துவ நிலையத்தில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் மூலம் கடந்த சில மாத காலத்துக்குள் மூவாயிரம் மாடுகள் வரை இவ்விதம் சத்திரசிகிச்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டு காப்பாற்றப்பட்டுள்ளன.

வரட்சி காரணமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் புல் பூண்டுகள் அற்றுப்போயுள்ளமையே மாடுகள் இவ்விதம் கழிவுப் பொருள்களை உண்ணக் காரணம் என கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கிறது.

(த-6-26)

## அதி கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றிய ஆசிரியர்கள் மீண்டும் வன்னிப் பகுதிக்கு

### இடமாற்றம் தொடர்பாக அவர்கள் விசனம்

யாழ்ப்பாணம் , ஓக. 5

ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து யாழ். கல்வி வலயத்தினைச் சேர்ந்த ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ். கல்வி வயலத்தில் இருந்து வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விவரங்களை இணையத்தளத்தில் வடமாகாண சபை வெளியிட்டுள்ளது.

இதில் ஏற்கனவே பல வருடங்கள் அதி கஷ்ட பிரதேசத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளதாகவும்,

அத்துடன் ஆசிரிய சேவைக்காலத்தில் பலர் இதுவரை எந்தக் கஷ்டப் பிரதேசத்திலும் கடமை புரியாமல் தமது வீட்டுக்கருகில் உள்ள பாடசாலைகளிலேயே இன்று வரை கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே ஆசிரியர் இடமாற்றம் குறித்த விடயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் , ஆசிரியர்கள் சேவைக்கால கடமையை உரிய வகையில் பரிசீலனை செய்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-9)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.5

விபாஸனா தியானம் தொடர்பான 10 நாள் பயிற்சி முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை அவிசாவளை, கொஸ்கம என்னும் இடத்தில் அமைந்துள்ள தம்ம சோபா தியான நிலையத்தில் நடை பெறவுள்ளது.

எனவே மேற்படி தியானம் தொடர்பாக அறிய விரும்புவோருக்கான இலவசக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலடி, உடுவிலில் அமைந்துள்ள 'ஜசுபி' பழரசத் தொழிற்சாலை முன்னால் நடைபெறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பொதுச்செயலாளர் அ.ரவிக்குமார் அறிவித்துள்ளார். (த-201)

## முன்னாள் அரச அதிபருக்கு சனியன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 5

அரசசேவையில் ஆண்டுகள் ஐம்பதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் கே. கணேஷைப் பாராட்டும் நிகழ்வு நாளை மறுதினம் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி மக்களால் நடத்தப்படுகின்ற இப்பாராட்டு விழாவில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சிப் பிரதேச விழா ஏற்பாட்டுக் குழுவினர் சார்பில் கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் சி. சத்தியசீலன் கேட்டுள்ளார். (த-16-236)

## தொய்ந்த நிலையில் மின்சார வயர்கள்; விபத்துக்கள் ஏற்படலாம் என அச்சம்

கைதடி, ஓக. 5

அரியாலை தபால் கட்டை சந்தியிலிருந்து யூதா கோவில் வரைக்குமான ஏ-9 வீதியில் உள்ள மின்சார இணைப்பு வயர்கள் மிகவும் தொய்ந்த நிலையில் காணப்படுவதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பொதுமக்களால் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வீதியின் இரு பக்கமும் உள்ள வீடுகளுக்கு மின்சார சபையால் மின் இணைப்புக்காகப் பொருத்தப்பட்டுள்ள வயர்கள் தொய்வாகக் காணப்படுவதாகவும் வீதியால் கொழும்பி லிருந்துவரும் கனரக வாகனங்கள் உயரமாக உள்ளதுடன் வாகனத்தின் மேல் பகுதியிலும் பொருள்களை ஏற்றி வருவதனால் மின்சார இணைப்பு வயர்களில் தொடுகை ஏற்படுவதனாலேயோ அல்லது அறுபடுவதனாலேயோ பாரிய விபத்துக்கள் ஏற்பட்டு சில வேளைகளில் உயிராபத்துக்களையும் சந்திக்க நேரிடலாம் எனவும் கூறப்படுகின்றது.

எனவே, இவ்விடயத்தில் மின்சார சபையினர் உடனடிக் கவனமெடுத்து இவற்றை சீர்செய்வதன் மூலம் ஏற்படஇருக்கும் உயிராபத்துக்களை தடுக்கலாம் எனவும் பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இவ்வீதியில் இணைக்கப்பட்டிருந்த மின் இணைப்பு வயர் ஒன்று திடீரென அறுந்து வீழ்ந்ததாகவும் இப்பகுதி இளைஞர்களின் முன் மாதிரியான நடவடிக்கை யினால் ஏற்பட இருந்த உயிராபத்துக்கள் தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-288)




## ஊழியர்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்.வணிகர் கழகத் தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் 9 ஆம் திகதி ஆடி அமாவாசைத் தினத்தன்று சகல வர்த்தக நிலையங்களிலும் கடமையாற்றும் வர்த்தக ஊழியர்கள் ஆடிஅமாவாசை விரதத்தை அனுஷ்டிக்க வசதியாக விடுமுறை வழங்க வேண்டும் என யாழ்.வணிகர் கழகம் வேண்டுகோள்விடுத்துள்ளதாக கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

(த-201)

## கைதடி அரச முதியோர் இல்லத்தின் சகல விடுதிகளுக்கும் தொலைக்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 5

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் பொழுது போக்குக்காக உள்ளகத் தொலைக்காட்சிகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இல்லத்தின் சகல விடுதிகளுக்கும் இந்தத் தொலைக்காட்சி வசதி வழங்கப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் இராஜலிங்கம் தெரிவித்தார்.

சகல அலைவரிசைகளையும் பார்க்க கூடிய வகைகளில் இந்த தொலைக்காட்சி வசதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (த-26)

## கடலுணவுகள் விலையேற்றம்

யாழ்ப்பாணம் , ஓக.5

குடாநாட்டு மீன் சந்தைகளில் கடந்த சில தினங்களாகக் கடலுணவுகளின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதுடன் அவற்றுக்குப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

குருநகர், கொட்டடி, பாஷையூர் மீன் சந்தைகளில் இவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதாக நுகர்வோர் கூறுகின்றனர்.

ஒரு கிலோ மீன் 450 ரூபாவாகவும், ஒரு கிலோ இறால் 600 ரூபாவாகவும், ஒரு கிலோ நண்டு 300 ரூபாவாகவும், ஒரு கிலோ கணவாய் 450 ரூபாவாகவும், சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடலுணவுகளின் இந்த விலை அதிகரிப்பினாலும் பற்றாக்குறையாலும் தென் பகுதிக்குக் கொண்டு செல்லப்படும் கடலுணவுகளின் தொகையும் குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

குடாக்கடலில் அண்மைக் காலமாக பிடிக்கப்படும் மீன்களின் தொகை குறைந்தமையே விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (த-26)

## வாகன விபத்தில் மாணவன் காயம்

கொழும்புத்துறை , ஓக. 5

பருத்தித்துறை, சாரையடிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்து கால் முறிந்த நிலையில் மாணவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புற்றளை மகா வித்தியாலத்தில் கல்வி பயிலும் சாரையடியைச் சேர்ந்த த.அனுசன் (வயது 9) என்னும் மாணவனே காயமடைந்தவராவார்.

இவர் வீதியைக் கடக்க முற்பட்ட போது வேகமாக வந்த தனியார் பஸ் வண்டி மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

(த-135)




'டோக்கியோ' சிமெந்து நிறுவனத்தின் தயார்நிலை கொங்கிறீற் உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் மிருசுவிலில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

'டோக்கியோ' சிமெந்து நிறுவனத்தின் தலைவர் எட்கர் குணதிலக மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் உற்பத்தி இயந்திர முகாமையாளர் பி.கோபிநாத் நிற்பதனை முதலாவது படத்திலும், [illegible] இருப்பதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும், [illegible] உற்பத்தி நிலையத்தை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: டிலீப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



## உயர்திரு த.க.ஆனந்தராசா (F.I.B)

**உதவிப் பொது முகாமையாளர் (வடவலயம்), மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.**

**சேவை விபரம்**

1972-1976 மட்டக்களப்பு
1976-1978 யாழ்.நவீன சந்தைக் கிளை
1978-1979 யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை
1979-1979 யாழ்.பிராந்திய தலைமையகம்
1979-1981 காங்கேசன்துறை
1981-1987 கிளிநொச்சி
1987-1996 யாழ்.பிராந்திய தலைமையகம்
1996-2002 சுன்னாகம்
2002-2005 யாழ்.பிராந்திய தலைமையகம்
2005-2006 வன்னிப் பிராந்திய தலைமையகம்
2006-2010 (ஆவணி) - யாழ்/வன்னிப் பிராந்தியங்கள்

**பதவி உயர்வுகள்**

1972.05.19 இலிகிதர்
1978.07.15 உதவி முகாமையாளர்
1984.07.01 பதில் முகாமையாளர்
1996.09.05 முகாமையாளர்
2002.03.15 உதவிப் பிராந்திய முகாமையாளர் (பதில்)
2004.07.18 உதவிப் பிராந்திய முகாமையாளர்
2005.07.29 பிராந்திய முகாமையாளர்
2006.10.19 உதவிப்பொது முகாமையாளர்
(வடவலயம்) யாழ்/வன்னி மாவட்டம்

மக்கள் வங்கியின் வரலாற்றில்
38 வருடகாலமாக மக்களுக்கு
மகத்தான சேவையாற்றி மக்களின்
மனதை வென்றெடுத்த உத்தமனும்
சீரிய பண்பாளனுமாகிய மக்கள்
வங்கியின் வடவலய
உதவிபொது முகாமையாளர்

**உயர்திரு.**
**த.க.ஆனந்தராசா**

அவர்கள் வங்கிச் சேவையிலிருந்து
ஓய்வுபெற்றுச் செல்லும்
இவ்வேளையில் அவரையும் அவரது
குடும்பத்தவர்களையும்
நோய்நொடியின்றி நீண்ட ஆயுளுடன்
நீடூழி வாழ எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும், சக பணியாளர்களும்**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்.**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(G/569670)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளை ஆராயும் மாநாடு நாளை மறுதினம் நல்லூரில்

## ஒன்றிணைந்து அரசை வலியுறுத்துவதே நோக்கம்

யாழ்ப்பாணம்,ஒக.5

ஒருங்கிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மாநாடு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக ஒருங்கிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தினிது சமன் ஹென் நாயக யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2005ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனையின் 'தருண அருண' என்ற வேலைத் திட்டத்தின் அடிப்படையில் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதாகக் கூறியும் கடந்த ஐந்து வருடங்களாக அவர்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்.

ஜனாதிபதி மட்டுமல்ல வடபகுதி, தென்பகுதி அரசியல் வாதிகளும் பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்பு வழங்குவதாகக் கூறித் தேர்தல் காலங்களில் பட்டதாரிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்களே தவிர இன்று வரை அவர்களுக்கு நியமனங்கள் வழங்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


மக்கள் சபை செயலாளர் பதவிக்கு பட்டதாரிகள் 14 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதாகவும், ஆயுர்வேத மருத்துவர்கள் 900 பேருக்கும், அழகியற் பாடத்திற்கான ஆசிரியர் நியமனம் 3 ஆயிரத்து 174 பேருக்கும் இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நியமனம் வழங்குவதாகக் கூறப்பட்டபோதும் இதுவரை அதற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகவும், அங்கவீனர்களாகவும், நியமனம் பெறத் தகுதி இருந்தும் வயது கடந்தவர்களாகவும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள பட்டதாரிகள் நிலைமை குறித்து நாம் அறிவோம்.

பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அகில இலங்கை முழுவதுமுள்ள பட்டதாரிகள் சார்பாக எமது சங்கம் ஒருங்கிணைந்துள்ளது. தென்பகுதியிலுள்ள பட்டதாரிகளைவிட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் பட்டதாரிகள் விசேட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே நியமனம் பெற்றுக் கொள்ளும் வரை நாம் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இந்த நோக்கத்துக்காகவே இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது. (த-14)

## காங்கேசன் எரிபொருள் களஞ்சியத்துக்கு இரண்டு பெரிய பவுசர் வாகனங்கள்



யாழ்ப்பாணம்,ஒக.5

இலங்கைப் பெற்றோரியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் விநியோகக் களஞ்சியத்திற்கு இரண்டு பெரிய பவுசர் வாகனங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

சுமார் 19 ஆயிரத்து 800 லீற்றர் எரிபொருளை எடுத்துச் செல்லக்கூடிய இந்த இரண்டு பவுசர் வாகனங்களில் ஒன்று கடந்த வாரம் வந்து சேர்ந்தது. மற்றைய வாகனம் நேற்று புதன்கிழமை எடுத்துவரப்பட்டது.

தற்போது எடுத்துவரப்பட்ட வாகனங்களைவிட ஏற்கனவே இரண்டு பெரிய பவுசர் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதாக காங்கேசன்துறை எரிபொருள் விநியோகக் களஞ்சிய அதிகாரி ஒருவர் தெரிவத்தார். (த-26)

## கடந்த சில தினங்களாகக் காலையில் மட்டும் செயற்படும் மானிப்பாய் வைத்தியசாலை

நவாலி,ஒக.5

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை கடந்த சில நாள்களாக காலையில் மாத்திரம் செயற்படுவதால் நோயாளிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்குள்ள வைத்திய அதிகாரி அடிக்கடி வெவ்வேறு வைத்தியசாலைகளுக்கு பதில் கடமையாற்றச் சென்று விடுவதால் நண்பகலுக்குப் பின்னர் இயங்குவதில்லை.

இதனால் 2 மணிக்குப் பின்னர் வரும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அன்றாடம் உழைக்கும் தொழிலாளர்களென பலரும் இங்கு சிகிச்சைக்கென வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இந்த வைத்தியசாலை 7 கிராம சேவையாளர் பிரிவை உள்ளடக்கியது. இங்கு வாழும் அநேகமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள். இவர்கள் பணம் கொடுத்து சிகிச்சை பெற முடியாத நிலை உள்ளது.

இதன் காரணமாக இந்த வைத்தியசாலையில் தினமும் 200பேர் வரை சிகிச்சை பெற்றுச் செல்கின்றார்கள். அத்துடன் இங்குள்ள பிரசவ விடுதியும் 24 மணி நேரமும் இயங்குகின்றது.

எனவே இங்குள்ள வைத்தியரை பதில் கடமைக்கு அனுப்புவதை சம்பந்தப்பட்டவர்கள் தவிர்க்க வேண்டுமென்பதுடன் வைத்தியசாலையின்அபிவிருத்திச் சபையினரும் இது விடயத்தில் கவனமெடுக்காது ஏனோதானோ என்று இருக்கின்றார்களென்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-100)

## 21 வயது குறைந்தவருக்கு சிகரெட் விற்ற வர்த்தகருக்கு 1,000 ரூபா அபராதம்

தென்மராட்சி,ஒக.5

21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பெருள்கள் விற்பனை செய்யக்கூடாது என்று அரசாங்கம் அறிவுறுத்தியுள்ள நிலையில் 21 வயதுக்கு குறைந்த ஒருவருக்கு சிகரெட் விற்பனை செய்த கொடிகாமம் பகுதி வர்த்தகரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறிப்பிட்ட வர்த்தகரை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத்தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஏ-207)

## சந்திரகுமார் எம்.பி கைதடிக்கு விஜயம்

தென்மராட்சி,ஒக.5

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் அண்மையில் கைதடிப்பகுதிக்கு விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடினார்.

கைதடி நவபுரம், கைதடி கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தபோது அப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளில் அப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய நிதி ஒதுக்கீட்டினையும் வழங்கியுள்ளார். (த-100)

## துண்டியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

கொழும்புத்துறை,ஒக.5

கொழும்புத்துறை துண்டி வீதியை அண்மித்த பகுதிகளில் அண்மையில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரையை அண்டிய இப்பகுதி நிலக்கீழ் நீர் உவர்த்தன்மை கொண்டதால் குடிதண்ணீர் பெறுவதற்காக நீண்டதூரம் சென்று வரவேண்டியுள்ளதால் பல சிரமங்களை அனுபவிப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாநகரசபையால் துண்டி வீதிக்கு முன்னர் வழங்கப்பட்டுவந்த குழாய்நீர் விநியோக நடைமுறையை மீண்டும் செயற்படுத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-135)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## அச்சுவேலிக்கு 'கேபிள்' தொலைபேசி; ஆவரங்காலில் பரிவர்த்தனை அலகு

யாழ்ப்பாணம்,ஒக.5

அச்சுவேலி பகுதிக்கு 'கேபிள்' தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆவரங்கால் பகுதியில் இதற்கான பரிவர்த்தனை அலகு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் இப்பிரதேசத்திற்கு கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதற் கட்டமாக இருநூறு இணைப்புக்களை வழங்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இணைப்பு வசதியை ஏற்படுத்தும் வகையில் ரெலிக்கொம் நிறுவனத்தின் அதிகாரிகள் அண்மையில் நேரில் சென்று ஆராய்ந்தனர். (த-26)

## முன்னாள் அரச அதிபர் கணேஸுக்கு நாளை மறுதினம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக.5

யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் கே.கணேஸின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக நாளை மறுதினம் சனிக்கிழமை நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் பி.ப. 3.30 மணிக்குப் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளும், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் வழங்குவார்கள்.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி ப.யோகேஸ்வரி, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி, வடமாகாண யாழ்.பிராந்திய ஆணையாளர்திருமதி பத்மினி சிவலிங்கம், யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான் மக்கள் குழுத் தலைவர் அ.பரமநாதன், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் வி.கேசவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன், தினக்குரல் நிர்வாக இயக்குநர் பொ.கேசவராஜன், வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்குவார்கள். (த-6)





*மானிப்பாய் மக்கள் வங்கியின் ''சிசுஉதான' அலகு திறப்பு விழா மானிப்பாய் விவேகானந்த தமிழ்க்கலவன் பாடசாலையிலும் நவாலி அட்டகிரி தமிழ்க்கலவன் பாடசாலையிலும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இதில் விவேகானந்த தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வின்போது மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை முகாமையாளர் எஸ்.நித்தியானந்தம் மங்கள விளக்கேற்றுவதையும், பாடசாலையின் அதிபர் திருமதி கமலாதேவி சரவணபவன் அருகில் நிற்பதையும் அட்டகிரி தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வின்போது மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவிப் பிரதேச முகாமையாளர் எஸ்.சுசீந்திரன் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.கந்தசாமி அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.*
*(படங்கள்: ஓங்காரன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியானது — விவாத மேடை — தவறானது



## பஞ்சாபி அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

### சரியானது

பண்பாடு என்பது என்ன? என்னைப் பொறுத்தவரையில் பண்பாடு என்பது ஒழுக்கம், நன்நடத்தை கடமை, கட்டுப்பாடு ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது. பஞ்சாபி ஒழுக்கமற்ற ஆடை என கூற முடியுமா? அது ஓர் இனத்தினுடைய கலாசார உடை என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இயந்திரமயமாக்கப்பட்ட உலகிலே ஒவ்வொரு மனிதனும் நேரமின்றித் தவித்துக் கொண்டிருக்கின்றான். அப் படி இருக்கையில் ஆடை அலங்காரத்திற்காக பொன்னான நேரத்தை செலவிடுவது நியாயமாகுமா? இல்லை. ஆனால் அதற்காக ஒழுக்கமற்ற அநாகரிகமான உடைகளை அணிய முடியாது. ஆகவே தான் முழு ஆடையான பஞ்சாபியை பெண்கள் அதிகம் விரும்பி அணிகிறார்கள். அணிவது மிக இலகு என்பதுடன் அங்கங்கள் தெரியாத வகையில் அடக்க மானதும் கூட.

வெறுமனே கலாசாரத்தை பாதுகாக்க பஞ்சாபி அணியக் கூடாது என்று சொல்லி விட்டு 'மினி ஸ்கேட்டும்' "ஜீன்ஸ்" உம் போட்டுக் கொண்டு அலைவது தான் நீங்கள் கலாசாரத்தை பாதுகாக்கும் நடைமுறையா? பஞ்சாபியை தடை செய்வதனால் மேலைத்தேய கலாசார உடைகளையும் தடை செய்ய வேண்டும். ஆலயங்களுக்கு உள்ளே விழாக் காலங்களில் மட்டுமே கலாசார உடை அணிந்து செல்வதல் கலாசாரம் பாதுகாக்கப்பட்டுவிடுமா? "ஊரோடு ஒத்து வாழ்" என்பதற்கேற்ப பொன்னான நேரத்தை மீதப்படுத்தி வாழப் பழகுவது சரியானது.

**சுரேஸ்,** யாழ்.இந்துக் கல்லூரி.

### தவறானது

சைவ ஒழுக்கத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் காப்பதற்கே ஆலயங்கள் திகழ்கின்றன. அவ்வாலயங்களுக்கு நாம் பஞ்சாபி என்னும் ஆடை அணிவது தவறானதாகும். அவரவர் கலாசாரத்துக்கே ஆடைகள் திகழ்கின்றன. நம் கலாசாரத்தின் ஆடை ஆண்களுக்கு வேட்டியும் சால்வையும், பெண்களுக்கு சேலையும் சட்டையும் முழுப்பாவாடை தாவணியும் ஆகும். எனவே இன்னொரு கலாசாரத்தின் ஆடைகளை நம் கலாசாரத்துக்குள் புகுத்துவது தவறானது. நவநாகரிக மோகத்தில் நாம் மூழ்குவது நமக்கே அழகா? நாமே எம்மை திருத்த முயல்வதே நல்லது. நம் நாட்டிலுள்ள சகல சைவ ஆலயங்களும் நம் கலாசார ஒழுக்கத்தை காக்க முயல்வதே நல்லது. எல்லா ஆலயங்களும் முயன்றால் நம் மக்கள் நிச்சயம் திருத்தம் காண்பார்கள்.

ஒழுக்கமே என்றும் உயர்வைத்தரும். ஆலயத்திற்கு வருவோர் கவர்ச்சிகரமான ஆடைகளை தவிர்த்தலே நல்லது. கவர்ச்சிகரமான ஆடைகளை நாம் அணிந்தால் மனஎண்ணங்கள் அலைபாயும். இங்கு இறைவனைத் தரிசிப்பதற்கு பக்தி எண்ணம் வராது. சமூகச் சீரழிவிற்கே வித்திடும். ஆதலினால் ஒவ்வொருவரும் தம் ஆடைகளை ஆடம்பரம் இல்லாமல் தூய்மையான நம் ஒழுக்க கலாசாரத்துடன் இணைந்த ஆடைகளை அணிந்து ஆலயத்திற்கு சென்று வழிபடுவதே சிறந்தது என்பதே எனது கருத்தாகும். தமிழர் தம் பண்பாட்டைக் காப்பதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**கி.துர்க்கா,** மானிப்பாய்.

---

முதலாவது விவாத மேடை பகுதியில் **எமதுஇளையோரிடத்தே பெருகியுள்ள "பேஸ்புக்" பாவனை சரியானதே** என்ற அணி வெற்றி பெற்றுள்ளது. அந்த அணிக்காக வாக்களித்தவர்களில் மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1. ச.சர்மிளா - கோண்டாவில்
2. ச.செந்தில் குமரன் -உடுவில்
3. ஆர். இந்துசன் - சாவகச்சேரி

சிறந்த ஆக்கத்தை அனுப்பியவர்: ஜீவனா, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

1. செ.நிஷாந் -துன்னாலை
2. செ.ரவிசாந் - குப்பிளான்
3. ச.சர்மிளா - கோண்டாவில்

ஆகியோர் முதலாவது விவாத மேடைக்கு இது தொடர்பான ஆக்கங்களை அனுப்பியிருந்தனர்.


---

## "க்ளோஸ் ஃபிரெண்ட்" வேணுமா?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பம்பரமாகச் சூழலும் வாழ்க்கை ஓட்டத்தில் நட்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாமல் போகலாம். ஆனால் நமக்கென்று நண்பர்கள் வேண்டும் என்ற கட்டுக் கடங்கா ஆசை நமக்குள் இருக்கிறது. முக்கியமாக இளைஞர்களுக்கு இப்படிப்பட்ட ஆசை அதிகம். இளைஞராக இருக்கும் போது உங்களை ஒருவர் ஏற்றுக் கொள்வதும், அவருடன் நன்கு பழகி நெருங்கிய நண்பராவதும் அவசியம். சிறியவர்களாகட்டும் பெரியவர்களாகட்டும் நம் எல்லோருக்குமே மகிழ்ச்சியளிக்கும் உற்ற நண்பர்கள் தேவை.

தனிமை என்பது ஒரு வியாதி அல்ல. தனிமை என்பது ஒரு நியாயமான பசி... நட்புறவு இல்லாததற்கான இயல்பான ஓர் அறிகுறி. பசி எடுக்கும் போது சாப்பாட்டைத் தேடுவது போல் தனிமையுணர்வு ஏற்படுகையில் நல்ல நண்பர்களைத் தேடுவது அவசியம். இருந்தாலும், சிலர் மற்றவர்களிடம் எந்த ஒட்டுறவும் வைத்துக்கொள்வதேஇல்லை.என்ன காரணத்திற்காக நம்மைத் தனிமைப் படுத்திக் கொண்டாலும் அதுஎந்தப்பிரச்சினையையும்தீர்க்கப் போவதில்லை, மாறாக, நம் தனிமை யுணர்வை இன்னும் மோசமாகவே ஆக்குகிறது. (வளரும்)



**ஞா.சுகந்தி**, கல்வயல்.

---




## விவாதமேடை

பஞ்சாபி (சுடிதார்) அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

சரியானது | தவறானது

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே "பஞ்சாபி (சுடிதார்)" அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது சரியானதா? தவறானதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

---

## கல்வி

கல்வி கற்கும் ஆர்வத்தினால்
கண்ணீரின் தாகத்தினால்
நண்பர்களின் நட்பின் மயக்கத்தினால்
பகைவர்களின் வினையின் காரணத்தினால்
அன்னையின் பாசத்தினால்
காதலின் மோகத்தினால்
வாழ்க்கையில் வருகின்ற சோகத்தினால்
கல்விதனை மறந்திடாதே
கல்வி தான் உன் உயிர்மூச்சு
அது தான் உன்னை உயர்
சிகரத்திற்கு இட்டுச் செல்லும்
கல்வி மட்டும் தான் உன் வாழ்க்கையின்
கற்பூர தீபமாக ஒளிரும்

**இ.தூஜினி**
திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

---

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

"பஞ்சாபி (சுடிதார்)" அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது

சரியானது ☐ தவறானது ☐

பெயர் :-.................................................
முகவரி :-.................................................
:-.................................................
அடையாள அட்டை இல:.................................................

உங்கள் தீர்ப்புகளை 26.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

---

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும்,
பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்
**'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது.
இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது
சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள
படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.................................................
முகவரி :-.................................................
:-.................................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## பெரியோர்களையும் வாழ வைத்த சொல் அம்புகள்

மனித உதடுகள் சிந்தும் ஒவ்வொரு சொல்லும்
இறை உலகில் எதிரொலிக்கிறது.

அடலெயிட், அன்புறக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுவான்கரையில் முதன்முறையாக ஜி.சீ.ஈ.(உ/த) பரீட்சை நிலையம்

மட்டக்களப்பு, ஓக. 5

வரலாற்றில் முதற்றடவையாக மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சை நிலையமொன்று அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஏற்படுத்தப்படவுள்ளது.

இதனால் சுமார் 500 உயர்தரப் பரீட்சார்த்திகள் நன்மையடைவர். கடந்த காலங்களில் படுவான்கரை மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எடுப்பதற்கு போக்குவரத்துச் சிரமங்களுக்கு மத்தியில் எழுவான்கரையிலுள்ள ஆரையம்பதி, செட்டிபாளையம் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டியவர்களாக இருந்தார்கள்.

பட்டிப்பளைக் கல்விச்சமூகத்தின் சார்பில் முன்னாள் பட்டிப்பளைப் பிரதேச சபைத் தவிசாளரும், அதிபர் சங்கத் தலைவருமான சிவஞானம் அகிலேஸ்வரன் இக்குறைபாட்டை நீக்க, கடந்த இரு வருடங்களாக உள்ளூர் அரசியல்வாதிகளூடாகப் பரீட்சை ஆணையாளருக்கு மகஜர்கள் அனுப்பி வந்திருக்கிறார்.

இம்முறை இவரது முயற்சி பலனளித்திருக்கிறது.

இதேவேளை, அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண் தர) பரீட்சைக்கும் இணைப்பு நிலையமாக செயற்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பட்டிப்பளைக் கல்விச் சமூகத்தின் சார்பில் அதிபர் சிவ. அகிலேஸ்வரன் இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் மட்டு.மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.ஈ. போலுக்கும் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (ளி)




# செல்வ நகரில் உபதபாலகம் நிறுவ மக்கள் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஓக. 5

சேருவில செல்வநகரில் உப தபாலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

பொதுமக்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் தபால் நிலையத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய காரியங்களுக்காகத் தொலைவிலுள்ள தபால் நிலையங்களைப் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நாடவேண்டிய நிலையில் உள்ளார்கள்.

செல்வநகரில் உபதபாலகம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை பலன் கிட்டவில்லை என்றும் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

செல்வநகரில் காலம் தாழ்த்தாது உபதபாலகம் ஒன்றை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவனசெய்யவேண்டும் என்றும் இவர்கள் கோருகிறார்கள்.(ளி)

# இறக்காமம் செயலகப் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

அம்பாறை, ஓக. 5

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 12 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கடந்த திங்கட்கிழமை, டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸார், கிராமசேவை உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து வீடுவீடாகச் சென்று சுற்றுச் சூழலைப் பார்வையிட்டனர்.

இதையடுத்து பிரதேச செயலாளர் ஆர்.யூ. அப்துல் ஜெலீல் தலைமையில் திட்டப்பணிகள் ஆரம்பமாயின. பதில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபாவும் இறக்காமம் பிரதேச சபை உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பொதுமக்கள் மத்தியில் டெங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

பொது இடங்கள், வடிகான்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை சிரமதானப் பணிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு கழிவுகள் எரிக்கப்பட்டன.

பொதுமக்கள் தமது பிரதேச சூழல்களைத் துப்புரவு செய்வதில் மிக உற்சாகமாக ஈடுபட்டார்கள். (ளி)

# குறைந்த விலையில் நெல் கொள்வனவு: நாவிதன்வெளி விவசாயிகள் கவலை

அம்பாறை, ஓக. 5

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலிருந்து நெல் ஒரு மூடை குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுகிறது என நாவிதன்வெளிப் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன்படி ஒரு மூடை நெல் 1,600 ரூபாவிலிருந்து 1,800 ரூபா வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தும் நாவிதன் வெளிப் பிரதேசத்தில் 1,050 ரூபாவிலிருந்து 1,300 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுகிறது என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தா விட்டால் தங்களுக்குப் பாரிய நட்டம் ஏற்படும் என்றும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விவசாயிகளின் நலனைக் கருத்திற் கொண்டு நிர்ணய விலைக்கு நெற்கொள்வனவு செய்ய உதவுமாறு நாவிதன் வெளி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# கிழக்கு மாகாண சுகாதார நடவடிக்கைகளுக்கு நிதி

கொழும்பு, ஓக.04

கிழக்கு மாகாண சுகாதாரத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி இவ்வாண்டு 38கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் தெரிவித்துள்ளார். இதே வேளை, இரு வருடங்களாக கிழக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை, துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தாதியர் பற்றாக்குறை நிலவுகிறது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு விரைவில் 50 தாதியர் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ளி)

# பெரும்பான்மை இன அரசியல்வாதிகளுக்கு நுவரெலியா அபிவிருத்தியில் அக்கறை இல்லை

## பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் சுட்டிக்காட்டு

நுவரெலியா, ஓக.5

நுவரெலியா மாவட்டத்தில் வெற்றி பெற்ற பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் ஏனைய மாவட்டங்களின் அபிவிருத்தியில் அக்கறை செலுத்தினார்களே தவிர நுவரெலியா மாவட்ட அபிவிருத்தியில் செலுத்தவில்லை என இலங்கை தொழிலாளர் கங்கிரஸின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக மக்கள் மத்தியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் 57 சதவீதமான தமிழர்களும், 43 சதவீதமான பெரும்பான்மை இனத்தவர்களும் வாழ்கின்றனர். எனினும், இந்த மக்களுக்கு அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானை தவிர வேறெவரும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளவில்லை.

இன்று நுவரெலியா மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்த நிலைமை ஏனைய மாவட்டங்களுக்கு முன்மாதிரியாகும். அது போன்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும், நானும் எங்களது அமைச்சின் நிதியை கிராமங்களிலும், தோட்டங்களிலும் வாழும் மூவின மக்களுக்கும் சமமாக ஒதுக்கீடு செய்து வருகின்றோம். ஆனால், ஏனைய இனங்களைச் சேர்ந்த அமைச்சர்களிடம் இவ்வாறு சமமாக நிதிகளை ஒதுக்கீடு செய்யும் மனப்பாங்கு இல்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்தவரையில் இந்த நாட்டின் இன ஐக்கியத்தைப் பேணும் வகையில் தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும். அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும், நானும் ஜனாதிபதியின் நல்லெண்ணங்களுக்கு அமைய மலையகம் மட்டுமல்லாமல், வடக்கு-கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை செய்யப் பணிக்கப்பட்டுள்ளோம்.

இன்னும் சில தினங்களில் வடக்கு, கிழக்கில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளேன், முதற்கட்டமாக அங்கு யுத்த சூழ் நிலையில் பாதிக்கப்பட்ட பாதைகள் எனது அமைச்சின் நிதியைக் கொண்டு ஜனாதிபதியின் பணிப்புரைக்கும், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கும் இணங்க 'ஜனசெபா' திட்டத்தின் ஊடாக புனர்நிர்மாணம் செய்யபடவுள்ளன. அத்துடன், ஏனைய அத்தியாவசியத் தேவைகளையும் மிக விரைவில் ஏற்ப டுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்படி பிரதி அமைச்சர் கூறினார். (ளி)




# வலது குறைந்தோருக்கு விசேட கூட்டுறவுச் சங்கம்

கண்டி, ஓக. 5

மத்திய மாகாணத்திலுள்ள வலது குறைந் தோர் மற்றும் விசேட தேவையுள்ளோர்களுக்காக தனியான கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைக்க மத்திய மாகாண சமூகசேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மத்திய மாகாண சுகாதார, சூழல் பாதுகாப்பு, சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இந்த கூட்டுறவு சங்கம் அமைக்கப்படவுள்ளது. அத்தோடு இதன்மூலம் விசேட தேவையுள்ளோரை ஒன்றிணைக்கவும் - அவர்களது சுயதொழில் தேவை கடன் உதவிகள் வழங்கவும் - வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் - நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் நேரடியாக அங்கத்துவம் பெறமுடியும். 18 வயதுக்கு கீழ்பட்டவர்களுக்காக அவர்களது பெற்றோர் அங்கத்துவம் பெறமுடியும். விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களில் சமூகசேவை உத்தியோகஸ்தர்கள் மூலம் பெற முடியும் என அமைச்சின் பிரத்தியோக செயலாளர் குமார ரணதுங்க தெரிவித்தார். (ளி)

# மலையகத்தில் தனியார் பஸ்களால் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்குக!

மஸ்கெலியா, ஓக. 5

மலையகப் பகுதியில் குறிப்பாக தலவாக்கலை, ஹற்றன், பொகவந்தலாவை, மஸ்கெலியா, சாமிமலை ஆகிய பிரதேசங்களில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மஸ்கெலியாவில் இருந்து இவ்வாறான தனியார் பஸ்கள் 19 கிலோ மீற்றர் தூரம் உள்ள ஹட்டன் நகரை சென்றடைய சுமார் 2 மணிநேரம் எடுப்பதாகவும்,ஆமை வேகத்திலேயே இந்த பஸ்கள் செல்கின்றன எனவும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான முரளி ரகுநாதனிடம் ஹட்டன் சங்கப் பணிமனையில் நடைபெற்ற மக்கள் சந்திப் பின்போது இக்குறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து மாகாணசபை உறுப்பினர் ஹட்டன் அரச பஸ் நிலையத்திற்கு தீடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள உயர் அதிகாரிகளைச் சந்தித்து மஸ்கெலியா, சாமிமலை, பொகவந்தலாவை, ஹட்டன், டயகம, தலவாக்கலை ஆகிய பிரதேசங்களுக்கு அதிக அளவில் அரச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்து மாறு வேண்டுகோள் விடுத்தார். (ளி)

# சாமிமலை நகரின் பிரதான வீதி குன்றும் குழியுமாக காணப்படுகிறது

## வர்த்தகர்கள் முறைப்பாடு

மஸ்கெலியா, ஓக. 5

சாமிமலை நகரில் உள்ள பிரதான வீதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகிறது என வர்த்தகர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குன்றும் குழியுமாக உள்ள நெடுசாலையின் இரு மருங்கிலும் 200 இக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளன.

மழைக்காலங்களில் வர்த்தக நிலையங்களில் சேறு கலந்த நீர் தேங்கி நிற்பதால் வாகனங்கள் செல்லும்போது சகதி கலந்த நீர் பாதசாரிகள் மீது வீசப்படுகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள் சொல்லொண்ணாத் துயர் அடைகின்றனர்.

அத்துடன், நகரின் வடிகான்கள் அனைத்தும் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன. அதனால் அதில் தேங்கி நிற்கும் நீரின்மூலம் டெங்குநுளம்பு பரவும் அபாயம் உள்ளதாக அங்குள்ள மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்நகரில் முற்றிலும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டோர் மேற்கொள்ள வேண்டும் என்றும் வர்த்தகர்கள் வேண்டுகோள்விடுக்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத் தளபதியுடன் சூடான் அதிகாரி சந்திப்பு

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரியவை, சூடான் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி அப்துல் மொனியம்மை சந்தித் துள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை காலை இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான பொதுவான பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (சி)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கான

# சர்வகட்சிக் குழு ஒரு கண்துடைப்பு; எதிர்க்கட்சிகள் கடும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக 05

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட சர்வகட்சிக் குழு ஒரு கண்துடைப்பு நாடகமே என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

''தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றோ அவர்களின் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டுமென்றோ அரசு கருதவில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்டு 14 மாதங்கள் ஆகின்றன. இந்த நிலையில் அரசு சர்வகட்சி அறிக்கை தொடர்பில் எதுவித கவனமும் செலுத்தவில்லை'' என ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜான் தெரிவித்தார்.

இவர் இ.தொ.கா. சார்பில் சர்வகட்சிக் குழுவில் அங்கம் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு சமூகத்திடமிருந்து ஏதோவொன்றை மறைப்பதற்காகவே சர்வகட்சிக் குழு அறிக்கையை வெளியிடுவதில் அரசு காலம் தாழ்த்தி வருகிறது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அவசியம் அரசுக்கு கிடையாது. அரசு பல வழிகளிலும் வங்குரோத்து அடைந்து வருகிறது. ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே அரசு அதிககவனம் செலுத்தி வருகிறது என ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கிறார்.

சர்வகட்சியின் குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டு 15 மாதங்கள் கடந்து விட்டன. இந்த நிலையில் இக்குழுவில் அங்கம் வகித்த ஆர்.யோகராஜன், நிசாம் காரியப்பர் ஆகியோர் கடந்த 19 ஆம் திகதி ஊடகங்களுக்கு இந்த அறிக்கையை வெளியிட்டதும் தெரிந்ததே.

இந்த அறிக்கையைப் பெரும் சர்ச்சைக்கு மத்தியில் ஆர்.யோகராஜன் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்திருந்தார்.

(ஒ-சி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 23 ★ 11 ★ 1941



அமரத்துவம் 15 ★ 08 ★ 2009

### திருமதி பரமவதி இராசையா

திதி: தசமி (05.08.2010)

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து
கல்வி பல நூறு தந்து
வையகத்தில் தானுயர்ந்து
வாழ வழியமைத்த
ஆருயிர்த் தெய்வமே!
உவந்து போற்றுகிறோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

'பரமபதி',
அணியாவோடை,
அல்வாய் வடக்கு.

என்றும் உன் நினைவில்:
கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.


# சிறுவர் உதவிச் சேவைப் பிரிவுக்கு 2000 வரையான முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக 05

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அறிவிக்கும் சிறுவர் உதவிச் சேவைத் தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்துள்ள 22 முறைப்பாடுகள் தொடர்பாக தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிக்கிறது.

1929 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தமக்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.


கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக 48 மணித்தியாலங்களில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

நூற்றுக்கும் அதிகமான முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

விசாரணைகளின் பின்னர் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனச் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிடுகிறது. (சி)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 ★ 09 ★ 1953



மறைவு 05 ★ 08 ★ 2008

### அமரர் அருளப்பு என்சிலி மகாராஜா (கிளி)

எங்கள் உள்ளத்தின் சுடரொளியே
உறவுகள் ஒளியீந்த அகல் விளக்கே-அப்பா
உம்மைப் பிரிந்து இரண்டாண்டுகள் கடுகி விரைந்ததுவே!

இரண்டென்ன நூறாண்டுகள் சென்றாலும்
ஆறாதே எம் துயரம்
எம் உயிர் உள்ளவரை அப்பா! உங்கள்
நினைவு எம்மில் என்றும் வாழும்.

64/1, புகையிரத
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

உம் நினைவால் வாடும்:
மனைவி- சுசிலா,
பிள்ளைகள்- யான்சன், யான்சி,
கௌசிகன், கௌசீலன்,
கௌறீசன்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
02.06.1932

விண்ணில்
15.08.2009

திதி: 05.08.2010

அமரர்
### முத்தையா பாலசிங்கம்



ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
மீண்டொன்று பிறப்பென்றால்
வந்து விடுங்கள் எங்களிடம்.

குடும்பத்தினர்.

நவாலி வடக்கு. (101190)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி விதானையார் வீதியில் வைரவர் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவை இல்லை)

T.P.- 0718561208 (101410)

### வீடு வாடகைக்குத் தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 3 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு Annex ஆகவோ சிறிய வீடாகவோ யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: தொ.பே.இல-0212227561


### நல்லெண்ணெய் விற்பனைக்கு

தரமான T.R.C. நல்லெண்ணெய் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு ஒரு போத்தல் 300/=.

தொடர்பு: ஆஷா பான்சி
பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214922408, 0776537645

## நன்றி நவில்தலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 04 ★ 04 ★ 1946



விண்ணில் 05 ★ 07 ★ 2010

வைத்திய கலாநிதி

### அமரர் துரையப்பா சண்முகராஜா

கடந்த 05.07.2010 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவு அறிந்து எமக்கு ஆறுதல் கூறியும் மற்றும் பிறவழிகளிலும் உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (06.08.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதான வீதி, இளவாலை. (சி/56966) தகவல்: குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி





திதி:05.08.2010

நயினாதீவைச் சேர்ந்த

திருமதி நாகரத்தினம் துரைசிங்கம் அமரர் சின்னத்தம்பி துரைசிங்கம்

அம்மா அப்பா வென்று அரவணைத்த காலமெல்லாம்
எண்ணி நிதம் பார்க்கையிலே ஏங்கி மனம் தவிக்கின்றது
அன்பான மொழிகள் பேசி ஆதரித்த உங்கள் செயல்கள்
என்றுதான் மறக்கமுயுமோ ஓராண்டு மறைந்தாலும்
ஓயாது உங்கள் வார்த்தைகள்

7 ஆம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர்.


### பழுதடைந்த இளநீர்

தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்டு யாழ். வைத்தியசாலையின் சுற்றுப்புறத்தில் வைத்து விற்கப்பட்டுவரும் இளநீர்களிடையே பழுதடைந்த இளநீரும் வைத்து விற்கப்படுவதாகப் பாவனையாளர்களால் புகார் கூறப்படுகின்றது.

பச்சைக் குழைகளால் மூடப்பட்டு விற்கப்பட்டுவரும் இந்த இளநீர் வகைகள் பார்வைக்கு புதியது போலக் காணப்பட்டாலும் வீட்டிற்கு கொண்டு சென்று வெட்டிப் பார்க்கும் போது பழுதடைந்து காணப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது. (எ-53)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைப்படாதே சகோதரா

வாழ்க்கையில் முன்னேற விரும்புபவர்கள் பிறந்த கருத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பது உண்மை. இதற்குரிய எல்லையைக் கண்டுகொண்டவர் மட்டுமே பிறரால் பாதிப்படையாமல் மகிழ்ச்சியாக இருக்கலாம். அளவு மீறி பிறரது விமர்சனங்களுக்கு முக்கியம் தர ஆரம்பித்தால் குழப்பமும்வரும் அதேநேரம் முன்னேற்றமும் தடைப்படும்.

எம்மை எல்லோரும் பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் காணப்படும். இளைய தலைமுறைக்கு இவ்வாசை அதிகம். அதே நேரம் ஒரு செயல் நடக்காவிட்டால் தளர்ந்து போவது இளைய தலைமுறைக்குரிய இயல்பான விடயம்.

எம்மீது அக்கறையுடன் விமர்சிப்பவர்கள் விமர்சனத்தை மதிக்கலாம். ஆனால் அதற்காக எல்லோரின் விமர்சனத்தையும் மதிக்கவேண்டியதில்லை. இந்த அணுகுமுறை நமது வெற்றி மாளிகையின் முக்கியமான படிக்கட்டென்று நான் கருதுகிறேன். சரியா?

முற்றும் துறந்த முனிவராகப் போனால் கூட உலகம் அவனைக் கேலி செய்யும். இதற்கு உதாரணமாக ஒரு கதை உண்டு.

பட்டினத்தார் எத்தனை பெரிய துறவி. அவரையே உலகம் என்னபாடுபடுத்தியது. தெரியுமா? நடந்த களைப்பால் வயலில் பட்டினத்தார் இறந்து போனவரைப் போலப் படுத்திருந்தார்.

அந்த வழியால் போன இருபெண்கள் வரப்பு வழியால் நடந்து போக முடியாதபடி பட்டினத்தார் வரப்பு மீது தலைவைத்து படுத்திருந்தார். அதைக் கண்ட ஒரு பெண்''யாரோ மகான்'' என்று நினைத்து வணங்கி வரப்பிலிருந்து இறங்கி நடந்தாள். ஆனால் மற்றப்பெண் ஆமாம் ...ஆமாம் இவர் பெரிய சாமியார் தலையணையை வைத்து தூங்குவதைப் போல வரப்பு மேல் தலை வைத்துத் தூங்குகிறார் பார்... ஆசை பிடித்தவர் என்று கடுஞ்சொல்லை வீசினாள். அவர்கள் அங்கிருந்து சென்றவுடன் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார் 'ஆஹா எனக்கு இந்த அறிவு இன்றுவரை இல்லையே என வருந்தி வரப்பில் இருந்து தலையைக் கீழே வைத்துப்படுத்தார்.

சற்று நேரத்தில் அந்த இரு பெண்களும் அதேவழியாக திரும்பி வந்தனர். தலையை கீழே வைத்துப்படுத்த பட்டினத்தாரைப் பார்த்த முதல் பெண் பரிதாபப்பட்டு '' பார்த்தாயா?... நீ சொன்னபடி கேட்டு உடனே கீழே இறங்கிப் படுத்திருக்கிறார்.. இப்பொழுதாவது ஒத்துக் கொள் ... இவரொரு மகான் தானே! என்றான்.

உடனே மற்றப் பெண் '' அடிபோடி இவரெல்லாம் ஒரு சாமியாரா? தன்னைப் பற்றி யார் என்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கிறார். அதைப் பற்றிக் கவலைப்படுகிறார். இவரெல்லாம் ஒரு சாமியாரா? என்று திருப்பிக் கேட்டாள். பட்டினத்தாருக்கு தலை சுற்றியது.

அப்படி இருந்தாலும் உலகம் நம்மை விமர்சிக்கும் இது பேருண்மை. தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும். விமர்சிக்க வேண்டும் என்கிற வெறியுடன் விமர்சனத்தைப் புறக்கணித்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

**சுகி.சிவம்**

# இன்னும் கொஞ்சம் முன்னேறு



ஓர் அழகான காட்டில் மரத்தின் கீழே முனிவர் ஒருவர் தங்கியிருந்தார். காட்டின் ஆரம்பப் பகுதியில் முதியவர் ஒருவர் விறகு சேகரித்துக் கொண்டு இருந்தார். 12 வருடங்களாக விறகு சேகரித்து நகரில் போய் விற்று தன் வயிற்றுக் கஞ்சிக்கு வழி செய்வார்.

ஒரு நாள் தீடிரென முனிவருக்கு கருணை பிறந்தது. முதியவரைப் பார்த்துச் சிரித்தார். அவர் கையெடுத்துக் கும்பிட்டார். கையை உயர்த்தி ஆசிர்வாதம் பண்ணி இன்னும் கொஞ்சம் முன்னேறிச் செல் என்று கூறிவிட்டு நகர்ந்தார்.

அவரது கட்டளைப்படி கொஞ்சம் காட்டிற்குள் சென்றார். அவர் வெட்டாமலே விறகு எடுக்க முடிந்தது. அவற்றை அள்ளிச் சென்று விற்றார்.

இன்னும் கொஞ்சம் முன்னேறினார். அரிய வகை சந்தண மரங்களும் முதியவருக்கு அளவற்ற மகிழ்ச்சி வருமானம் பெருகியது, வாழ்க்கை இனிமையானது.

இன்னும் முன்னேறினார். அரிய வகைக்கற்கள் வைர வைடூரியங்கள் அவருக்கு அகப்பட்டன. வாழ்வு இன்னும் வளமானது.

இது ஒரு குழந்தைகள் கதை போல் இருக்கும். ஊன்றிக் கவனித்தால் நமது வாழ்வையே மாற்றும் வல்லமை மிக்கது.

இந்த முதியவர். அந்த முனிவர் சொன்ன மந்திரத்தை கருத்தில் கொண்டு மேலும் மேலும் முன்னேறியதால் வறியவராய் இருந்தவர் வாழ்வில் வளம் பெற்று இன்பம் பெற்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்.**

# பொன் மொழிகள்

- திறமை உள்ளவருக்கு வெற்றி நிச்சயம்! திறமை உள்ளவர்கள் மக்கள் சமூகத்தின் மீது அன்பும் நம்பிக்கையும் உள்ளவரானால் வெற்றி சர்வநிச்சயம்!
- அவமதிப்பு, அலட்சியம், அவமானம் இவையாவும் அக்கினிக் குஞ்சுகள்; விண்ணில் பாயும் நம் வெற்றிக் கலனுக்காக எரிசக்திகள்!
- தொழிலில் முயற்சி + தொடர்ச்சி =வளர்ச்சி என்ற சூட்சுமம் புரிந்தால் வெற்றி நிச்சயம்!
- வாழ்க்கையில் எப்போதாவது ஒருமுறை மரணத்தை சந்திக்கிறவன் வீரன்! மரணத்துக்கு மத்தியில் எப்போதோ ஒரு முறை வாழ்க்கையை சந்திக்கிறவன் கோழை!
- உச்சரிப்பில் பிழை வார்த்தைகள் தேர்வதில் பயிற்சியின்மை; சொல்லவந்த விடயத்தில் தெளிவும் தீர்க்கமும் இல்லாமை, பதற்றமும், பரபரப்பு கேட்டுக் கொண்டிருப்பவர் மீது நம்பிக்கையின்மை கேட்பவர்களைக் குறைத்து மதிப்பிடுதல்இவை எல்லாம்தான் தோல்விக்கான காரணங்கள்!''
- பிறரை நம்புவதில் சில சிக்கல்கள் உண்டு. என்றாலும் நம்புங்கள் அது நமக்குச் சாதகமானது என்று நம்புங்கள். கடவுளுக்கே 'நம்பர்' என்று ஒரு பெயர் உண்டு.
- வெற்றி - தோல்விகள் வாழ்வின் ஓரிரு சம்பவங்களை மட்டுமே சார்ந்தவை அல்ல! அவை முழுவாழ்வையும் சார்ந்தவை!
- உகந்ததைத் தேர்ந்தெடுத்து உறுதியாகப் படிப்பவர்கள் உருப்படுகிறார்கள்! அப்படி பிள்ளைகள் தேர்ந்தெடுப்பதைப் பெற்றோர்கள் நீங்களே தடுக்காதீர்கள்.
- சௌகர்யமான நம்பர் 2ஐவிட சங்கடமான நம்பர் 1ஆக இருக்கத் தீர்மானியுங்கள்.
- ''நிஜமான புகழ்... நிஜமானபுகழ்... வெற்றியின் வேர்! பொய்யான புகழ்... பொய்யான புகழ்... தோல்வியின் தாய்! இது புரிந்தவருக்கு வெற்றி நிச்சயம்.

தொகுப்பு: பு.தட்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்னோடிப் பரீட்சை - 2010, ஜூலை

## கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம், கண்டி.

## உயிரியல் விடைகள்

### பகுதி – I

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 - 4 | 11 - 2 | 21 - 4 | 31 - 3 | 41 - 5 | 51 - 4 |
| 02 - 3 | 12 - 2 | 22 - 5 | 32 - 3 | 42 - 2 | 52 - 3 |
| 03 - 3 | 13 - 1 | 23 - 1 | 33 - 4 | 43 - 1 | 53 - 3 |
| 04 - 4 | 14 - 4 | 24 - 3 | 34 - 2 | 44 - 3 | 54 - 4 |
| 05 - 3 | 15 - 1 | 25 - 4 | 35 - 1 | 45 - 3 | 55 - 4 |
| 06 - 3 | 16 - 4 | 26 - 3 | 36 - 1 | 46 - 1 | 56 - 3 |
| 07 - 2 | 17 - 4 | 27 - 3 | 37 - 1 | 47 - 2 | 57 - 1 |
| 08 - 2 | 18 - 4 | 28 - 2 | 38 - 4 | 48 - 4 | 58 - 2 |
| 09 - 1 | 19 - 1 | 29 - 5 | 39 - 1 | 49 - 2 | 59 - 5 |
| 10 - 1 | 20 - 4 | 30 - 3 | 40 - 1 | 50 - 2 | 60 - 3 |

### பகுதி – II, A அமைப்புக் கட்டுரை

01. A. 1) **Matthias Scheiden**
2) தாவரங்கள் யாவும் கலங்களால் ஆனவை.
3) 1. அங்கிகள் யாவும் ஒன்று/பல கலங்களால் ஆனவை.
2. அங்கிகளின் தொழிற்பாட்டலகும் கலமே.
3. முன்பிருந்த கலங்களிலிருந்தே புதுக்கலங்கள் தோன்றும்.
4) 1. தெளிவான அவதானம் ஊடாக பிரச்சினையை இனங்காணல்.
2. பிரச்சினை பற்றிய கருதுகோள்களை உருவாக்கல்.
3. கருதுகோளை சோதிப்பதற்கு பரிசோதனை மேற்கொள்ளல்.
4. கருதுகோளை ஏற்றல்/நிராகரித்தல்.
5. கொள்கை ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

B. 1) அதிகூடிய உருப்பெருக்கத்தை ஏற்படுத்துவதனால்/அதிகூடிய பிரிவலுவை கொண்டிருப்பதனால்.
2) $\frac{0.2\ \mu m}{0.2\ nm} \times 10^3 = \frac{2 \times 10^3}{2} = 1000$
3) $M_1D_1 = M_2D_2$ $50 \times 4 = 1000 \times D_2$ $D_2 = \frac{50 \times 4}{1000} \times 10^3 = 200\ nm$

பொருளின் பருமன் $= \frac{200}{4} = 50\ \mu m$
4) தாவரக்கலம்.
5) கோழியின் சூல்.
6) காழ், வல்லுருக்கலவிழையம்.

C. 1)

| கட்டமைப்பு | தொழில் |
|---|---|
| ER/SER/RER | கடத்தல்/சேமித்தல்/நச்சு நீக்கல்/இலிப்பிட்டுத் தொகுப்பு/கல்சியம் சேமித்தல்/கிளைக்கோ இலிப்பிட்டுத் தொகுப்பு. |
| கொல்கிச்சிக்கல் | சேகரித்தல்/சேமித்தல்/சுரத்தல்/இலைசோசோம் உருவாக்கல்/கிளைக்கோபுரதத் தொகுப்பு. |
| புடகம்/நுணுணுடல்/இலைசோசோம் | நச்சுநீக்கல்/கலத்தக சமிபாடு |

2) காற்றுவாழ் பிறபோசணையுள்ள பற்றீரியா.
3) இழைமணிகளும், பற்றீரியாக்களும் ஒரே பருமனுடையவை.
அவற்றில் ஒரே வகை இரைபோசோம் உள்ளது.
அவற்றில் ஒரே வகை வட்ட DNA/ நிர்வாணஎ DNA உண்டு.
அவை தானாக தற்பகட்பு அடைகின்றமை.
இழைமணி இருமென்சவ்வுகளை கொண்டிருக்கின்றமை.
4) SER

D. 1) P டிபொட்சி இறைபோசு வெல்லம்.
Q-அடினைன், R-தைமின், S-சைற்றோசின், T-குவானின்.
2) DNA யில் உள்ள புரத்தொகுப்புக்கான தகவல்.
3) $4^3 = 64$
4) மாதிரிகளை பெனடிக் கரைசலுடன் வெப்பமேற்றவும்.
செங்கட்டி சிகப்பு வீழ்படிவைத் தருவது இலற்றோசு ஆகும்.
எஞ்சியவற்றின் மாதிரிகளுக்கு KOH, $CuSO_4$ சேர்க்கவும்.
ஊதாநிறம் தருவது இன்வெற்றேசு ஆகும்.
எனவே, எஞ்சிய கரைசல் குளுட்டமிக்கமிலம் ஆகும்.

02. A a. 1) குரல்வளை, வாதனாளி, வலது சுவாசப்பைக் குழாய், இடது நுரையீரல் காற்றுப்பை/சிற்றறை.
2) போலிப்படை கொண்ட பிசிர்க்கம்ப மேலணி.
3) பளிங்குக் கசியிழையம். b. 1) $HCO_3^-$
2) Echinodermata
3) ஈமோசயனின் 4) வாதனாளி – Insecta/ Chilopoda/ Diplopoda

B 1) வற்றுப்பெருக்குக் கனவளவு, உயிர்க் கொள்ளளவு, மீதிக் கனவளவு
2) 6000, 3000 3) 4-5
4) காற்றூட்டல் வீதம் அதிகரித்துள்ளது.
காற்றூட்டலின் ஆழம் அதிகரித்துள்ளது.
5) உட்சுவாச வளியின் நுரையீரல்களைச் சென்றடையாமல் சுவாசச்சுவட்டில் தேங்கி நிற்கும் வளியின் கனவளவு.
6) $\frac{350}{500} \times 100\% = 70\%$

C 1) ஒரு சீர்த்திட நிலை
2) a - பராதோமோன் b - இன்சுலின்
c - கோட்டிசோல் d - LH GH

3) 36.8 / 36.9ºC / 98.4ºF 4) Thyroxine, Adrenaline
5) பரிவகக்கீழ் 6) Mammalia, Aves

D. 1) வயிற்றுக் குழியில், ¼ பகுதியில், வலது புறமாக, மேல் அரைப்பகுதியில்.
2) உடல் வெப்பநிலை சீராக்கல்/நச்சுநீக்கல்.
குருதி குளுக்கோசு மட்டத்தை சீராக்கல் / குருதி இலிப்பிட்டை சீராக்கல் குருதி அமினோவமிலம் /புரதங்களை சீராக்கல்.
3) பித்தச்சாறு. 4) பித்தப்பையில்.
5) கோலீசிஸ்ரோகைனின்/CCK
6) கிளைக்கோசன் 7) Fibrinogen / Prothrombin.
8) <u>Plasmodium</u> <u>vivax</u>

03. A. 1) ஒரே காலநிலை நிலவும், ஒரே வகை அங்கிகளை/ சாகியத்தை தாங்கிய, உலகின் பாரிய பரப்பில் வியாபித்துக் காணப்படும் ஒத்த சுழற்றொகுதிகள் யாவும்.
2) P - இடைவெப்பநிலை என்றும் பசுமையான ஊசியிலை/கூம்புள்ள காடு.
Q - தந்திரா /பனிப்பாலைநிலம், R - அயனமண்டல ஈர மழைக்காடு
S - அயனமண்டல புல்நிலம், T - இடைவெப்பநிலை பாலைநிலம்
3) வெப்பநிலை 4) பாலைநிலம் 5) Steppes

B. 1) 1. ஓசோன் படையை பாதுகாத்தல்.
2. ஈரநிலங்களைப் பாதுகாத்தல்.
3. சமுத்திரத்தைப் பாதுகாத்தல்.
4. அரிய வர்க்கங்களைப் பாதுகாத்தல்.
2) N ஒட்சைட்டுக்கள் ($NO_2$), S ஒட்சைட்டுக்கள் ($SO_2$ / $SO_3$)
3) 1. வாகன வெளிப்படுத்தி.
2. கைத்தொழிற் சாலை வெளிப்படுத்தி.
4) 1. இயற்கை காடுகள் அழிக்கப்படும்/மண்/நீர் அமிலமாகும்.
2. உயிர்ப்பல்வகைமை குறையும்/உலோகக் கட்டமைப்புகள்/சுண்ணாம்புக் கட்டமைப்புகள் அழியும்.
5) பச்சை வீட்டு விளைவு, ஓசோன் படை மெலிவுடைதல்.

C 1) 1. நெருக்கடியான ஆபத்துக்குள்ளானவை (CR)
2. ஆபத்துக்குள்ளானவை (EN)
3. ஆபத்துக்குள்ளாகும் சாத்தியப்பாடுள்ளவை (VU)
2) CR
3) 1. யானை - ஆபத்துக்குள்ளானவை (EN)
2. தேவாங்கு - ஆபத்துக்குள்ளாகும் சாத்தியப்பாடுள்ளவை (VU)
4) ஒரு நாட்டுக்கு மாத்திரம் இயற்கையில் எல்லைப்படுத்தப்பட்டதும் வேறு எந்த ஒரு நாட்டிலும் இயற்கையாக காணப்படாததும் ஆன இனங்கள்.
5) <u>Dipterocarpus</u> <u>zeylanicus</u>
6) 1. கடல்வாழிகளாக இருத்தல்.
2. பறக்கக்கூடியவையாக இருத்தல்.

D. 1) $3.5 \times 10^9$ 2) பிறபோசணி
3) சயனோபற்றீரியா 4) 500
5) Mesozoic 6) Ammonites
7) Mammoth 8) <u>Ichthiophis</u> <u>glatinosns</u>
9) a. தேசிய பூங்கா/சரணாலயம்/புகலரண்/வன ஒதுக்கம்/மனித உயிர்க் கோள ஒதுக்கம்/இனங்களை மீள அறிமுகம் செய்தல்.
b. தாவரவியல்/விலங்கியற் பூங்கா/அனாதை இல்லம்/கட்டுப்பட்ட இன விருத்தி நிலையம்.

04. A. 1) P-மென்சவ்வு, Q-மணியுரு, R-பஞ்சணை, S-உச்சி/உள்மென்சவ்வு, T-தாயம்
2) கல்வின் வட்டம் 3) கிரப்பின் வட்டம்
4)

| R இல் நிகழும் தாக்கம் | T இல் நிகழும் தாக்கம் |
|---|---|
| $CO_2$ நாட்டப்படும் | $CO_2$ வெளிவிடப்படும் |
| ATP பயன்படுத்தப்படும் | ATP உற்பத்தி செய்யப்படும் |
| இலத்திரன் வாங்கி தாழ்த்தப்படும் | ஒட்சியேற்றப்படும் |
| கீழ்ப்படை ஒட்சியேற்றப்படும் | தாழ்த்தப்படும் |

5) $4H_2O \quad 2H_2O + O_2 + 4H^+ + 4e$

B. 1) நீர் 2) P – 700
3) Phospho enol pymvte / PEP 4) 40 – 60 ppm
5) வளிமண்டல $CO_2$ 6) Robert Hill
7) இழைமணி 8) கலமென்சவ்வில்/மீசோசோமில்
9) Pyruvic acid / Pyruvate
10) அதிகரிக்கும்/0.7 இலிருந்து 0.85 ஆகும், பின் 1 ஆகும்.

C 1) விலங்குடலில் காணப்படும், நோயாக்கி/உடலெதிரியாக்கிக்கு எதிராகச் செயற்படும் தனித்திறன் உள்ள எதிர்ப்புப் பொறிமுறை.
2) நிணநீர்க் குழியம்/Lymphocyte
3) பிறபொருளெதிரி/Immnoglobuilin
4) இயற்கை பெற்ற மந்தமான.
5) நோயாக்கியின் வலுகுறைக்கப்பட்ட நச்சு.
6) குற்றுப்பால் தயாரித்தல்/பிரபொருலெதிரியுடை நீர்ப்பாயம் தயாரித்தல்.
7) <u>Salmonella</u> <u>typhi</u>
8) உமிழ்நீர்/கண்ணீர்.
9) பற்றீரியாக்களின் கலச்சுவரை அழிக்கும்.
10) Polymyxine

D. 1) சுற்றிவளைப்பு வலை/கப்பல் வலை.
2) தொடுமுளைகள் இருத்தல். 3) குராமி/ஏன்ஜல்.
4) ப்ளாந்தன், சிறிய விலங்கு. 5) செறிவான முறை.
6) பிற்குடம்பி (Post Larvae) 7) வெண்பொட்டு.
8) <u>Lantana</u> / <u>Enpatorium</u>
9) அலிலோப்பத்திக்குரிய இயல்பைக் காட்டும்.
10) 2 , 4-D / MCPA

நேரடித் தொடர்புகளுக்கு:
ஆசிரியர், S.H.A.மௌலானா BSc,
கேம்பிரிட்ஜ் கல்விநிலையம்,கண்டி. தொ.பே.இல: 077-3299706


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் - 03 | பகுதி - II

* எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. படத்தில் காட்டப்பட்டுள்ள சனத்தொகைக் கூம்புகளில் A, B, C, D முறையே உள்ளடங்கும் ஒவ்வொரு நாடுகளைப் பெயரிடுக.




1) கூம்பு "A" இல் உள்ள பொதுவான சனத்தொகை நிலைமாற்ற அம்சங்கள் ஐந்தைக் குறிப்பிடுக.
2) கூம்பு "D" இல் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முன்வைக்கத்தக்க தீர்வுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

02. 1) இலங்கைப் புறவுருவப்படத்தில் தெங்கு/இறப்பர் செய்கையில் சிறப்பான மூன்று மாவட்டங்களைக் குறித்துப் பெயரிடுக.
2) நீர் குறித்த பயிரினை சந்தைப்படுத்தும்போது ஏற்பட்டுள்ள நான்கு பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.
3) நீர் குறித்த பயிர்ச்செய்கையை விருத்தி செய்வதற்கு அரசு எடுத்துவரும் அண்மைக்கால நடவடிக்கைகளை விளக்குக.

03. 1) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை நடைபெறும் மூன்று பிரதேசங்களை உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
2) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையினால் ஏற்பட்டுவரும் சூழல் தாக்கங்கள் நான்கை விளக்குக.
3) பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையின் அண்மைக்காலப் போக்குகளை விளக்குக.

04. 1) இந்தியப் புறவுருவப் படத்தில் இரும்புருக்கு மையங்கள் நான்கைக் குறித்துப் பெயரிடுக.
2) நீர் குறித்த மையங்களில் ஏதாவது ஒரு மையத்தைத் தெரிவுசெய்து அம் மையம் இரும்புருக்குத் தொழிலில் பிரசித்திபெறுவதற்கு ஏதுவான நான்கு காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.
3) இந்தியப் பொருளாதாரத்தில் இரும்புருக்குத் தொழில் எத்தகைய பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

05. 1) இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வரும் சுற்றுலா மையங்களைக் குறித்துப் பெயரிடுக.
1. பின்னவெல. 2. சிகிரியா.
3. வில்பத்து. 4. ஹிக்கடுவை.
5. அறுகங்குடா. 5. கதிர்காமம்.
2) உயிரியல்சார் சுற்றுலாவின் நான்கு அனுகூலங்களை விளக்குக.
3) சுற்றுலாத்துறையை மேம்படுத்த அண்மைக்காலமாக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைச் சுருக்கமாக ஆராய்க.

06. 1) பின்வரும் நாடுகளில் இலத்திரனியல் தொழிலில் சிறந்துவிளங்கும் ஒவ்வொரு மையங்களைப் பெயரிடுக.
1. இந்தியா. 2. மலேசியா.
3. U.S.A 4. ஜப்பான்.
2) இலத்திரனியல் தொழிலில் இன்று புதிய கைத்தொழில் நாடுகள் துரிதமாக வளர்ச்சியடைவதற்கு ஏதுவான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.
3) தகவல், தொடர்பாடல் துறைகளில் இலத்திரனியல் தொழிலின் பங்களிப்பை விளக்குக.

07. 1) இலங்கையில் அமைக்கப்பட்டுவரும் அதிவேக நெடுஞ்சாலைகள் மூன்றைப் பெயரிடுக.
2) இலங்கையின் நெடுஞ்சாலைப் போக்குவரத்தின் அண்மைக்காலப் போக்குகள் நான்கினை விளக்குக.
3) நெடுஞ்சாலைகளின் போக்குவரத்தினை விட விமானப் போக்குவரத்தின் அனுகூலங்களை விளக்குக.

08. 1) "உலகமயமாதல்" என்பதை விளக்குக.
2) உலகமயமாதலினால் 3ஆம் உலக நாடுகள் அடையக்கூடிய நான்கு அனுகூலங்களை விளக்குக.
3) உலகமயமாதலை எதிர்க்கும் நாடுகளைக் குறிப்பிட்டு, அவை இக்கொள்கையை எதிர்ப்பதற்கான காரணங்களை விளக்குக.

-நிறைவுற்றது-

## விடைக் குறிப்புகள்

### வணிகக் கல்வி 02, பகுதி I (03.08.2010)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-3 | 03-2 | 04-1 | 05-3 | 06-4 | 07-2 | 08-2 | 09-3 | 10-3 |
| 11-1 | 12-1 | 13-1 | 14-1 | 15-4 | 16-3 | 17-2 | 18-3 | 19-4 | 20-5 |

21 - வணிகத் திட்டம்.
22 - பொருட்கள் சேவைகள் மூலமாக தள்ளும் முயற்சியாண்மை.
23 - உபாயவழித் திட்டம். 24 - ஊக்குவிப்பு குறைவு.
25 - பதிலளிக்கத்தக்க பொறுப்பு. 26 - தொடர்பாடல், வாய்மொழித் தொடர்பாடல்.
27 - உற்பத்தி மதிப்பீடு.
28 - 1 - சிரேஸ்டத்துவம் / சேவைமூப்பு 2 - திறன் / கெட்டித்தனம்.
29 - 1-இறேகைக்கோடுகள், 2-(பிரதிவிம்பம் / நிழற்படம்.)
30 - முறையான விநியோகம்.
31 - 1 - உரியநேர உற்பத்தி முறை 2 - உத்தமமட்ட உற்பத்தி.
32 - இலங்கை மத்திய வங்கி.
33 -

| இயல்பு | பிரதான பலகை | டிரிசவி பலகை |
|---|---|---|
| இழிவு மூலதனம் | 100 மில்லியன் ரூபா | 35 மில்லியன் ரூபா |
| பொதுமக்களுக்குரிய இழிவுப் பங்குகள் | 25% | 10% |

34 - போக்குவரத்துக்கான கிரயம்.
35 - 1 - உற்பத்தி ஆய்வு, 2 - சந்தை ஆய்வு. 36 - வலுச்சந்தை.
37 -

| இயல்பு | பரந்த விநியோகம் | விசேட விநியோகம் |
|---|---|---|
| பொருள் | வசதிப்பொருள் | கடைப்பொருள் |
| நடுவர்கள் | மொத்த வியாபாரியும், சில்லறை வியாபாரியும். | மட்டுப்படுத்தப்பட்ட சில்லறை வியாபாரி. |

38 - கூட்டு உடன்படிக்கையைத் தொழில் ஆணையாளர் ஏற்று அதை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கும்போது.
39 - 1 - துண்டம், 2 - குறுஞ் சந்தை, 3 - உள்ளூர், 4 - தனிநபர்.
40 - 1 - உயர்/நெடு ஒழுங்கமைப்பு, 2 - குறுகிய/விசால அமைப்பு.

தொகுப்பு: B.S.பசீல், DMI, யாழ்ப்பாணம்.

## முன்னோடிப் பரீட்சை - 2010, ஜூலை


## கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம், கண்டி.

## இரசாயனவியல்

Two Hours

பகுதி II - B கட்டுரை
எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

05. a) 1) மூலக்கூற்று இயக்கவியல் சமன்பாடு $3PV = mNC$ இல் இருந்து இலச்சிய வாயுச் சமன்பாட்டைப் பெறுக.
2) மேலே சமன்பாடுகளை பாவித்து $T^0C$ வெப்பநிலையில் வாயு மூலக்கூறின் சராசரி இயக்கசக்தி E இற்குரிய சமன்பாடு R, T, L இல் தருக. இங்கு R - அகில வாயு மாறிலி. L -அவகாதரோ மாறிலி
3) $0^0C$ இல் ஒட்சிசன் வாயுவின் மூலகதிவர்க்க இடையை கணிக்குக. ஒட்சிசன் வாயு இலச்சிய வாயு எனக்கருதுக. (O-16)
4) கீழே வரிப்படத்தில் ஒட்சிசனின் மூலக்கனவளவைத் துணியும் முறை தரப்பட்டுள்ளது. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.





1. போக்கு குழாயின் உயரம் வாயுச்சாடியின் உயர்மட்டத்திற்கு வைப்பதற்கான காரணம் யாது?
2. கொதிக் குழாயின் தக்கையின் ஊடாக ஒட்சிசன் வாயு கசிவு நிகழ்கிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனையைத் தருக.

b) கீழே தரப்பட்டுள்ள P,Q,R உம் S சமன்பாடுகள் யாவும் சமநிலைத் தொகுதியைக் குறிக்கும்.

P - $N_2(g) + O_2(g)$ $2NO(g)$ ; $\Delta H^\theta = +180\ kJ\ mol^{-1}$
Q - $N_2O_4(g)$ $2NO_2(g)$ ; $\Delta H^\theta = +58\ kJ\ mol^{-1}$
R - $3H_2(g) + N_2(g)$ $2NH_3(g)$ ; $\Delta H^\theta = -92\ kJ\ mol^{-1}$
S - $H_2(g) + I_2(g)$ $2HI(g)$ ; $\Delta A^\theta = -10\ kJ\ mol^{-1}$

1) இயக்க சமநிலை என்பதில் இருந்து யாது விளங்குகிறீர்?
2) R இன் தாக்கத்திற்கு ஊக்கியாக தூளாக்கப்பட்ட Fe பயன்படும். இங்கு ஊக்கியின் தொழிற்பாடு யாது? சமநிலை புள்ளியில் ஊக்கியின் பாதிப்பு யாது?
3) R இன் சமநிலைத் தாக்கத்தைக் கருதுக. $H_2(g) : N_2(g)$ மூலர் விகிதம் 3:1 எனும் விகிதத்தில் சேர்த்து $45^0C$ இல் சமநிலை அடைய விடப்பட்டது. சமநிலையில் $NH_3(g)$ இன் மூல் பின்னம் 0.6 ஆகவும், மொத்த அமுக்கம் $1 \times 10^4$ Pa ஆகவும் இருப்பின் Kp ஐ கணிக்குக.
4) மேலே தாக்கங்களில் ஒன்றின் மாத்திரம் அலகு $mol\ l^{-1}$ ஆகும். அத்தாக்கத்தை இனம்கண்டு அதற்குறிய Kc இன் கோவையை எழுதுக.
5) P, Q, R, S தாக்கங்கள் நான்கின் மூன்று தாக்கத்தின் அமுக்கம் அதிகரிப்புடன் விளைவுகள் சதவீதம் மாறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.




அ) P,Q,R,S தாக்கங்களில் x, y, z இற்குப் பொருத்தமான தாக்கங்களை இனங்காண்க.
ஆ) x எனும் வரைபிற்கு உரிய தாக்கம் கைத்தொழிலில் உற்பத்தி செய்யும்போது குறைந்த அமுக்கம் பாவிப்பது இல்லை ஏன்?
இ) மேலே வரைபில் Z எனும் வரைபை (Z கோடு) உமது விடைத் தாளில் வரைந்து மிகவும் கூடிய வெப்பநிலை பாவித்தால் அமுக்கத்துடன் Z மாறும் வீதத்தை வரைந்து Z′ என பெயறிடுக.

c) $FeCl_3(aq)$ அமிலமாக தொழிற்படும் என்பதை உலோரி பிரவுன்ஸ்ட் அமில மூலக் கொள்கை அடிப்படையில் விளக்குக.

06. Polytetra fluorethere (PTFE) எனும் பல்பகுதியத்தின் ஒருபகுதியம் $CF_2=CF_2$ ஆகும். இவ் ஒருபகுதியம் பின்வருமாறு தயாரிக்கப்படும்.

முறை I: $2CHClF_2(g)$ $CF_2 = CF_2(g) + 2HCl\ (g)$
இங்கு $CHClF_2$ உயரமுக்கம் தாழ் வெப்பநிலையில் சூடாக்கப்பட்ட ஆவியில் ஐதாக்கி பாவிக்கப்படும்.
மேலும் $CF_2 = CF_2$ பின்வருமாறும் தயாரிக்கலாம்.

முறை II: $2CHF_3(g)$ $CF_2 = CF_2(g) + 2HF(g)$ $\Delta H = 198.1\ kJ\ mol^{-1}$

| சேர்வை | HCl | $CHClF_2$ | $CF_2=CF_2$ | $CF_4$ | $CCl_4$ |
|---|---|---|---|---|---|
| தோ.வெ.உ $kJ\ mol^{-1}$ | -92.3 | -485.2 | -658.3 | -106.6 | -679.6 |

| மூலக்கூறு | F-F | Cl - Cl |
|---|---|---|
| பிணைப்புச் சக்தி $kJ\ mol^{-1}$ | 154.7 | 246.7 |

a) மேலுள்ள தரவுகளை பாவித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.
1) மேலே முறை I இல், $CF_2 = CF_2(g)$ தொகுப்பிற்குறிய தாக்கத்தின் வெப்பவுள்ளுறையை கணிக்குக.
2) வெப்பநிலை உயர்வு tetrafluorethene விளைவு உருவாதலில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும்?
3) மேலே (2) இல் தரப்பட்ட விடை பரிசோதனை நிபந்தனையுடன் தொடர்புபடுவது எவ்வாறு?
4) tetrafluorethene தயாரிப்பில் முறை (I) or முறை (II) மிகவும் பொருத்தமானது என விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



குடும்ப உறுப்பினர்களையோ அல்லது நண்பர்களையோ கேலி பேசி அதில் மகிழ்ச்சி அடைவீர்கள். இரண்டு நாள்களாக இழுத்தடித்த பிரச்சினை ஒன்று இன்று முடிவுக்கு வரலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள்.

### இடபம்



செலவுகளில் தாராளம் காட்டும் நாள். சொல்வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். நாளை வரும் என, நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். தேக ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

### மிதுனம்



வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். கனவுகளால் குழப்பம் உண்டாகும். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். பக்தி நாட்டம் கூடும்.

### கடகம்



சில நாள்கள் கழித்துச் செய்யலாம் என நினைத்த வேலை ஒன்றை இன்றே செய்வீர்கள். எதிர்பாராமல் பால்ய நண்பர் ஒருவரை சந்திக்கலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். கைமாத்தாக கொடுத்த பணம் திரும்ப வரலாம். வெளியூர்களில் இருக்கும் சிலர் உங்களிடம் நல்ல தகவல்களைச் சொல்லலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

### சிங்கம்



குடும்பத்தினருடன் கோவில்களுக்கு செல்லலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகள் உருவாகும். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். அவ்சர தேவை ஒன்றுக்காக பொன், பொருள்களை அடகு வைக்கலாம். குழப்பம் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவெடுப்பீர்கள்.

### கன்னி



சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உதிரி வருமானம் கைக்கு கிடைக்கலாம். சகோதரர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சில விடயங்களில் மற்றவர்களிடம் ஏமாறலாம். பிள்ளைகளால் தொல்லையுண்டு.

### துலாம்



நிச்சயம் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம். சிறிய பிரச்சினை ஒன்றுக்காக குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதம் செய்யலாம். வீட்டுக் குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

### விருச்சிகம்



வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம், தெம்பு குடிகொள்ளும் நாள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். இளைய சகோதரர்கள் உங்களின் முயற்சிக்கு துணையாக இருப்பர். உங்களுக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

### தனுசு



எதிலும் மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். சுய நலத்தோடு நடந்து கொள்ளும் சிலரைப் பார்த்து எரிச்சல் அடையலாம். மனைவி, குழந்தைகள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். எங்காவது வெளியில் செல்லும் போது வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள்.

### மகரம்



சிறிய வேலை ஒன்றுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். ஒரு விடயம் பாதகமாக நடப்பது போல தோன்றினாலும், இறுதியில் சாதகமாக நடக்கும். உறவினர்கள் சிலரின் செயற்பாடுகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். சிலருக்கு நல்ல யோசனைகள் சொல்வீர்கள்.

### கும்பம்



பிறரை நம்பி உங்கள் வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். சில வேலைகளுக்காக ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம். மற்றவர்களின் நிர்ப்பந்தங்களுக்கு ஆள்பட்டு சில காரியங்களைச் செய்வீர்கள். ஒருவர் தகுதிக்கு மீறி நடந்து கொள்வதைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம்.

### மீனம்



வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். உறவுப் பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். சொத்துக்கள் வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் எச்சரிக்கை அவசியம். உங்களின் யோசனைக்கு நண்பர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும். எந்த வேலையையும் பிறகு என, தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள்.


## மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்




**திரு நா.வன்னியசிங்கம்** (B.Sc (mgt) Hons, Dip.in.Ed) அதிபர், யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

**அன்பாலும் பண்பாலும் கல்விச் சமூகத்தை முப்பத்துநான்கு ஆண்டுகள் வழிநடத்தும் பாதையில் ஆசானாகி, பகுதித்தலைவராகி, உபஅதிபராகி, பிரதி அதிபராகி, அதிபராகி தன் சேவையை அல்லும், பகலும் கல்லூரி வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவரும்........**

**கல்வி எனும் ஆழ்கடலில் கணக்கியல் ஆசானாகவும் தனியார் நிறுவனங்களில் கணக்கியல் புலியாகவும் திகழ்ந்தவருமாகிய...**

**எம் கல்லூரி மணிவிழா நாயகனை இந் நந்நாளில் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறோம்.**

கல்லூரிச்சமூகம்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர்சங்கம்.

(101434)


## குருநகர் கழிவு நீர் மதகு புதிதாக நிர்மாணம்

கொழும்புத்துறை,ஓக.5

குருநகர் பாங்சால் வீதி- இராசேந்திரா வீதி சந்தியில் அமைந்துள்ள கழிவு நீர் மதகு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

நீண்ட காலமாக சேதமடைந்திருந்த இம்மதகு யாழ்.மாநகர சபையால் புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற்று வரு கின்றன.

இவ் வீதியூடாக போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதால் வாகனங்கள் வேறு பாதைகள் ஊடாகச் செல்கின்றன. (ஓ-135)

## யாழ்.மரியாள் பேராலய வருடாந்தப் பெருவிழா

யாழ்.புனித மரியாள் பேராலய வருடாந்தப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் வழிபாட்டு ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு இடம் பெறும்.

நற்கருணைப் பெருவிழா 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்று நற்கருணைப் பவனி இடம்பெறும்.

திருநாள் திருப்பலி புனித மரியாளின் விண்ணேற்புத் தினமாகிய ஆவணி 15ஆம் திகதி காலை 6.30 மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் அருளப்படும்.

(ஓ-135)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. டாக்டர்
மரிசலின்பிள்ளை மரியதாசன்
(சுகாதார வைத்திய அதிகாரி, மாநகரசபை)
அவர்கள் 21.10.2009 அன்று
யாழ்.மாவட்ட நீதிமன்ற
நீதிபதி திரு.இ.வசந்தசேனன் முன்னிலையில்
இலங்கைத் தீவு முழுவதுக்குமான சமாதான
நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து
கொண்டதைப் பாராட்டுவதுடன், அவரது
சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

யாழ்.மாநகரசபை.
சுகாதார நலன்புரிச் சங்கம்.

(101510)

**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
- தபால் மூலம் -
**July.2010 to Dec..2010**
தமிழ் மொழி மூலம்

- ~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- ~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- ~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- ~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- ~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844 / 071 803 48 48**


**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2010**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் குருதேவர் சிவா சுப்பிரமுனிய சுவாமிகள் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமெரிக்கப் பிரசை 65 பேர் கொண்ட அமெரிக்க நடனக் குழுவின் உறுப்பினராக, குழுவின் இயக்குநராக இலங்கைக்கு வந்தார். எதிர்பாராத விதமாக யாழ்ப்பாணத்தில் நிகழ்வுகளை நடத்துவதற்காக வந்திருந்த வேளையில் நண்பர் ஒருவரின் அனுசரணையுடன் அளவெட்டியில் தங்கியிருந்த அவர் யோகர் சுவாமியால் கவரப்பட்டு யோகர் சுவாமியைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டார். நடனக் குழுவை விட்டு நீங்கி இந்து சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு ஆத்மீக வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். அமெரிக்காவிற்கு அருகில் உள்ள ஹவாய் தீவில் தங்கியிருந்து ஆச்சிரமம் அமைத்து அறப்பணி மேற்கொண்டார்கள்.

சிவா சுப்பிரமுனிய சுவாமிகளின் இந்துமதப் பிரவேசம் அமெரிக்கப் பிரசைகள் மத்தியில் ஆத்மீகம் சார் ஈடுபாட்டையும் பல நூற்றுக் கணக்கான அமெரிக்கர்களை சுவாமிகளின் சிசியர்களாகவும் மாற்றியது. இந்து சமயத்தின் தத்துவார்த்த உண்மைகளைத் தலைமேற்கொண்டு தூய இந்துக்களாக வாழ வழிகாட்டியது. கோப்பாயில் பிறந்த இராஸ்குமாரை தொண்டு நாத சுவாமிகள் என்ற தீட்ஸா நாமத்துடன் ஹவாய் தீவில் தங்கியிருந்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாட்டு பிரசைகளை இந்து சமயத்தின் பால் ஈடுபாடு கொள்ள வைத்தது. கோப்பாயில் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி கோட்டம் என்ற பெயரில் அறம் - ஆத்மீகம் - கல்வி சார் பணிகளுடன் சமூக மேம்பாட்டுக் கான பணிகளை முன்னெடுக்கும் நிறுவனம் ஒன்றை நிமிர்ந்து நிற்க வைத்தது.

குருஜி சிவா சுப்பிரமுனிய சுவாமிகள் கங்கையில் கண்டெடுத்த சிவலிங்கத்தைத் தனது சொந்தப் பாவனையில் வைத்து பூஜித்து வழிபட்ட ஆத்மீக ஈடேற்றத்துக்கானதுமான 'சத்திய சுயம்புலிங்கத்தை' ஆத்மாத்த தரிசனத்துடன் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்துக்கு வழங்கி அதனை கோப்பாய் வீரபத்திரர் கோயில் வெளி வீதியின் தென் கிழக்கு மூலையில் தனது கையாலேயே பிரதிஷ்டை செய்து அழகான ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆலயத்தில் தினசரி ஒரு காலப் பூசை வழிபாடு நடைபெறுகின்றது. சிவராத்திரி விழா உட்பட முக்கிய தினங்களில் சிறப்பு பூஜை வழிபாடு நடைபெறுகின்றன.

சத்திய சுயம்புலிங்கேஸ்வரர் ஆலயம் என குருஜி சிவாசுப்பிரமுனிய சுவாமிகளால் நாமம் சூட்டப்பட்ட ஆலயத்தில் நடைபெறும் சிவராத்திரி விழா பூசை வழிபாடு குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது. சிவராத்திரி அன்று இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலில் இருந்து ஆண்களும் பெண்களும் பாற்குடம் ஏந்தி ஊர்வலமாக சத்திய சுயம்புலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டு பால் அபிஷேகம் செய்து வழிபடும் காட்சி ஆத்மீக தரிசனமாகும்.

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்சார் பணிகளின் தூய்மையான முன்னெடுப்புக்களையும் ஆத்மீகம் சார் உறுதியையும் வலியுறுத்தும் வகையில் சுவாமிகளின் பிரதம சிஷ்யன் தொண்டு நாத சுவாமிகளின் பெற்றோரான கனகரத்தினம் - சிவலோசனி தம்பதிகளை சிதம்பரத்துக்கு அழைத்துச் சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் தீட்சை வழங்கி அவர்களை ஆன்மீக ரீதியாக உள்ளீர்த்து ஆன்மீக அறப்பணி மேற்கொள்வதற்கு வழிசமைத்துள்ளார்.

*(தொடரும்)*

தொகுப்பு : ஞான ஆதவன்




# உரும்பிராய் இந்துக் கல்லூரி




*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வலி.கிழக்கு கல்விப் பாரம்பரியத்தின் அடித்தளமாக இருந்து கல்வி வளர்ச்சிக்கு உதவியதோடு பல்வேறு வளவசதிகளோடும் உயர்ந்து நிற்கும் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய அதிபர்கள் என்ற வகையில், சின்னையா, பண்டிதர் வேலுப்பிள்ளை ஆகியோர் ஆரம்பகால அதிபராகவும், தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றி கல்லூரிக்கு உறுதியான அடித்தளத்தை இட்டு வைத்தனர். வியாகேசன் - 1915 - 1920, குமாரசாமி 1920-1923, தம்பு - 1923-1926, சீதாராமன் 1926-1935, இராசரத்தினம் 1935-1937, சீதாராமன் 1937-1951, ஸ்ரீனிவாசன் 1951-1957, ஏ.வைத்தியலிங்கம் - 1958-1971, சச்சிதானந்தம்- 1972-1974, சுவாமிநாத சர்மா - 1974-1975, தியாகராசா - 1975-1975, கனகலிங்கம் - 1975-1976, சிவானந்தன் - 1976-1986, சிவபாலன் - 1986-1996, சண்முகரத்தினம் - 1996-1998, அ.ஈஸ்வரநாதன் 1999 இல் இருந்து இன்றுவரை.

பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலைச் சமூகத்துக்கு இருக்கும் ஈடுபாடு மிக முக்கியமானது. அதிபர், ஆசிரியர்களின் முன்னெடுப்புக்களுக்கு பாடசாலைச் சமூகம் கைகொடுக்கும் போது குறித்த இலக்கினை அடைவதில் இடையூறு இருக்காது. இந்த வகையில் பாடசாலைச் சமூகம் - உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு வழங்கி வரும் ஆதரவு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரியை தரிசிக்கும்போது வீதியோரத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கும் மாடிக் கட்டடத்தின் முகப்பில் ''மலாயா உரும்பிராயர் சங்க மண்டபம்'' எனப் பொறிக்கப்பட்டிருப்பது கல்லூரி சமூகத்துக்கும் கல்லூரிக்கும் உள்ள ஈடுபாட்டை எடுத்து இயம்புகின்றது. இந்தக் கட்டடம் குமாரசுவாமி அதிபராக இருந்த காலப்பகுதியில் (1920-1923) நிறுவப்பட்டது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு விழா மண்டபம் கல்லூரியின் பழைய மாணவனும் லண்டனில் வசிப்பவருமான க.தர்மகுலசிங்கம் அவர்களினால் 2 கோடி ரூபா செலவில் 140 அடி நீளம் கொண்ட 2 மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படுகின்றது. 2011ஏப்ரல் மாதம் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது திறந்து வைக்க வேண்டும் என்ற நோக்குடன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

க.தர்மகுலசிங்கம் போன்றவர்களின் உயர்வான பங்கு பணி பாராட்டப்பட வேண்டியது. தனிமனிதனாக மாடிக்கட்டடத்தை நிர்மாணிக்கும் முயற்சி பாடசாலைச் சமூகத்துக்கும் - பாடசாலை நிர்வாகத்துக்கும் உள்ள இடையறாத தொடர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றது. 1965-1968 காலப்பகுதியில் 1500 மாணவர் வரையில் கற்ற இந்தக் கல்லூரி இடைக்காலத்தில் நலிவடைந்து போனாலும் மீண்டும் உயரும் என்பதற்கான சமிக்ஞைகள் இல்லாமல் இல்லை.

கல்லூரியின் வளர்ச்சியில் சீதாராமன், ஸ்ரீநிவாசன் அதிபர்களின் காலம் 'பொற்காலமாக' கருதப்படுகின்றது. 'இந்தியாவில் இருந்து வருகை தந்து அதிபர் பணி ஆற்றிதோடு பாடசாலைச் சூழலில் தங்கியிருந்து 24 மணி நேரமும் பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும் இணைப்பாடவிதான முன்னெடுப்புக்களிலும் முழுமையான ஈடுபாட்டுடன் முயன்றதோடு தமது காலத்தில் பல முத்திரைகளை பதித்துச் சென்றதாக' பாடசாலைச் சமூகம் இன்றும் நினைவு கூருகின்றது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுத்தலில் முறைகேடு குறித்து கைதான 400 பேர் மீது வழக்கு

கொழும்பு, ஒக.5

நிறுத்தல் அளத்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது சுமார் 400 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு 274 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, புத்தளம், கண்டி, பதுளை, திருகோணமலை, அம்பாறை, மாத்தறை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## குருத்துவ பணியின் வெள்ளிவிழா நிகழ்வு

கொழும்புத்துறை, ஒக.5

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளாரின் குருத்துவப் பணியின் 25ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

புனித மரியன்னை பேராலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பத்திரிசியார் கல்விச் சமூகமும் குருக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வெள்ளிவிழா நிகழ்வில் பத்திரிசியார் மண்டபத்தில் பொது வரவேற்பும் விருந்துபசார நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

கடந்த காலங்களில் பல்வேறு பணித்தளங்களிலும், கல்விப் புலங்களிலும் அர்ப்பணிப்புடன் அடிகளார் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-135)


மஹஜன சம்பத
Mahajana Sampatha

03.08.2010

சீட்டிழுப்பு இல. 2274

W 8 3 4 6 8 9

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W | 8 | 3 | 4 | 6 | 8 | 9 | ரூபா.15,341,860/= | |
| 1 பரிசு | | 8 | 3 | 4 | 6 | 8 | 9 | ரூபா. 2,000,000/= | 01 |
| 2 பரிசு | | | 3 | 4 | 6 | 8 | 9 | ரூபா. 100,000/= | 13 |
| 3 பரிசு | | | | 4 | 6 | 8 | 9 | ரூபா. 10,000/= | 130 |
| 4 பரிசு | | | | | 6 | 8 | 9 | ரூபா. 1,000/= | 1359 |
| 5 பரிசு | | | | | | 8 | 9 | ரூபா. 100/= | 13473 |
| 6 பரிசு | | | | | | | 9 | ரூபா. 20/= | 124141 |
| 7 பரிசு | | 8 | 3 | 4 | 6 | 8 | | ரூபா. 10,000/= | 12 |
| 8 பரிசு | | 8 | 3 | 4 | 6 | | | ரூபா. 1,000/= | 130 |
| 9 பரிசு | | 8 | 3 | 4 | | | | ரூபா. 100/= | 1339 |
| 10 பரிசு | | 8 | 3 | | | | | ரூபா. 50/= | 13267 |
| 11 பரிசு | W | | | | | | | ரூபா. 20/= | 53516 |

Rs. 12,110,690.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 16,659,888.00

தேசிய லொத்தர் சபை


## இறை உறை அறை

நாவால் பேசுகிறீர்கள்; கண்ணால் பார்க்கிறீர்கள்; மூளையினால் திட்டமிடுகிறீர்கள். அப்படிப் பேசுவதும் பார்ப்பதும்திட்டமிடுவதும் யார்? எல்லா மனிதர்களின் பொருள்களின் மூலமாகவும் உள்ளாகவும் மின்சாரத்தைப் போல் இயங்குவது இறைவனின் பேரறிவு ஒன்றுதான். நீங்கள் பஜனையின் ஆழ்ந்திருக்கும்போது உங்களை இயக்குவது யார்? என்பதைக் கவனியுங்கள். ராகங்களின் அமைப்புக்கேற்றவாறு உங்கள் நாக்கு சொற்களை உச்சரிக்கின்றது. கைகள் தாளத்திற்கேற்ப வேகமாக அல்லது மெதுவாகத் தட்டுகின்றன; பாட்டின் உணர்வுகளுக்கேற்ப உங்கள் தலை அசைகிறது. அந்தப் பாட்டு ஒட்டு மொத்தமாக உருவாக்கிய பிரமாதமான இசையின் இனிமையில் உங்கள் மனம் அமிழ்ந்து ஆனந்தம் அனுபவிக்கிறது. அதைப் போலவே நடனமாடுபவரும் தனது ஒவ்வொரு அங்கத்தின், தசையின் அசைவால் இசைவும் இனிமையும் ஏற்படச் செய்கிறார். ஆனால் அனைத்து வகையான செயல்களுக்கும் மூல காரணம் யார்? இதயம் எனும் இல்லத்தின் தலைவனான இறைவன் அல்லவா? அவரை அலட்சியப்படுத்தினால், ஒதுக்கி விட்டால் அல்லது மறந்துவிட்டால் உங்களுக்கோ அல்லது உங்களால் மற்றவர்களுக்கோ மகிழ்ச்சியே இருக்காது. நீங்கள் சோம்பேறியான, செயலற்ற தமோகுணம் உடையவர்களாக அல்லது உணர்ச்சிவயப்பட்ட, வெறிபிடித்த ரஜோகுணம் உடையவர்களாக இருக்கிறீர்களே ஒழிய, சுத்தமான, புனிதமான சமத்துவம் மிக்க சத்துவகுணம் உடையவர்களாக இருப்பதில்லை.

எல்லாம் இறைவனே; எல்லா நாமங்களும் வடிவங்களும் அவனுடையனவே. அவர் இல்லாத இடம் இல்லை. இல்லாத காலமும் இல்லை. இடி இறைவனின் செய்தி; மழை அவரது கருணை. இறை எண்ணமில்லாமல் ஒரு நொடிகூடக் கடக்கக்கூடாது. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இயக்குபவர் அவரே என்ற நினைவு உங்களிடம் இருக்கட்டும். இறைவனை வழிபட நீங்கள் உங்கள் அறையில் அவருடைய சிலை அல்லது படத்தை வைத்திருக்கிறீர்கள். அதன் முன் ஒரு விளக்கை ஏற்றுகிறீர்கள். ''விளக்கேற்றி விட்டேன்'' என்று கூறுகிறீர்கள். ஆனால் உண்மையில் விளக்கேற்றியது நீங்களா? எண்ணெய், திரி, விளக்கு மூன்றும் சேர்ந்தால்தான் ஒளி உருவாகும்; அந்த மூன்றையும் அளித்தது யார்? படத்திலுள்ள வடிவத்திற்கு மரியாதை செலுத்தச் செய்தது யார்? விளக்கை வைத்தது, ஏற்றியது, படத்தை வணங்கியது யார்? அனைத்துமே இறைவன், இறைவன், இறைவனே! இதை அறிந்த, உணர்ந்த மனிதனுக்கு எல்லா உயிரும் எல்லாப் பொருளுமே இறைவனே என்பதும் இறைவனைத் தவிர வேறெதுவுமில்லை என்பதும் புரியும்.

*நன்றி: சின்னக்கதா*



சாயி சிந்தனை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை மேற்கில் மீள்குடியேறிய 5ஆயிரம் குடும்பங்கள் அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி அவல நிலையில்!

## நிவாரணம் மட்டும் போதாது வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு கோரிக்கை

மன்னார், ஓக. 05

மாந்தை மேற்குப் பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்கள் அடிப் படை வசதியற்ற நிலையில் வாழ்ந்து வரு வதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்ட நிலையில் அனேகமா னோருக்கு இது வரையில் 16 கூரைத் தகடுகள் 8 இந்திய சீமெந்து பக்கெட் டுக்கள், ஐயாயிரம் முதல் ரூபா 25 ஆயிரம் வரையான பணம் மற்றும் ஆறு மாத உலர் உணவுப் பொதிகள் மட்டுமே வழங்கப் பட்டுள்ளன.

ஆனால் கடற்றொழில், விவசாயம் செய்வதற்கு வேண்டிய வசதிகள் எது வுமே பூரணமாக வழங்கப்படவில்லை. அத் துடன் பல விடயங்களில் சீரான குடி தண்ணீர் விநியோகமும் இல்லை. தற் காலிக வீடுகளே கிடைத்துள்ளன.

அத்துடன் தங்களுக்குரிய கால் நடைகளை விற்றுச் சீவியம் நடத்து வதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள் ளது. அத்துடன் குறிப்பிட்ட சிலருக்கே வீடமைப்புப் பணிகள் முன்னெடுக்கப் பட்டுகின்றன.

மீள்குடியேற்ற வேலைத்திட்டங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு வழங்கப் பட்டுவரும் முன்னுரிமை கூட மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படுவதில்லை யென்ற நிலைப்பாட்டை மாந்தை மேற் குப் பிரிவு கிராம மாதர் அபிவிருத்திச் சங் கங்களின் சமாசம் சுட்டிக்காட்டுவதோடு இவர்களுக்கான வாழ்வாதார வளங்களை உடன் வழங்குமாறு மீள்குடியேற்ற அமைச் சரையும், அரசாங்கத்தையும் கோரி யுள்ளது. (ஐ-80)

# மடுமாதா ஆவணித் திருவிழா திட்டமிட்டபடி நாளை ஆரம்பம்

மன்னார், ஓக. 05

புனித மடுமாதா ஆவணித் திருவிழா திட்டமிட்டபடி நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி திருச் சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் முடிவுறவுள்ளதாக மன்னார் ஆயர் வட்டாரங்கள் தக வல் வெளியிட்டுள்ளன.

சென்ற ஆனி மாதத் திருவிழா இறுதி நாளில் எதிர்வரும் ஆவணித் திருவிழா வரட்சி காரணமாக மூன்று தினங்களே நடைபெறும் என முன்பு வந்த செய்தியில் எவ்வித உண்மையுமில்லையெனவும் வழமை போலவே இம்முறையும் திரு விழா நடைபெறும் எனவும் ஆலய வட் டாரங்கள் அறிவிக்கின்றன.

விழா நடைபெறும் 9 நாள்களிலும் தின மும் திருப்பாடுப் பூசைகள் நடைபெறும். 14 ஆம் திகதி மாலை 6.25 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும். 15 ஆம் திகதி காலை 6மணிக்கும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் திருப் பலிப் பூசையுடன் நிகழ்வுகள் முடிவுறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே விழாவுக்குவரும் பக்த அடி யார்கள் எவ்வித மதுப்பாவனைக்கும் உட் படாமல் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் படி மடு ஆலயப் பரிபாலன சபை வேண் டுகின்றது. (ஐ-80)

# பூநகரி, மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயத்துக்கு புதிய கட்டடம்

பூநகரி, ஓக. 05

பூநகரி, மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய புதிய கட்டட நிர்மாணப் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

யுத்த நடவடிக்கைகளால் ஆலயம் சேதமடைந்ததை அடுத்து புதிய ஆலயம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இந்த ஆலயம் பாஷையூர் பங்குத் தளத்தின் நிர்வாகத்தில் கண்காணிக்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-135)




# மழை காலத்துக்கு முன் கூரை சீர்செய்யப்படாவிட்டால் பளைக் கோட்டப் பாடசாலைகள் இயங்க முடியாதாம்

பளை, ஓக. 05

பளைக் கல்விக் கோட்டத்தை சேர்ந்த பல பாடசாலைகளின் கூரைகள் சீர் செய் யப்படாததன் காரணமாக எதிர்வரும் மாதங் களில் மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படும் எனப் பெற்றோர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பளைப் பகுதியில் மீள்குடியேற்ற நட வடிக்கைகள் நடைபெற்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகள் உடனடியாக ஆரம் பிக்க வேண்டும் என்பதற்காக இராணு வத்தினரால் தற்காலிகமாகச் செய்து கொடுக் கப்பட்ட கூரைகளின் கீழேயே மாண வர்கள் தற்போது இருந்து கல்வி கற்று வரு கின்றனர்.

எதிர்வரும் மழை காலத்திற்கு முன்பாக இக்கூரைகள் உரியவாறு சீர்செய்யப் படாவிடின் பல பாடசாலை மாணவர்கள் வகுப்பறையில் இருந்து கல்வி கற்க முடி யாத நிலை ஏற்படும்.

கிளி/பளை மத்திய கல்லூரி உட்பட கிளி/ தர்மக்கேணி அ.த.க.பா, கிளி/ மாசார் அ.த.க.பா, கிளி/சோரன்பற்று சி.சி.த.க, அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலை மாண வர்களுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தினால் பளை கல்விக் கோட்டப் பாடசாலைகள் மிகவும் கடுமையான சேதத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-432)

# காணிகளைப் பதியுமாறு அறிவுறுத்தல்

பூநகரி, ஓக. 05

பூநகரி பிரதேசத்தில் உள்ள விவசாய காணிகள் அனைத்தையும் பூநகரி கமநல சேவைகள் திணைக்களத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர் கள் அத்திணைக்களத்தால் கேட்கப்பட் டுள்ளனர். (ஐ-420)

# மன்னாரில் டெங்கு ஒழிப்புக்கு ஆளுநர் அதிரடி நடவடிக்கை

## மக்களின் போதிய ஒத்துழைப்பு இல்லாததால்

மன்னார், ஓக. 05

மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கள் பாரிய தோல்வியடைந்துள்ளதால் அதிர டியாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜென ரல்ஜி.ஏ சந்திரசிறி தான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக கடந்த திங் கட்கிழமை மன்னார் செயலகத்தில் கூடிய அவசரக்கூட்டத்தின்போது சில உயர் அதிகாரி களின் பதவிகளைத் தற்காலிக இணைப் பாளர்களுக்கு வழங்கினார்.

இதன் விளைவாக நேற்று முன்தினம் முதல் பல்வேறு அதிரடித் திட்டங்கள் நடை முறைப் படுத்தப்படுகின்றன.

மாவட்டம் முழுவதும் டெங்கு கொல் லும் இரசாயனக் கிருமிநாசினி தெளிக்கும் வேலை நடைபெறுவதற்கான அறிவுறுத் தல்கள் ஒலிபெருக்கி மூலம் விடப்பட்டு வருகின்றன.

இந்த அறிவுறுத்தல்களில் பொதுமக் களின் பூரண ஒத்துழைப்பும் வேண்டப் படுகின்றது.

இதற்கு முன்பதாக கடந்த திங்கட்கிழ மை மாவட்டம் முழுவதும் அரச திணைக் களங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், கல்விப் பணிமனைகள் என்பவற்றில் முழு நாள் பாரிய சிரமதான வேலைகள் இடம்பெற்றன.

இந்த வாரம் மட்டும் மன்னாரில் டெங்கு நோயாளிகளில் ஐவர் மரணமடைந்துள்ளனர். (ஐ-80)

# வீதியை ஆக்கிரமிக்கும் வர்த்தகத்தை உடன் நிறுத்துமாறு அறிவுறுத்து

## இல்லையேல் பொருள்கள் கையகப்படுத்தப்படும் என எச்சரிக்கை

கண்டாவளை, ஓக. 05

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் வீதியை ஆக்கிரமித்து நடத்தும் வியாபார நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு கரைச்சிப் பிரதேசசபை சகல வர்த்தக நிலைய வர்த்தகர்களைக் கோரியுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங் களில் பலர் தமது வியாபார நிலையத் திற்குரிய எல்லையையும் மீறி வீதியின் நடைபாதையை ஆக்கிரமித்து பொருள் களைப் பரப்பி தமது வியாபார நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை உடன டியாக நிறுத்தி வியாபார நிலையங்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்து சிறிதளவேனும் முன்னுக்கு வராமல் தமது வியாபார நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும். இவ் வேண்டுகோளையும் மீறி வியாபார நடவடிக்கை மேற்கொள்வோருக்கு ஆக் கிரமிப்புப் பகுதியில் பரப்பப்பட்டுள்ள பொருள்கள் யாவும் கையகப்படுத்தப்படும் என கரைச்சிப் பிரதேசசபை சகல வர்த்தகர் களையும் அறிவுறுத்தியுள்ளது. (ஐ-432)

# முள்ளிவாய்க்காலில் மீட்கப்பட்டுள்ள சைக்கிள்கள் 175 குடும்பங்களுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன

கிளிநொச்சி, ஓக. 05

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு பழைய சைக்கிள் விநி யோகம் இடம்பெற்றது.

இறுதி யுத்தத்தின் போது பொதுமக்களால் கைவிடப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டி ருந்த பழைய சைக்கிள்களே இவ்வாறு விநி யோகம் செய்யப்பட்டது.

மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மீள் குடியேறிய மக்களில் ஐந்து பேருக்கு மேல் அங்கத்தவர்களைக் கொண்ட 175 குடும் பங்களுக்கே இச்சைக்கிள் விநியோகிக் கப்பட்டது.

இச் சைக்கிள்கள் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளதால் இவற்றை திருத்த பெரு மளவு செலவு ஏற்படும் என இச் சைக்கிள் களைப் பெற்றவர்கள் கூறுகின்றனர்.

750 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக் கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேறி யுள்ள நிலையில் இவ்வாறு 175 குடும் பங்களுக்கு மட்டும் சைக்கிள் விநியோகிக் கப்பட்டுள்ளது.

எனவே ஏனையோருக்கும் இது கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண் டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (ஐ-405)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் பல திட்டங்கள்

புதுக்குடியிருப்பு , ஓக. 05

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அந்தவகையில் பிரதேசசபை தவி சாளர் செபமாலை திசைவீரசிங்கம் தலைமையில் பிரதேசசபை உத்தியோகத் தர்கள் , ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து பேராறு மயானம், பண்டாரவன்னியன் சிலையடி ஆகிய இடங்களில் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தொடர்ந்து பிரதேச சபை எல்லைக்குட் பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே பொதுஅறிவுப் போட்டி, சித்திரப் போட்டி என்பன நடத்தப்பட்டன. இவற்றில் 16 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

டெங்கு தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் மரநடுகை நிகழ்வு என்பன திருமுறிகண்டி, மாங்குளம் மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் பிரதேச சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகி யோர் பங்குபற்றினர்.

பாடசாலை மாணவர்களிடையேயான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றும் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. (ஐ)

# கிளிநொச்சியில் கலப்படமான கள் விற்கப்படுவதாக முறைப்பாடு

கிளிநொச்சி, ஓக. 05

கிளிநொச்சியிலுள்ள கள்ளுத் தவற ணைகள் அனைத்திலும் கலப்படமான கள் விற்கப்படுகின்றது என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு போத்தல் கள்ளை 50 ரூபாவுக்கு விற்கிறார்கள். ஆனால் ஈஸ்ட் ,சீனி எல்லாம் கலந்து தண்ணீர்விட்டு கலந்து தருகி றார்கள். இதனை சீவல் தொழிலாளரோ, விற்பனை செய்பவர்களோ கண்டும் காணாதது போல் நடந்து கொள்கிறார்கள்.

இதைக் கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை எவரும் கவனிப்பதில்லை என்று கள் பாவனையாளர்கள் கூறுகின் றனர்.

ஆனால் மோசமான கள்ளை அருந்தும் பொதுமக்கள் சுகாதாரக் கெடுதல் அடை கின்றார்கள் என்று கூறப்படுகின்றது. (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.07.1993

* உடல் நலம் குன்றிய போர்க் கைதியொருவரை விடுதலை செய்ய புலிகள் முன்வந்துள்ளதால் போர்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக முறிந்து விட்ட பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியுள்ளதாகக் கூறலாம் என பி.பி.ஸி. தனது செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவிப்பு.
* நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தமிழ், முஸ்லிம் கட்சிகள் வெளியேறியுள்ளதைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகளின் முன்னணியும் தெரிவுக் குழுவிலிருந்து விலகத் தயாராகி வருவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

02.07.1993

* உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நேற்று முதல் நாடு முழுவதும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதாக மின்சார சபைத் தலைவர் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு.
* கடந்த சில காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க புதுடில்லியிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துடன் இந்திய அரசு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதாக அறிவிப்பு.

03.07.1993

* பாதுகாப்புச் செலவுக்கும், யுத்தத்தினால் பாதிக்கப்படுவோருக்கான புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்கும் போதிய நிதியை ஒதுக்க வேண்டியுள்ளதால் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வை நிறுத்தியுள்ளதாக அரசு தெரிவிப்பு.
* தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் 80 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகளையும் விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவிப்பு.

04.07.1993

* மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பி விட்டதாக வெளி உலகுக்குக் காட்டிக் கொள்ளும் நோக்கில் அங்குள்ள அனைத்து இடம்பெயர்ந்தோர் முகாம்களையும் மூடி விட அரசு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.
* அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் யுத்தக் கைதிகள் தொடர்பாக ஆரம்பமான பேச்சுக்களை குழப்புவதற்கு சிங்களப் பத்திரிகைகளே திட்டமிட்டுச் செயற்பட்டன என மாதம்பாகம அஸாசிதேரர் குற்றச்சாட்டு.

05.07.1993

* இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார்த் தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 4 பொலிஸார் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.
* கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் முதலாவது விசேட படையணியில் மேலதிகமான துருப்புக்களைச் சேர்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிப்பு.

06.07.1993

* யாழ்.குடாநாட்டில் கரும்புலிகள் தினம் நேற்று உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* தமிழ் மக்களுக்கு எதிராகவே இலங்கை அரசு போர் தொடுத்துள்ளது என் நேற்று வடமராட்சியில் நடைபெற்ற கரும்புலிகள் தினக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

07.07.1993

* விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருக்கும் எமது உறவினர்களை மீட்காமல் நாம் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிச் செல்லப் போவதில்லை என யாழ்ப்பாணம் வந்திருக்கும் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்ததாக பி.பி.ஸி. சிங்கள சேவை தெரிவிப்பு.
* வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதா விடுவதா என்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 3 முதல் 5 மாத காலத்துள் நடத்தக் கூடியதாக இருக்கும் என நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் முப்படைத் தளபதிகள் தெரிவிப்பு.

08.07.1993

* கட்சி மாறுவதை அனுமதிக்கக் கோரும் சட்டமூலம் ஒன்று சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்ணான்டோவினால் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் சிராவஸ்தி விடுதியில் தங்கியுள்ள எம்பிக்கள் அல்லாத அனைவரும் அங்கிருந்து உடனடியாக வெளியேறிவிட வேண்டும் என சபாநாயகர் எம்.எச். முஹம்மது அறிவிப்பு.

09.07.1993

* வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதா, இல்லையா என்பது பற்றி கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை உடனடியாக இப்போது நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்க கருத்துத் தெரிவிப்பு.
* அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவதில்லை என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிப்பு.

10.07.1993

* விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வந்து தங்கி நிற்கும் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் அதற்காக தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.
* ஐ.தே.கட்சியுடன் ஜனநாயக ஐ.தே. முன்னணி கூட்டுச் சேர முன்வருமானால் அம்முன்னணியின் இரு தலைவர்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்படுவர் என ஜனாதிபதி - காமினி திஸநாயக்க ஆகிய இருவர்களிளடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் இணக்கங் காணப்பட்டதாகத் தெரிவிப்பு.

11.07.1993

* யுத்தக் கைதிகளை விடுவிக்கும் விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மீண்டும் ஓர் இணக்க நிலையை உருவாக்க அரசு ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிப்பு.
* ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினர் இரண்டு அணிகளாக பிளவு பட்டிருப்பதாகவும், அதில் ஒரு அணியினர் தம்மை ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி என பெயரிட்டிருப்பதாகவும் தெரிவிப்பு.

12.07.1993

* ஐ.தே.கட்சியும் ஜனநாயக ஐ.தே.முன்னணியும் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.
* ஐ.தே.கவும் ஜனநாயக ஐ.தே.முன்னணியும் இணைந்து கொள்ளுமானால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸநாயக்க வேட்பாளராகப் போட்டியிடுவார் என பி.பி.ஸி செய்தி விமர்சனத்தில் தெரிவிப்பு.

13.07.1993

* யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 39 பொலிஸாரும், சிப்பாய் ஒருவரும், அவர்களைப் பார்க்க வந்த அவர்களது உறவினர்களும் நாளை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவிப்பு.
* புலிகள் இயக்கத்தினர் கொழும்பில் கொலை செய்யவுள்ள அதிமுக்கிய அரசியல்வாதிகள் 5 பேரில் எனது பெயரும் அடங்கியுள்ளது என இராணுவ உளவுப் பிரிவு தமக்கு அறிவித்திருப்பதாக மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா தெரிவிப்பு.

14.07.1993

* நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் படைத் தளபதிகளும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சில நாள்களுக்கு முன் கலந்து பேசியிருப்பதாகத் தெரிவிப்பு.
* தேசிய அரசு ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் சுதந்திரக் கட்சியோ அல்லது பொது மக்கள் முன்னணியோ அதில் பங்கேற்கப் போவதில்லை என எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

15.07.1993

* தொடர்ந்து நடைபெற்று வரும் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு இன்னும் இரு மாதங்களில் முடிவு கட்டப்படும் என மனிதவள அமைச்சர் தயானந்த விக்கிரமசிங்க தெரிவிப்பு.
* ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்காக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பலகோடி ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்களை தென்பகுதி தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு வழங்க அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

# "ஞானச்சுடர்" வெளிவந்துள்ளது

தொண்டைமானாறு, ஓக 05

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான "ஞானச்சுடர்" ஆடி மாத இதழ் வெள்ளிவந்துள்ளது.

வழமைபோல சைவ சமயம்சார் கட்டுரைகளையும், கவிதைகளையும் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள் சிலவற்றின் தகவல்களையும் தாங்கி ஞானசுடர் வெளிவந்துள்ளது.

(9-236)

# விளக்கமளிக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 05

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கான பாடசாலைத் தொகை மதிப்பு படிவம் பூர்த்தி செய்தல் தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம் பெறும்.

அதிபரும் தொகைமதிப்பீடு தொடர்பான ஆசிரியர் ஒருவரும் தவறாது இதில் கலந்துகொள்ள வேண்டும் என கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சித்திரவடிவேல் கேட்டுள்ளார்.

(த-72)

# வலித்துண்டல், கீரிமலை புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழா



"வரலாற்றுப் பெருமைமிக்க தலமான கீரிமலை, வலித்துண்டல் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 08.08.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. ஆலய ஸ்தாபிதத்தின் 160ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்வகையில், இக்கிராம மக்கள் இடம் பெயர்ந்த நிலையிலும் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்றையதினம் காலை 8 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் நடைபெற்று இறுதியில் திருச்சொரூப ஆசீரும் வழங்கப்படும். விழா சிறப்புற, ஆலய மக்களால் யாத்திரிகர்களுக்கு உணவு, குடிநீர் வசதிகள் வழங்கப்படும்.

(101512) பங்குத் தந்தையும், பங்கு மக்களும்

# 2வது பிறந்த நாள் வாழ்த்து

ஜேர்மனியில் வசிக்கும் ஜெயக்குமார் தயாழினி தம்பதியரின்
செல்வப் புதல்வன் **செல்வன் ஜெ.அஸ்வின்**
இன்று (05.08.2010) வியாழக்கிழமை தனது இரண்டாவது பிறந்த நாளை தற்போது வசிக்கும் இல.95, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அஸ்வினை அப்பா, அம்மா, தங்கை (அஸ்மிதா), தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, மாமன்மார், சித்திமார், அத்தைமார், சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் நல்லூர் கந்தனின் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அப்பா (ஜெயக்குமார்)
அம்மா (தயாழினி)




# ஐக்கிய அமெரிக்கா லொத்தர் விசா

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அதிகாரிகளினால் லொத்தரி வீசா (கிரின் காட், Green Card Lottery Visa) நிகழ்ச்சி பற்றிய விளக்கவுரை யாழ்ப்பாணம், வவுனியா, நகரங்களில் நடைபெறவுள்ளது. இலவசமாக எவ்வாறு விண்ணப்பிப்பது பற்றிய விளக்கங்கள் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புடன் வழங்கப்படும். அனைவருக்கும் அனுமதி இலவசம்.

| யாழ்ப்பாணம் | வவுனியா |
|---|---|
| வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். ஆகஸ்ட் 07 2010, பி.ப 04:00 மணி | புதிய கலாசார மண்டபம், வவுனியா. ஆகஸ்ட் 08 2010, காலை 10:30 மணி |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள்–படையினர் நல்லுறவு ருவென்ரி–20; அதிரடியான ஆட்டத்தால் சென்றல் வி.க.வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.5

கே.சி.சி.சி.விளையாட்டுக்கழகத்தைச் சென்றல் விளையாட்டுக்கழக அணி 16 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகமும் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் பொதுமக்கள்–பாதுகாப்புப் படையினர் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்திற்கான ருவென்ரி/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கலிஸ்ரன் 54 ஓட்டங்களையும், ரஜீவ்குமார் 44 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கே.சி.சி.சி.விளையாட்டு கழக அணி வீரர்களான பிரதீபன் 3 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், சுஜிதரன் 4 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், றோபேசன் நான்கு ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்க ளைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் உத்தமன் 35 ஓட்டங்களையும், ராகுலன் 30 ஓட்டங்களையும், நிரோசன் 22 ஓட்டங்களையும், சபானந்தன் 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக் கழக அணிவீரர்களான விமலகாந் 4 ஓவர் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சுபதீசன் நான்கு ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், ரஜீவ்குமார் 4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர். (6-23)

## கரப்பந்தாட்டப் போட்டி

நாவற்குழி,ஓக.5

ஊர்காவற்றுறை, தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தின் 59ஆவது ஆண்டு நிறைவையொட்டி உள்ளூர் கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 'செற்றப்' போட்டிகளில் 18 கழகங்களும் நான்கு பேர் கொண்ட 'ஓவர்கேம்' போட்டியில் 24 கழகங்களும் 6பேர் கொண்ட 'ஓவர்கேம்' போட்டியில் 20 கழகங்களும் பங்குபற்றவுள்ளன. (6-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# மாசிங் சகல துறையிலும் ஜொலிப்பு; மோகனதாஸ் வி.கவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.5

மாசிங்கின் சகல துறை ஆட்டத்தால் மட்டுவில் மோனகதாஸ் விளையாட்டுக் கழக அணி இலகுவான வெற்றியைப் பெற்றது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டு வரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் மாசிங் 25 ஓட்டங்களைப் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் கைதடி மின்ஒளி அணி வீரர் சதீஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

70 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனக் களம் இறங்கிய கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழக அணியினர் 11 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதில் சத்தியா 10 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் மாசிங் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (6-23)

## தகுதிகாண் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான தகுதிகாண் பயிற்சி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

01.01.1993 இற்குப் பின்னர் பிறந்த வீரர்கள் தமது கிரிக்கெட் உபகரணங்களுடன் இதில் கலந்து கொள்ளுமாறு வடமாகாணப் பயிற்றுவிப்பாளர் ரவீந்திர புஸ்பகுமார அறிவித்துள்ளார். (6-23)

# வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஓக.5

வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான தடகளப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம்**

ம.கமலினி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), இ.மிதிலா (வரணி மகா வித்தியாலயம்), எம்.ரஜிதா (வவுனியா இறம்மைப் குளம் மகா வித்தியாலயம்), ம.விஜிதா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

**200 மீற்றர் ஓட்டம்**

ம.கமலினி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), சி.மரியஸ்ரெலா (மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்), இ.தரசுதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.சர்மிகாதேவி (வவுனியா கந்தபுரம் மகா வித்தியாலயம்).

**400 மீற்றர் ஓட்டம்**

இ.யூடிற்ஜாமினி (மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்), ம.கமலினி (வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி), எம்.சர்மிகாதேவி (வவுனியா கந்தபுரம் மகா வித்தியாலயம்), பி.தர்சிகா (இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம்).

**800 மீற்றர் ஓட்டம்**

சி.யூடிற்ஜாமினி (மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்), ச.கஜனி (மீசாலை சைவப்பிரகாச வித்தியாலயம்), ஜே.சுதனலோஜினி (வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்), எம்.சர்மிகாதேவி (வவுனியா கந்தபுரம் மகா வித்தியாலயம்).

**1500 மீற்றர் ஓட்டம்**

ஈ.சாலினி (வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), சி.யூடிற்ஜாமினி (மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்), ச.கஜனி (மீசாலை சைவப்பிரகாச வித்தியாலயம்), பி.நிமலதர்ஷினி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**400 மீற்றர் தடை தாண்டல்**

எஸ்.சிவேலிகுரூஸ் (மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்), ச.சுதர்சினி (வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலம்), இக்னேசியஸ் ஜெரின் கமலிகா (மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்), யோடிலக்சனா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

**உயரம் பாய்தல்**

இ.தரசுதா (கொக்குவில் இந்துக் கல்லூரி 1.34 மீற்றர்), அ.மேரிஜனனி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), கு.அபினா (வடமராட்சி கம்பர் மலை வித்தியாலயம்), எஸ்.சுதாஜினி (வவுனியா இராமநாதன் உள்ளக இடம்பெயர்ந்தோர் நலன்புரிப் பாடசாலை).

**நீளம் பாய்தல்**

சி.மேரிஸ்ரெலா (மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம் 4.71 மீற்றர்), அ.மேரிஜனனி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), வி.நிரோசினி (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), எஸ்.தனுபா (மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்), எஸ்.சுதர்சினி (வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம். (6-86) *(தொடரும்)*

# மாகாண மட்டத் தடகளப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்குப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஓக.05



மாகாண மட்டத் தடகளப் போட்டியில் 11 வயதுப் பிரிவினருக்கான நீளம் பாய்தல், 75 மீற்றர் ஓட்டம் என்பனவற்றில் கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்று சம்பியன் வென்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவியான அபிநயா அருளானந்தசிவம், 13 வயதுப்பிரிவினருக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தையும், நீளம் பாய்தலில் மூன்றாமிடத்தையும் பெற்ற ஆரணி சிவகுமார் ஆகியோரைப் படங்களில் காணலாம். (6-253)



# இரத்த தானத்தை ஊக்குவிக்க கிரிக்கெட்; வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.5

இரத்ததானத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம், சமுதாய மருத்துவத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் மருத்துவபீட மாணவர்களின் 29 ஆவது அணியினர் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளனர்.

வடமராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அணியினருக்கான போட்டிகள் கம்பர்மலை அரசினர் தமிழ்ப் கலவன் பாடசாலை மைதானத்திலும் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அணியினருக்கான போட்டிகள் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (6-23)

# கலைமதி வி.க.உதைபந்தாட்டம்; சென்.அன்ரனிஸ் வி.க.வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.5

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்தவாரம் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (6-23)





செவிப்புலன் வலுவுற்றோர் சங்கங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி [illegible] ஏற்பாட்டில் அண்மையில் கோண்டாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
கிரிக்கெட் ஆட்டத்தின் போது மோதிக்கொள்ளும் இரு அணிகளையும் பங்குபற்றிய வீரர்களுடன் றோட்டறக்ட் கழக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தண்டனைக்குரியவர்களாகக் கருதப்படுவோர் சர்வதேச அமைப்புக்களினால் கௌரவிக்கப்படுகிறார்கள்

## அவசரகாலச் சட்ட நீடிப்பு உரையில் சரா எம்.பி.



கொழும்பு,ஓக.5

இலங்கையில் தண்டனைக்குரியவர்களாக கருதப்படுபவர்கள் சர்வதேச அமைப்புகளால் நேர்மையானவர்களாகவும் துணிச்சலுடனும் கருத்தை வெளிப்படுத்தியவர்களாகவும் கௌரவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஒவ்வொரு மாதமும் இந்த அவசரகாலச்சட்ட நீடிப்புத்தொடர்பான பிரேரணை முன்வைக்கப்படும்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினராகிய நாம் எதிர்ப்புக்குரல் எழுப்பிவருகிறோம். எதிர்த்து வாக்களித்தும் வருகின்றோம். இச்சட்ட நீடிப்பின் நியாயமின்மை தொடர்பாக நாம் எமது கருத்துக்களை முன்வைக்கும்போது பதிலாக தேசிய பாதுகாப்பு என்பதே எங்கள் நியாயங்களின் வலிமையைப் பலவீனப்படுத்தும் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு என்பது தேசத்தின், மக்களின் பாதுகாப்பு என்பதையும் உள்ளடக்கியதே என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இச்சட்டம் நடைமுறையில் எவ்வளவு தூரம் தேசமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது என்பது மீண்டும் மீண்டும் கேள்விக்குள்ளாக்கப்படுவதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

### தொடரும் ஊடக அடக்குமுறை

கடந்த 30ஆம் நாள் அதிகாலையில் வெற்றி எவ்.எம்., சியத்த தொலைக்காட்சி ஆகிய நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்பட்டுத் தீயிடப்பட்டன. இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுப் படுகாயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நாற்புறமும் பாதுகாப்புப் படையினரின் காவலரண் களுக்கு மத்தியில் நடைபெற்றது என்பது இங்கு முக்கியமான விடயமாகும். இவ் வாறான ஓர் இறுக்கமான பாதுகாப்பு நிறைந்த ஒரு பகுதியில் முகமூடி அணிந்த நபர்கள் ஆயுதங்களுடன் வந்து தாக்கிவிட்டு எப்படித் தப்பிச்சென்றனர் என்பது இங்கு பதில் காண முடியாத கேள்வியாக உள்ளது.

இப்படியான சந்தர்ப்பங்களில் அவசரகாலச் சட்டமோ அல்லது இந்நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களோ தேசமக்களைப் பாதுகாக்கின்றனவா அல்லது காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விடும் வன்முறையாளர்களைப் பாதுகாக்கின்றனவா என்ற சந்தேகம் எழுவதில் நியாயமில்லை என்று எவரும் சொல்லிவிடமுடியாது.

இந்த ஊடகங்களின் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் இடம்பெற்ற வன்முறைகளை நாம் தனிஒரு சம்பவமாகப் பார்த்துவிட முடியாது. இது ஊடக சுதந்திரத்தின் கழுத்தை நெரித்து, ஊடகவியலாளர்களைக் கொன்றும் தாக்கியும் அச்சுறுத்தி ஒரு தரப்பினருக்குச் சார்பான கருத்துப் பரம்பலுக்கு மட்டும் களமமைக்கும் ஒரு நீண்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே!

ஊடகத்துறையுடன் நீண்டகால நெருக்கமான தொடர்புடையவன் என்ற வகையிலும் ஒரு நடுநிலை ஊடகத்தின் பொறுப்புவாய்ந்த நிர்வாகி என்ற முறையிலும் ஊடகங்கள் தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் நான் எனது கருத்துக்களை இங்கு முன்வைக்க வேண்டிய கடமையும் உரிமையும் உடையவன் என்பதை நான் தெளிவாக உணர்கிறேன். எனது ஊடகச் செயற்பாடுகளில் உயிர் அச்சுறுத்தல் உட்படப் பலவித நெருக்கடிகளையும் இழப்புக்களையும் சந்தித்தவன் என்ற முறையில் இங்கு எனது கடமை இரட்டிப் பாகிறது.

பிரபல செக் ஊடகவியலாளரான யூலியன் பூசிக் ஜேர்மன் நாசிசவாதிகளால் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட நாளையே உலகம் முழுவதும் ஊடகவியலாளர்கள் தினமாக அனுஷ்டித்து வருகின்றனர். அதேவேளையில் இலங்கையில் கொல்லப்பட்ட, காணாமற்போன ஊடகவியலாளர்களின் தொகையைக் கணக்கிடும்போது அவர்கள் இறந்ததினத்தை ஊடகவியலாளர் தினமாக அனுஷ்டிக்க முடிவுசெய்தால் வருடத்தில் உள்ள ஒவ்வொரு நாளையும் கொண்டாட வேண்டிவருமோ என்ற அச்சம் எழுகிறது.

அவ்வளவு பெருந்தொகையானோர் கொல்லப்பட்ட அநாகரிக ஜனநாயக விரோத நடவடிக்கைகள் இந் நாட்டில் இடம்பெற்றுள்ளன. அதன் காரணமாகவே ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி எல்லையற்ற ஊடகவியலாளர் அமைப்பாலும் ஏனைய பல மனித உரிமைகள் அமைப்புக்களாலும் எமது பெருமைக்குரிய தேசம் படுமோசமானதாக விமர்சிக்கப்படும் ஒரு நிலையும் தோன்றியுள்ளது.

### அடக்குமுறை குறித்த விமர்சனத்தால் அரசுக்குக் கவலையோ, வெட்கமோ இல்லை

இவை தொடர்பாக அரசாங்கமோ ஊடகங்கள் தொடர்பான அமைச்சோ ஒரு சிறிய அளவிலாவது கவலைப்படுவதாக இல்லை-அதற்காக வெட்கப்படுவது கூட இல்லை. மாறாக சர்வாதிகாரத்தனமான மறுத்துரைப்புகள் மூலம் அவர்கள் சர்வதேச அளவில் தங்கள் தரத்தை கீழிறக்கிக் கொள்வதுடன் தங்கள் ஜனநாயக விரோதப் போக்கை மீண்டும் நிரூபித்துக்கொள்கின்றனர்.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பன ஜனநாயகத்தின் பிரதான வெளிப்பாடுகள் ஆகும். எந்தஒரு விடயத்தையும் தட்டிக்கேட்கவோ விமர்சிக்கவோ ஜனநாயகத்தில் ஊடகங்களுக்கு உரிமை உண்டு. அதன் மூலமே நாட்டின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பத்தில் ஊடகங்களின் பங்கே முக்கியமாக அமைகிறது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனின் 'வோட்டர் கேற்' ஊழலை வெளிக்கொண்டு வந்து அவரை பதவியை விட்டு விரட்டுவதில் பத்திரிகைகள் வகித்த பங்கை நாம் அறிவோம்.

மைலாய் படுகொலை உட்பட அமெரிக்கா வியட்நாமில் செய்த அளவற்ற கொடுமைகளை வெளிக்கொண்டு வந்து அம்பலப்படுத்தி அமெரிக்கா வியட்நாமை விட்டு அவமானத்துடன் வெளியேற வேண்டிய நிலையை ஏற்படுத்தியது ஊடகங்கள்தான். இடி அமீனின் கொடுமைகளையும் கம்போடியாவின் மனிதப் புதைகுழிகளையும் உலகின் கண்களுக்குக் கொண்டுவந்தவை ஊடகங்கள்தான்.

இந்தப் புனிதமான பணிகளில் ஏராளமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இன்னும் ஆயிரக்கணக்கானோர் சிறை வாசம் அனுபவிக்கின்றனர். இன்னும் ஒரு பகுதியினர் தம் சொந்த மண்ணை விட்டு நாடு கடந்து வாழ்கின்றனர்.

ஆனால் ஊடகங்களோ, ஊடகவியலாளர்களோ தமது பணியை நிறுத்தவில்லை அவை தொடர்ந்தும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க உறுதியான போராட்டத்தை நடத்தியே வருகின்றன. இவ்வகையில் இலங்கைப் பத்திரிகையாளர்கள் எவருக்கும் குறைந்தவர்கள் அல்லர் என்பதை இச்சபையில் நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நியாயங்களை நிலைநிறுத்தும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் துணிச்சலான பணியில் பலர் கொல்லப்பட்டனர். பலர் காணாமற்போயினர், பலர் சிறைவாசம் அனுபவித்தனர். பலர் உயிரைக்காக்க நாட்டைவிட்டு வெளியேறினர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் நான் இந்த அவசரகாலச் சட்டநீடிப்பு சம்பந்தமான விவாதத்தில் உரையாற்றிக்கொண்டிருக்கிறேன். வெளிப்படையில் எத்தகைய அழகான வர்ணங்கள் பூசப்பட்டாலும் இது ஊடகவியலாளர்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் தங்கள் பணிகளை செய்ய உதவுமா அல்லது ஊடகவியலாளர் மீது அடக்கு முறையைத் தொடரப் பயன்படுமா என்ற கேள்வியை எழுப்புவது தவிர்க்க முடியாமல் உள்ளது.

### கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை நூறை எட்ட சிறு இடைவெளியே

1971 இல் இளம் பத்திரிகையாளர் றிச்சேர்ட் டி சொய்ஸா நாலாம் மாடியில் இருந்து தூக்கி வீசப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடக்கம் இன்று ஊடகவியலாளர் மீது இடம்பெறும் கொலைகளும், வன்முறைகளும் முடிவு பெறாத தொடர்கதைகளாகிவிட்டன. நிமலராஜன் ஜி. நடேசன், சிவராம், லசந்த விக்கிரமதுங்க உட்பட கொல்லப்பட்டவர்களின் பட்டியல் நூறு இலக்கத்தை எட்ட இன்னும் ஒரு சிறு இடைவெளியே உள்ளது. பத்திரிகையாளர்களின் கொலைக் களங்கள் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைப் பிரிவுகள் என ஆரம்பித்து இன்று நடுவீதிகளும், கண்காணாத இரகசிய இடங்களும் என்ற அளவுக்கு வளர்ச்சி பெற்று விட்டன. எனினும் இக்கொலை களுக்குக் காரணமானவர்கள் எனக்கருதப்பட்டவர்கள் கைது செய்யப்படுவதில்லை. அப்படி கைது செய்யப்பட்டாலும் தண்டிக்கப்படுவதில்லை. மேலும் இக்கொலைகள் தொடர்பான சாட்சிகள் பயமுறுத்தப்படுவதும் கடத்தப்படுவதும் சாதாரண மக்கள் சாட்சியமளிப்பதில் இருந்து தவிர்க்கும் நிலைமையையே உருவாக்கியுள்ளது.

ஊடகவியலாளர் நிமலராஜன் கொலைச் சந்தேகநபர்களில் ஒருவர் ஈ.பி.டி.பியின் முக்கிய பிரமுகர் என்று கூறப்பட்டது. அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். பின்பு நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகத் தகவல் வெளியாகியது. ஒரு கொலைக் குற்றச்சாட்டு சந்தேக நபர் தப்பி ஓடுவதற்குப் பின்னால் பலம்வாய்ந்த அரசியல் அதிகார பீடம் இல்லை என்று கூறிவிட முடியுமா?

'லங்கா நியூஸ்' ஆசிரியருக்கு எதிராகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்க முடியுமானால் ஏன் இந்தச் சந்தேக நபரைக் கைது செய்ய 'இன்ரர்போல்' உதவியை நாடவில்லை. அப்படியானால் இந்த நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு ஒரு சட்டமும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளைப் பாவிப்பவர்களுக்கு எதிராக ஒரு சட்டமும் என்ற மரபு பின்பற்றப்படுகின்றதா? 'மௌபிம' பெண் பத்திரிகையாளர் புலிப் பயங்கரவாதி என்ற பெயரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு பல மாதங்களின் பின்பு விடுவிக்கப்பட்டார்.

இவர் மீது எவ்வித வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அவர் இக் கைது தொடர்பாக எதிர்கொண்ட உடல், உள அசௌகரியங்கள் கணக்கில் எடுக்கப்படாமலே விடப்பட்டு விட்டன. மூத்த ஊடகவியலாளர் திசநாயகம் குற்றவாளியாகக் காணப்பட்டு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். பின் அவர் பொது மன்னிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டார். அவர் அமெரிக்கா சென்றபோது பெரும் வரவேற்பளிக்கப்பட்டதுடன் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

அதாவது இலங்கையில் தண்டனைக் குரியவர்களாக கருதப்படுபவர்கள் சர்வதேச அமைப்புகளால் நேர்மையானவர்களாகவும் துணிச்சலுடனும் கருத்தை வெளிப்படுத்தியவர்களாகவும் கௌரவிக்கப்படுகின்றனர்.

### அரச ஊடகத்தின் மீது அமைச்சரே வன்முறையைப் பிரயோகித்துள்ளார்

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தில் ஓர் அமைச்சர் தலைமையில் உட்புகுந்த கூட்டத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர். பணியாளர்களையும் தாக்கினர். இதுவரை யாரும் தண்டிக்கப்படவில்லை. ஒரு அரச ஊடகத்தின் கதி இதுவென்றால் ஏனைய ஊடகங்களின் கதி எவ்வாறு அமையும் என்பதை நான் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. - என்றார்.

(த-6)


பிறந்தநாள் வாழ்த்தும்
சேவைநலன் பாராட்டு
வாழ்த்துக்களும்


(சி-569676)

திரு.தேவராஜன் சுஜிதன்

இலங்கை வங்கியில் 40 வருடங்கள் நற்சேவையாற்றி (04.08.2010) புதன்கிழமை ஓய்வுபெற்ற திரு.தேவராஜன் சுஜிதன் அவர்களுக்கு இன்று எமது பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு தமது ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

உதவிப் பொதுமுகாமையாளரும், ஊழியர்களும், இலங்கை வங்கி, வடபிராந்தியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதிநிதியின் இலங்கை விஜயம் உலக அரங்கை ஏமாற்றும் நடவடிக்கை!

## வைகோ ஆவேசம்



சென்னை,ஓக.5

இலங்கைக்கு இந்தியப் பிரதிநிதியை அனுப்புவது, உலக அரங்கை ஏமாற்றும் நடவடிக்கை. ஏற்கனவே அரச தூதர்களாக அனுப்பப்பட்ட சிவசங்கர் மேனன், நாராயணன் போன்றோர்கள் இலங்கை அரசுக்கு ஆதரவாகத்தான் செயற்பட்டனர். இப்போதும் அதுதான் நடக்கும். இதைச் சொன்னால் பாதுகாப்புச் சட்டத்தை என் மீது தமிழக அரசு ஏவுகிறது. இதன் மூலம் எமது உணர்வுகளை அழிக்க முடியாது.

- இவ்வாறு தமிழகத்தில் பழுத்த அரசியல் வாதியும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ ஆவேசமாகக் குமுறியுள்ளார்.

இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் எனக் கூறி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மீது தொடரப்பட்ட வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டுகள் நேற்றுமுன்தினம் பதிவுசெய்யப்பட்டன.

இந்த வழக்கு விசாரணைக்கு செவ்வாய்க் கிழமை நேரில் ஆஜரான வைகோ, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

சென்னையிலுள்ள ராஜா அண்ணா மலை மன்றத்தில் 'ஈழத்தில் நடப்பது என்ன?' என்ற தலைப்பில் 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி வைகோ பேசினார். அவரது அந்தப் பேச்சு இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் வகையிலும் உள்ளது எனக் கூறி கியூப் பொலிஸார் அவர் மீது வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கில் வைகோ, ம.தி.மு.க வின் அப்போதைய பொருளாளர் கண்ணப்பன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். ஆனால், வைகோவின் மீது மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணை சென்னை நீதி மன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் குற்றச்சாட்டைப் பதிவு செய்வதற்காக ஓகஸ்ட் 3 ஆம் திகதி நேரில் ஆஜராகுமாறு வைகோவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. இதையடுத்து நீதிபதி பூபாலன் முன்னிலையில் வைகோ நீதி மன்றத்தில் செவ்வாய்க்கிழமை நேரில் ஆஜரானார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் வாசிக்கப்பட்டன. நான் பேசியதை மறுக்கவில்லை. ஆனால், குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன் என்று வைகோ நீதிபதியிடம் தெரிவித்தார்.

இதையடுத்து அவர் மீதான குற்றச்சாட்டுகளைப் பதிவுசெய்வதற்கு நீதிபதி பூபாலன் உத்தரவிட்டார். வழக்கு விசாரணை செப்டம்பர் 6 ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த வைகோ மேலும் கூறியவை வருமாறு -

'ஈழத்தில் நடப்பது என்ன' என்ற கூட்டத்தில் நானும், கண்ணப்பனும் பேசினோம். கண்ணப்பன் பேசியதும் குற்றமல்ல. எங்கள் இருவர் மீதும் வழக்குத் தொடர்ந்தாலும், தி.மு.கவில் கண்ணப்பன் சேர்ந்துவிட்டமையால் இந்த வழக்கில் அவர் சேர்க்கப்படவில்லை. ஆனால், எதிர்க்கட்சி என்பதால் என் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் படுகொலையில் இலங்கை ஜனாதிபதி போர்க்குற்றவாளியா என்பது பற்றி விசாரணை நடத்துவதற்கு மூன்று பேர் கொண்ட குழுவை ஐ.நா. செயலர் பான் கீ மூன் நியமித்துள்ளார். இதை எதிர்த்து இலங்கை அரச அமைச்சர் தலைமையில் போராட்டம் நடத்தப்பட்டது. அதையெல்லாம் மத்திய அரசு கண்டிக்கவில்லை. இலங்கையின் போர்க் குற்றத்திற்கு மத்திய அரசும் உடந்தை.

தற்போது இந்திய அரசு சிறப்புப் பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்பப் போகிறதாம். உலக அரங்கை ஏமாற்றும் நடவடிக்கை இது. ஏற்கனவே அரசு தூதுவர்களாக அனுப்பப்பட்ட சிவ்சங்கர் மேனன், நாராயணன் போன்றோர்கள் எல்லாம் இலங்கை அரசுக்கு ஆதரவாகத்தான் செயற்பட்டனர். இப்போதும் அதுதான் நடக்கும். இதைச் சொன்னால் பாதுகாப்புச் சட்டத்தை என் மீதும், சீமான் போன்றோர்கள் மீதும் தமிழக அரசு ஏவுகிறது. இதன் மூலம் எமது உணர்வுகளை அழிக்க முடியாது.

செம்மொழி தமிழ் மாநாட்டால் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். அதிலிருந்து இந்த அரசு மீள முடியாது.

- இப்படி அவர் கூறினார்.

## சீமானின் வழக்கில் ஆறு வாரங்களில் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவு

### உயர்நீதிமன்றம் நேற்று பிறப்பிப்பு

சென்னை,ஓக.5

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமானின் வழக்கில் 6 வாரங்களில் பதிலளிக்குமாறு தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இயக்குநர் சீமான் சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் என கடந்த 12 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். அவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க தமிழக அரசு 16 ஆம் திகதி உத்தரவிட்டது.

இதை எதிர்த்து சீமான் சார்பில் அவரது சகோதரர் ஜேம்ஸ் பீட்டர் சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் நாகப்பன், சிவக்குமார் ஆகியோரது முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, சீமான் சார்பில் மூத்த சட்டத்தரணி நடராஜன் ஆஜராகி வாதாடினார். தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப் பொலிஸ் கமிஷனர் மட்டுமே உத்தரவிட முடியும். ஆனால் சீமானுக்கு கூடுதல் கமிஷனர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சட்டவிரோதத் தடுப்புச் சட்டம் குறித்த அரசு ஆணை காலாவதியாகி விட்டது. எனவே, அரசின் உத்தரவு செல்லாது என வாதிட்டார்.

இதையடுத்து 6 வாரங்களில் தமிழக அரசைப் பதிலளிக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தனர்.

## சீமான் கைதைக் கண்டித்து 'நாம் தமிழர்' உண்ணாவிரதம்

சென்னை,ஓக.5

சீமான் கைதுசெய்யப்பட்டதை கண்டித்து 'நாம் தமிழர்' இயக்க மாற்றுத் திறனாளிகள் அணியினர் சென்னையில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

இலங்கைப் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசினார் என ஈழ ஆதரவாளர் சீமான் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

சீமான் மீது தொடரப்பட்ட பொய் வழக்கைத் திரும்பப் பெறக் கோரியும், அவரை அந்தப் பொய் வழக்கிலிருந்து விடுதலை செய்யக் கோரியும், நாம் தமிழர் இயக்கத்தின் மாற்றுத்திறனாளிகள் அணி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் காயிதே மில்லத் நினைவிடம் அருகில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ் உணர்வாளர்களும், நாம் தமிழர் இயக்கத்தினரும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய - இலங்கை அரசுகளுக்கு எதிராக கண்டனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.


Australia, UK and Canada
போன்ற நாடுகளுக்கான
Migration and Student Visa

தொழில் அதிபரா? வர்த்தகரா? பட்டதாரிகளா?
(Engineers, Doctors, Accountants, IT Digree and Nursing)

மாபெரும் இலவசக் கருத்தரங்கு
காலம்: 2010 ஓகஸ்ட் 7ஆம் திகதி
இடம்:-Cosy Hotel &Restaurant,
No.15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.


முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்..
Jaffna: Mr.M.Selvam - 0774454646/0777849853
82/12A, Chetty Street, Nallur.

வடமராட்சி-0773696904
தென்மராட்சி - 0775143946
Note: உங்கள் சுயவிரைக் கோவையுடன், ஆவணங்களையும் கொண்டு வரவும்.

Student Visa U.K. Min.Qualification O/L

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No,22A, Frankfort Place, Bambalapitiya
Colombo-04, Srilanka.
Tel: 011 2508443/Mob: 0777 849853, 0718246941
Web:www.etbclanka.com E-mail:etbc@etbclanka.com


## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவர்

**கணேசலிங்கம் ரமேஸ்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர் அலுவலகம்,
மணற்குளி,
முல்லைத்தீவு.

கூ.அ.உதவி ஆணையாளரும்
கூட்டுறவு திணைக்கள
உத்தியோகத்தர்களும்.

(சி/569636)

## துயர் பகிர்கின்றோம்



யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட
மூத்த விரிவுரையாளரும்,
கணித புள்ளிவிபரவியற்றுறைத்
தலைவரும் ஆகிய
கலாநிதி சிறீசற்குணராசா
அவர்களின்
அன்புத் தாயார்

**சிவக்கொழுந்து பொன்னம்மா**

அவர்கள் செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் நாம் துயர் பகிரும் காலை அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
விஞ்ஞான ஆசிரியர் சங்கம்


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்
1213 நீலம்
மிதுனம் 05 07 17 23
03-08-2010
ஜக்பொட் பரிசு ரூபா. 4,016,100/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 228,900 | 20/- | 4,578,000/- |
| 2 இலக்கங்கள் | 20,999 | 40/- | 839,960/- |
| 1 இல. + லக்கினம் | 20,807 | 60/- | 1,248,420/- |
| 2 இல. + லக்கினம் | 1,924 | 200/- | 384,800/- |
| 3 இலக்கங்கள் | 580 | 1000/- | 580,000/- |
| 3 இல. + லக்கினம் | 42 | 10,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,016,100/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,651,180/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 620 | | 608,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 273,875 | | 9,259,680/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,038,450/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
கன்னி 37 38 52 54
ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 617 | 500/- | 308,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 700,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 620 | | 608,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.800,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில்:
11.08.1929

மேலுலகில் :
14.08.2001

திதி: ஆடி அபர தசமி
(05.08.2010)

அராலியூர் அமரர்

### சிவஸ்வாமிக் குருக்கள் பரமேஸ்வர சர்மா

(காஸ்யப கோத்திரம்)

அன்புள்ள அப்பா!
எங்களுடன் நீங்கள் இல்லாத ஒன்பது ஆண்டுகள்
ஒன்பது யுகங்கள் போனதுபோல்-
ஒவ்வொரு ஆண்டும் ஆடி வருகின்றபோது
நீங்கள் எம் இல்லம் நாடி வருவது போல்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
அப்பா என்றும் நீங்கள் எங்களுடன்.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யும்

'பரணிவாசம்', கந்தரோடை. (சி-569663) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

Maruthi suzuki alto கார் KC - xxxx, ஓட்டோ 21 - xxxx உடன் விற்பனைக்கு.
T.P. No. 0773822613

## வீடு வாடகைக்குத் தேவை

இணுவில், கோண்டாவில், கொக்குவிலுக்கிடையில் சிறிய குடும்பமொன்று வசிப்பதற்கு வீடு வாடகைக்குத்தேவை.
தொடர்பு: 0771843454, 021 321 7872

## மணமகள் தேவை

74 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 10 பாவமுடைய கடைப்பிறப்பு உயர்வு பெற்ற மணமகன் வந்துள்ளார். அழகான, படித்த மணமகள் தேவை.
கமலக்கண்ணன் திருமணசேவை,
இல. 171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர்.
T.P. 0776070862, 021 4920266

## Taste of Jaffna Restaurant

## வேலைக்கு ஆள்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றுக்கு
1. உணவு பரிமாறுபவர், 2. சமையலறை உதவியாளர்
அனுபவம், தகைமை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு சம்பளம் தீர்மானிக்கப்படும்.
நேர்முகத்தேர்வு 08.08.2010 வரை
முகாமையாளர்.
0719062994, 021 320 7190

## சாவகச்சேரி நகரில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

தென்மராட்சி, ஓக. 5

சாவகச்சேரி நகரசபையினர் எதிர்வரும் 9 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளாக பொது அமைப்புகள், பொது மக்களின் பங்களிப்புடன் நகர்ப் பகுதியில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளவுள்ளனர்.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தை, வடிகால்கள் துப்புரவு, குப்பைகூளங்கள் அகற்றல் போன்ற வற்றை மேற்கொள்ளவுள்ளனர்.

அனைத்துப் பொது அமைப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சிரமதானத்தில் கலந்து கொள்ளுமாறு நகரசபை செயலாளர் செல்வி வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (ஒ-207)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சிவலிங்கம்

(வர்த்தகர், வெள்ளவத்தை குறோசரி, கொழும்பு - 6)



புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் தற்போது 37/1, ஹம்டன் லேன், வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய குமாரசாமி சிவலிங்கம் நேற்று (04.08.2010) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி (வர்த்தகர், யாழ்ப்பாணம்) மற்றும் சின்னப்பிள்ளை (கனடா) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கார்த்திகேசு காலஞ்சென்ற இரத்தினம் தம்பதியரின் மருமகனும் வசந்தகுமாரியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (பொறியியலாளர், லண்டன்), லயனி (ஆசிரியை, சர்வதேசப் பாடசாலை, தெஹிவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் S.K.சண்முகலிங்கம் J.P (அதிபர், யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், வேலணை மத்தியஸ்தர் சபை தவிசாளர்), பங்கையற்செல்வி (இளைப்பாறிய ஆசிரியை, கனடா), யோகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், கனடா), கோகிலபூபதி (கனடா), துரைராசசிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் - கனடா), ரேணுகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரகலா (யாழ்ப்பாணம்), சதாசிவம் (இளைப்பாறிய ஆசிரியர், கனடர), செல்வமலர் (இளைப்பாறிய ஆசிரியை, கனடா), அமிர்தலிங்கம் (இலிகிதர், கமத்தொழில் சேவை நிலையம் - கனடா), சாந்தகலா (கனடா), சுரேந்திரன் (கனடா), நித்தியானந்தன் (வர்த்தகர், யாழ்ப்பாணம்), கிருபானந்தன் (பிரான்ஸ்), சதானந்தன் (சுவிஸ்), தயாளினி (பிரான்ஸ்), யோகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2010) வியாழக்கிழமை கொழும்பு ஜெயரெத்தின மலர்ச்சாலையில் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/1, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு - 6.
T.P. No. 0112 365027

தகவல்: தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், (101528) மைத்துனர்கள்.







எமக்கு வாழ்வு தந்து தன் வாழ்வு முடித்தவரின்

## முதலாம் ஆண்டு நிறைவு நாள்

திதி - அபரபக்க தசமி



மண் மலர்
09.05.1942

விண் மலர்
15.08.2009

முடிவற்ற தேவைகளுக்கு உழைப்பவர் மத்தியில்
தேவையானவற்றை முடிவெடுத்து அடைந்து கொண்டவரே
சாணக்கியமாக வாழ்ந்து வெல்பவர் மத்தியில்
நாணயமாக வாழ்ந்து வென்று காட்டியவரே
ஆடம்பரமாக வாழ பணம் தேடுபவர்கள் மத்தியில்
அமைதியாக வாழ மட்டும் பணம் போதுமென்றவரே
நலிந்த வாழ்வை நலமாக வாழக் கற்றவரே
உமது வாழ்வில் எமக்கு வாழ்வைத் தந்தவரே

அமரர் சங்கர் முத்தையா
(ஸ்தாபகர் அங்குசபாச பிள்ளையார் மரக்காலை)

-குடும்பத்தினர்.
145/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு சிரங்கு, புண் உண்டானால் தாமதியாது வைத்தியசாலைக்குச் செல்லுங்கள்

## நாளடைவில் சிறுநீரகம் பாதிக்கும் அபாயம் உண்டு

யாழ்ப்பாணம்,ஓக.5

உங்கள் குடும்பத்தில் சிறுவர்கள் எவருக்காவது சிரங்கு அல்லது புண் உண்டாகியுள்ளதா? அசட்டை செய்யாதீர்கள். தாமதிக்காதீர்கள். இயன்றயளவு விரைவில் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்று வைத்தியரிடம் காண்பித்துச் சிகிச்சைக்கு உட்படுத்துங்கள்.

சிரங்கு அல்லது புண் சிறுவியாதிதானே என்று நாள் சென்று வைத்தியத்தை நாடாதீர்கள். சிறுவர்களுக்கு உண்டாகும் சிரங்கு, புண் என்பனவற்றுக்கு உடன் ஆஸ்பத்திரியை நாடுங்கள். அவை நாளடைவில் சிறுநீரகப் பாதிப்புக்கு வழிகோலிவிடும்.

சிரங்கு மற்றும் கிருமி தொற்றுதலை கவனியாமல் இருப்பின் அது முதலில் சிறுநீரக அலர்ஜியை அல்லது Nephrities (A.G.N.) ஏற்படுத்தும். பின்னர் அது நாளடைவில் சிறுநீரகத்தையே செயல் இழக்கச் செய்யும் என்று எச்சரிக்கிறார்கள் வைத்திய நிபுணர்கள்.

சிறுவர்கள், சிறுகுழந்தைகளின் உடல் திசுக்கள் மிக மென்மையானவை. புண் அல்லது சிரங்கு ஏற்பட்டால் அவர்களின் உடல் முழுவதும் இலகுவில் பரவல் அடைந்து விடும். சிறுகுழந்தைகள், சிறுவர் களுக்கு இந் நோய்க்கு ஆளாகும் வாய்ப்பு அதிகமாகும்.

இவ்வாறு சிறு குழந்தைகளுக்கு சிறுநீரகம் பாதிக்கப்படும் அபாயம் தோன்றிய சம்பவம் தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. காலில் ஏற்பட்ட சிரங்கு மற்றும் சிறு புண்ணுக்கு உரிய சிகிச்சை பெறாததால் மூன்று குழந்தைகளுக்கு சிறுநீரகம் பாதிக்கப்படும் நிலை தோன்றும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது. குறிப்பிட்ட மூன்று குழந்தைகளும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

சிறுபுண் மற்றும் சிரங்கு என்று அது நாளடைவில் தானாக மாறிவிடும் என்று அலட்சியமாக இருந்தால் அதன் விளைவு சிறுநீரகத்தையே இழக்கவைக்கும் ஆபத்துக்கு வழிகோலும். எனவே சிறுவருக்கு சிறுபுண், சிரங்கு ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைகளில் உரிய சிகிச்சை பெற்று அதை பூரணமாக குணப்படுத்துமாறு வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர்.

(அ-207-319)

## யாழ்.கல்வி வலய ஆசிரியருக்கு நூல்கள்

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.கல்வி வலய ஆசிரியர்களுக்கான சனசமூக தலையீட்டு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய நூல்கள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் விநியோகிக்கப்படும் என்று யாழ்.வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார்.(ஒ-323)

## யாழ்.திறந்த பல்கலை மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.5

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டமாணி மற்றும் விஞ்ஞான அத்திவார கற்கைநெறிகளைப் பயில்வதற்காக யாழ்.பிராந்திய நிலையத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான அறிமுகக் கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் சகல மாணவர்களையும் சமுகமளிக்கும்படி இணைப்பாளர் அறிவித்துள்ளார்.(ஒ)

## மேர்வினின் செயலுக்கும் கட்சிக்கும் தொடர்பில்லை சுதந்திரக் கட்சி விளக்கம்

கொழும்பு,ஓக.5

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு வருகை தரவில்லையென சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டிவைத்தது அமைச்சர் மேர்வின் சில்வாவின் சொந்த நடவடிக்கையாகும். இதற்கும் கட்சிக்கும் எதுவித தொடர்பும் இல்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்தச் செயல் அரசினதோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதோ நிலைப்பாட்டைப் பிரதி பலிக்கவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை மா மரத்தில் கட்டிவைத்தமை மற்றும் 2 பெண்கள் உட்பட 3 உத்தியோகத்தர்களை எச்சரித்தமை காரணமாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதை இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வலியுறுத்தியுள்ளதுடன், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும் ஆராய்கின்றனர்.(ஒ-சி)

## போதனா வைத்தியசாலையில் தட்டுப்பாட்டை நீக்க இரத்ததானம் செய்து யாழ். படையினர் பேருதவி

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.போதனா வைத்திசாலையில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு இராணுவத்தினரால் கடந்த திங்கட்கிழமை இரத்ததானம் வழங்கப்பட்டது.

இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை நீக்குமாறு இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இராணுவத்தின் 51 ஆவது படை அணியினரால் இரத்தானம் செய்யப்பட்டது.

இரத்தானம் வழங்குவதற்கு இணுவில் மக்லியோட் தனியார் வைத்தியசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் 51 ஆவது படைய்ணியின் 513 ஆவது பிரிவின் அதிகாரிகள் உட்பட 63 படையினர் இரத்ததானம் வழங்கினர்.



இரத்ததானம் செய்யுமாறு பொதுமக்களுக்கு பகிரங்க அறிவிப்பு விடுக்கப்பட்ட போதும் அதற்கு போதிய பயன் கிடைக்காதது குறித்து விசனம் தெரிவித்துள்ள இரத்த வங்கி அதிகாரிகள், படையினர் வழங்கிய இரத்தம் பெரும் உதவியாக அமைந்தது என்றும் அதற்காக அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டான வேளையில் முன்னரும் பல தடவைகள் படையினர் இரத்தானம் வழங்கியுள்ளதையும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(ஓ-6)

# பொறுப்பற்ற அமைச்சரின் கீழ்த்தரமான செயல்; மேர்வின் சில்வா மீது சுக சேவை சங்கம் காட்டம்

கொழும்பு,ஓக.5

அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடாவடித்தனத்தைக் கண்டித்து அகில இலங்கை சுகசேவைச் சங்கம், சமுர்த்தி தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களிலிருந்து விலகிக் கொள்ளப் போகின்றன என அறிவித்துள்ளன.

களனி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் கடமையாற்றிய சமுர்த்தி முகவர் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு வருகை தராத காரணத்தால் அவரை மரத்தில் கட்டிவைத்தது அரசின் வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு ஏற்பட்ட அவமானமாகுமென சமுர்த்தி தொழிற்சங்க சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைச்சருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கும்வரை டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளிலிருந்து சமுர்த்தி முகவர்கள் அனைவரும் விலகிக் கொள்கின்றனர் எனச் சமுர்த்தி தொழிற்சங்க சம்மேளனம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை சுகசேவை சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

களனிச் சம்பவம் பொறுப்பற்ற அமைச்சர் ஒருவரின் கீழ்த்தரமான செயலாகும். இதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

டெங்கு நோயால் உயிரிழந்தவர்கள், பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்தவும், டெங்கு நுளம்பை ஒழிக்கவும் அரசிடம் முறையான வேலைத்திட்டம் எதுவும் கிடையாது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையிலிருந்து விலகி அரசு அந்தப் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்துள்ளது. இந்த நிலையில் அமைச்சர்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்வதால் அரச ஊழியர்கள் தமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டு கடமையைச் செய்ய முடியாதுள்ளது. எனவே டெங்கு நோயை ஒழிக்கும் நடவடிக்கையில்பெரும் பொறுப்பை மேற்கொள்ளும் சுகாதார ஊழியர்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளை மரத்தில் கட்டுவதை விட பொறுப்பற்ற வகையில் நடந்து கொள்ளும் அமைச்சர்களையே மரத்தில் கட்டிவைத்துத் தண்டனை வழங்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் இன்னும் ஒருசில தினங்களில் சுகாதார சேவை ஊழியர்களும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் இருந்து விலகிக்கொள்வர் என தொழிற் சங்கம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-சி)

## தென்மராட்சி பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த பின்வரும் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நடத்தப் படவுள்ளன.

இப்பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ரு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

நாளைமறுதினம் சனிக்கிழமை தரம் 11 வகுப்பு ஆசிரியர்களுக்கான வழிகாடலும் ஆலோசனை வழங்கலும் செயலமர்வு வலயக் கல்வி அலுவலகத்திலும் கேத்திர கணித பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளைமறுதினம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மீசாலை வீரசிங்கம் ம.வி. யிலும் -

தரம் 6,7,8 ஆகிய வகுப்புகளின் தமிழ் பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும்

தரம் 1 வகுப்பு ஆசிரியர்களுக்கான சித்திரபாடச் செயலமர்வு எதிர்வரும் 10ஆம் செவ்வாய்க்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்திலும் தரம் 3 வகுப்பு நடன பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தரம் 10,11 வகுப்பு ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 11,12,13ஆதிக திகதிகளில் நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையிலும் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்ரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் சாவக்சேரி மகளிர் கல்லூரியிலும் கணித பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு 20ஆம், 21ஆம் திகதிகளில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார். (த-207)

# குறைந்த வசதிகளைக் கொண்டிருந்தாலும் மக்களுக்கு தரமான சேவையை நூலகங்கள் வழங்க வேண்டும்

### பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை

யாழ்ப்பாணம்,ஓக.5

தென்னிலங்கையில் உள்ள நூலகங்கள் குறைந்த வளங்களைக் கொண்டு எவ்வாறு நிறைந்த சேவையினை வழங்குகின்றனவோ அவ்வாறே நாமும் வாசகர்களுக்குச் சிறப்பான சேவையினை வழங்கும் வகையில் செயற்பட வேண்டும். - இவ்வாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தெரிவித்தார்.

இலங்கை நூலக சங்கப் பொன் விழாவை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கு யாழ்.பொதுசன நூலகத்தில் இடம் பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உள்ளூராட்சி நூலகங்களில் கடமையாற்றும் நூலக[illegible] காலம் அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி வந்துள்ளோம். மூடப்பட்ட சூழலிலேயே எமது செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு வந்திருக்கின்றோம்.

தென்னிலங்கையில் உள்ள நூலகங்கள் குறைந்தவளங்களை கொண்டு எவ்வாறு நிறைந்த சேவையினை வழங்குகின்றனவோ அவ்வாறு நாமும் எமது மக்களுக்கும் சேவையினை வழங்க வேண்டும். அவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து எமது தரத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நூலகர்கள் உயர்ந்த மனப்பாங்கைக் கொண்டிருக்க வேண்டும். அறிவுத்தேடலுக்காக வருபவர்களிடம் பண்பாகப் பழக வேண்டும். ஒரு மாணவனுக்கு ஆசிரியர் எவ்வாறு வழிகாட்டியாக அமைகின்றாரோ அதேபோன்று அறிவுத்தேடல் உள்ள அனைவருக்கும் நூலகர்கள் வழிகாட்டி[illegible]டும் - என்றார். (எ-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பிக்கு சலுகைகள் வழங்கப்படுவது என்பதில் எவ்வித உண்மையுமில்லை

**அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவிப்பு**

புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் கிடையாது என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனை தடுத்து வைத்து அரசு அவரிடமிருந்து பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றது என விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில தரப்பினர் கூறுவதனைப் போன்று நாம் குமரன் பத்மநாதனுக்கு சொகுசு வாழ்க்கை அளிக்கவில்லை.

கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது புலிகளின் தலைவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. தமிழ்ச்செல்வன் போன்றவர்கள் பயணம் செய்ய ஹெலிகொப்டர் வசதி வழங்கப்பட்டது. சமாதான நடவடிக்கை என்ற போர்வையிலேயே இச் சலுகைகள் வழங்கப்பட்டன. அமெரிக்க போன்ற நாடுகளின் நிதி உதவியைக் கொண்டு இயங்கிவரும் சில தரப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றனர். இவ்வாறான சக்திகளுக்கு இடமளிக்கக்கூடாது.

மேற்குலக நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் சந்தர்ப்பம் வழங்கினால் அது நாட்டுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். - இப்படி அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறினார்.

## 200 இலங்கையருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலிலுள்ளோர் அவசர உதவி கோருமிடத்து தமது கடற்படையி னர் உதவுவதற்குத் தயாராகவுள்ளனர் என்று அவர் மேலும் தெரி வித்தார்.

இந்தக் கப்பல் கடந்த மே மாதம் பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் அவதானிக்கப்பட்டது. பின்னர் ஜூலை மாதமளவில் கௌதமாலா கடற்பரப்பில் கண்காணிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தக் கப்பல் எதிர்வரும் 14ஆம் திகதியளவில் கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள விக்டோரியா துறைமுகத்தை நெருங்கும் என எதிர்பார்ப்பதாக 'ஏசியா ட்ரிபியூன்' செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ-11)

## செட்டிகுளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்றில் இது தொடர்பாக நாம் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளோம்.

இந்த மனு தொடர்பாக இன்னும் தீர்ப்புக் கிடைக்கவில்லை. இங்கு சட்டத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நீதிபதிகளின் பற்றாக்குறை காரணம் என்று கூற முடியாது. இந்த விடயம் உயர் நீதிமன்றில் உள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளை 60இல் இருந்து 75 ஆக அதிகரிக்கப்போவதாக நீதி அமைச்சர் இங்கு கூறினார். அவர்கள் 40 இலிருந்து 60 ஆக அதிகரிக்கப்பட்டபோது வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்த முடிந்ததா? நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தால் வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படும் என்று அர்த்தமல்ல.

நீதிமன்றங்களால் தமக்கு நீதி கிடைக்கவில்லை என்று மக்கள் நினைத்தால் அதன் பங்குதாரர்களாக நீதிபதிகளும் மாறவேண்டி வரும்.

தற்போதைய நிலைக்கு ஏற்ப தமிழ் பேசும் நீதிபதிகளை நியமிக்கவேண்டும். தமிழ் மொழியை நன்கு புரிந்துகொள்ளக் கூடிய நீதிபதிகளை நியமிப்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. - என்றார்.

## அனுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி எவ்விதம் கிடைத்ததென்பது குறித்து விசாரணைகளை நடத்தி இதில் மறைந்துள்ள ஊழலை வெளிக்கொணர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-எ)

## போரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

மின்னியல், தச்சு, விவசாயம், கணனி, அழகுக் கலை உள்ளிட்ட பல துறைகளில் அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அவர்களின் நலன்களுக்காக இன்னும் பல விடயங்களில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய இது தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

புலிகளின் அடுத்த தலைவரான கே.பியும் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளாரா என்று தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இந்த முகாம்களில் அவர் தடுத்து வைக்கப்படவில்லை என்று அமைச்சர் பதிலளித்தார். (அ-சி)

## சமுர்த்தி ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர்களும் வேறுபாடின்றி மேற்கொள்ளவேண்டும். சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணியைப் பகிஷ்கரிப்பு செய்வதுடன், அமைச்சரின் இந் நடவடிக்கையினை கண்டிக்கவேண்டும் என்றும் வஹாப் கோரிக்கை விடுத்தார். மக்களுக்காகச் சேவை செய்யும் உத்தியோகத்தரைப் பலர் முன்னிலையில் கேவலப்படுத்திய அமைச்சரின் நடவடிக்கையினை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-சி)

# ஆஸி. மீட்ட கப்பலில் இலங்கையர்கள் இல்லை

கொழும்பு,ஓக.5

அவுஸ்திரேலிய கடற்படையினரால் அண்மையில் மீட்கப்பட்ட படகில் இலங்கையர்கள் எவரும் இருக்கவில்லை என இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இப்படகில் இலங்கையைச் சேர்ந்த சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் இருந்தனர் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இருந்தும் கைதுசெய்யப்பட்டவர்களில் இலங்கையர்கள் எவரும் இருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைத் தடுப்பதற்கு இலங்கையும், ஆஸ்திரேலியாவும் இணைந்து நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றன.

சட்டவிரோத ஆள்கடத்தல்காரர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கைக் கடற்படையினரும், பொலிஸாரும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை அளித்த செவ்வியிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நெருக்கடி நிலைமைகள் எதுவும் கிடையாது எனச் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் சாம் சப்பாரி தெரிவித்துள்ளார்.

எனினும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் மீளப் போராட்டங்களைத் தொடர்வதைத் தடுக்கும் நோக்கிலேயே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்த நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு தீவிரம் காட்டி வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-11)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிதிவெடியை மாணவர்கள் சிலர் அவதானித்தனர்.

இதுதொடர்பாக அதிபர் இராணுவத்தினருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து இராணுவத்தினர் மிதிவெடி அகற்றும் பிரிவினருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதன்பின்னர் பாடசாலைப் பகுதிக்கு விரைந்த மிதிவெடி அகற்றும் பிரிவினர் பாடசாலைக்கு அருகிலுள்ள மதகு அமைந்துள்ள வீதியின் நடுவில் இருந்து இன்னொரு மிதிவெடியையும் கண்டெடுத்தனர். இவ்வாறு பாடசாலைப் பகுதியில் பரவலாக மிதிவெடிகள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து விக்னேஸ்வரா வித்தியாலயப் பகுதி மிதிவெடி அபாயப்பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.

இதனால் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் நேற்றுமுதல் இடைநிறுத்தப்பட்டன. இவ்வாறு பாடசாலை திடீரென மூடப்பட்டதாலும் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்ததாலும் குறித்த பாடசாலையின் மாணவர்களின் கல்விநிலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை மிதிவெடிகள் அனைத்தும் அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரே இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6-10)

## சமுர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுளம்புத் தடுப்பு நடவடிக்கையில் தான் கலந்துகொள்ளாததன் தவறை உணர்ந்து கொண்டதாலும், டெங்கு நோயின் தாக்கத்தை அறிந்துகொண்டதாலும் நாட்டுக்கு உதாரணமாக இருக்கவேண்டும் என்பதற்காகவும் தன்னைத்தானே மரத்தில் கட்டிக்கொண்டார்.

உண்மையில் நான் அவரைக் கட்டி வைக்கவில்லை. ஆனால் நான் அவரைக் கட்டிவைத்தேன் என்று சிலர் இச்சபையில் குற்றஞ்சாட்டுகின்றனர்.

டெங்கு நோயால் இந்நாட்டில் 200இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். 25ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோயால் நான் என் உறவினரைக் கூட இழந்துள்ளேன்.

எனக்கு டெங்கு நோயின் அபாயம் நன்கு தெரியும். இந்நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும். எனது களனிப் பிரதேசத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். அங்கு எந்த இடத்திலும் குப்பை கூழங்களைக் காண முடியாது.

களனியில் சட்டவிரோதக் கடைகள், மதுபானசாலைகள் போன்றவற்றை அகற்றியுள்ளேன். அதேபோல் விபசார விடுதிகளையும் அகற்றியுள்ளேன். இந்த நல்ல காரியங்கள் குற்றச் செயல்களா? எனக் கேட்டார்.

எனினும், நேற்றுமுன்தினம் நடந்த சம்பவங்கள் அனைத்தும் தொலைக் காட்சிகளில் முழுமையாக ஒளிபரப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் பரமேஸ்வரி



மாவிட்டபுரம், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கற்பகுனை, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பரமேஸ்வரி நேற்று (04.08.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் சந்திரகுமாரி, சதீஸ்குமார், சசிகுமார் (கனடா), புவனேஸ்வரி, யசோதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*அம்பலவாணர் வீதி,*
*கற்பகுனை, உடுவில்.*
*தொ.பே.:021 4901573*

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 1965.08.04 பிறப்பு: 1979.08.05



இறப்பு:
16.08.2009



**நவரத்தினம் சிவபுனிதம்**
(வசந்தி)
திதி: 05.08.2010
ஆடி அபரபக்க தசமி

**இராமநாதன் செல்வமூர்த்தி**
(S.R)
திதி: 06.08.2010
ஆடி அபரபக்க ஏகாதசி

ஆண்டு ஒன்று சென்றாலும் எம் இதயத்தின்
வேதனை ஆறிடுமோ! எம் நினைவை விட்டகலாது
உங்கள் முகங்கள் என்றும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்
உம் நினைவுகள்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
PHYSICAL CHEMISTRY
Wed, Fri 5.15 - 6.15 P.M.
ஆரம்பம்: 06.08.2010
ORGANIC
Sat, Sun 5.30 - 6.30 P.M.
INORGANIC
பிரிவு 3
Wed, Fri 3.15 - 4.15 P.M.
By:
அன்பு

தவறிவிட்டது
Samsung hand phone கறுப்பு நிறம் (Touch Screen) ஒன்று பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி வைரவர் கோயிலடியில் 28.07.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே: 077 9235645

NEW EDUCATION WORLD
ANAIPANTHY
ORGANIC
By:
N.VAHEESAN(B.Sc)
ஆரம்பம்:06.08.2010 வெள்ளி 5.30 p.m
விரைவில் மீட்டல் + வினாவிடை
அணுக்கட்டமைப்பில்.....
2012 - இரசாயனக் கணிப்புகள்

A/L 2011
பிரிவுக்கான மாபெரும் தொடர் கருத்தரங்கும் பரீட்சையும்
(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது)
கணக்கீடு
திரு.பாலகஜன்
(H.N.Dip-in-Acc)
ஒவ்வொரு சனியும் ஞாயிறும்
1 - 2.30 மணிவரை
இடம்: BEACON யாழ்.நகர் (பெருமாள் கோயில் அருகில்)
* ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
* அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
ஆரம்பம்: 07.08.2010 சனி மதியம் 1 மணி

DMI யாழ்ப்பாணம்
A/L 2011
புவியியல் —— N.BABU
PAPER CLASS
(சனி, ஞாயிறு - 12 P.M.)
ஆரம்பம் - 08.08.2010 ஞாயிறு 12 P.M.
* புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org